பொருளியல் நோக்கு

மாணவர்களின் பக்கம்
"ஒரு சாத்தியமற்ற திரித்துவம்"

PUBLIC LIBRARY
JAFFNA

2014ஆம் ஆண்டுக்கான
வரவு செலவுத்திட்ட சில தார்ப்பரியங்கள்

இது மக்கள் வங்கியின் ஒரு வெளியீடு

நிகழ்வுக் குறிப்பேடு

மார்கழி 2013

9ஆம் திகதி: சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் சிரேஸ்ட யப்பானிய இராஜதந்திரி யசூசி அகாசி சனாதிபதி மாளிகைக்கு அழைக்கப்பட்டார். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) சிபார்சுகள், ஒட்டுமொத்த நல்லிணக்க செயற்பாடுகள் மற்றும் இலங்கைக்கும் யப்பானுக்கும் இடையிலான பொதுவான இருதரப்பு உறவுகள் உட்பட பல விடயங்கள் சனாதிபதியும் யசூசியும் கலந்துரையாடினார்கள்.

12ஆம் திகதி: சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக நைரோபி, கென்யாவை சென்றடைந்தார்.

சனாதிபதி ராஜபக்ஷ கென்யாவின் 50வது சுதந்திரதின கொண்டாட்டத்தில் விருந்தினராக கலந்து கொண்டார்.

14ஆம் திகதி: நைரோபி அரசமாளிகையில் சனாதிபதி உகுரு கென்யட்ட மற்றும் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியவர்களுக்கு இடையில் இருதரப்பு கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலின் போது கென்யாவின் தலைவருடன் இலங்கையும், வர்த்தகம், பொருளாதார ஒத்துழைப்பு, முதலீடுகள், கல்வி மற்றும் தொழில் நுட்பம் போன்ற விடயங்களில் மேலும் ஒத்துழைப்பினை மேம் படுத்துவதற்கு உடன்பட்டார்கள்.

15ஆம் திகதி: நைரோபி அரசமாளிகையில் நடைபெற்ற எட்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடும் வைபவத்தில் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் சனாதிபதி உகுரு கென்யட்டவும் தலைமை வகித்தார்கள். கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது பின்வரும் விடயங்களினை உள்ளடக்குகிறது. சுற்றுலா, கலாசார ஒத்துழைப்பு, விளையாட்டுத்துறையில் ஒத்துழைப்பு, இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்கள் கொண்டிருப்பவர்களுக்கான விசா விதிவிலக்கு, இருதரப்பு வர்த்தகம், பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, இருதரப்பு நிபுணத்துவ ஆலோசனை மற்றும் ஒருங்கிணைந்த ஆணைக்குழுவினை விருத்தி செய்தல்.

26ஆம் திகதி: கடந்த சில வாரங்களுக்கு மேலாக தென்கிழக்கு பிரேசிலில் பெய்த மழையினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தினைத் தொடர்ந்து 60,000இற்கு மேற்பட்டோர் வீடுகளை இழந்ததுடன் 44 பேர் இறந்ததாக பிரேசில் அதிகாரிகள் கூறினார்கள்.

31ஆம் திகதி: கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கணிப்பிடப்பட்டதற்கிணங்க இலங்கையின் பணவீக்க மானது கடந்த மாதங்களைவிட 2013 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் 4.7 வீதத்தினால் குறிப்பிடத்தக்கஅவு குறைந்திருக்கிறது.

தை 2014

05ஆம் திகதி: இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக சனாதிபதி மஷிந்த ராஜபக்ஷ ஜோர்தான் நாட்டின் அம்மானுக்கு சென்றடைந்தார். சனாதிபதி மஷிந்த ராஜபக்ஷவும் ஜோர்தானின் மாண்புமிகு மன்னர் இரண்டாவது அப்துல்லா அல் குசைன் உடன் அம்மானின் றோயல் ஹஸ்மைட் கோர்ட் இல், 2007 ஆம் ஆண்டின் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உடன் படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுக்குழுவின் முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஒத்துழைப்பு உட்பட இரண்டு நாடுகளுடன் தொடர்புபட்ட பல விடயங்கள் தொடர்பாக கலந்துரை யாடப்பட்டது.

06ஆம் திகதி: இரண்டு நாள் விஜயமாக ஜோர்தானி லிருந்து சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாலஸ்தீனத்தை சென்றடைந்ததுடன் பாலஸ்தீனத்தின் சனாதிபதி டாக்டர் மொஹமட் அப்பாஸ் உடன் ரம்லாவில் உள்ள சனாதிபதி மாளிகையில் இருதரப்பு கலந்துரையாடல் நடைபெற்றது.

பாலஸ்தீன அரசாங்கத்தினால் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் "பாலஸ்தீன் நட்சத்திரம்" என்ற உயர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இது பாலஸ்தீன அரசின் உயரிய விருதாகும்.

07ஆம் திகதி: சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பாலஸ்தீனத்தின் லனிக் சமூகத்தினரின் உறுப்பினர்களை சந்தித்தார். சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பானது இலங்கை, பாலஸ்தீனம் கூட்டுவணிகமன் றத்தினை நிறுவுவதற்கான பொருத்தமான நகர்வாக அமைவதற்கு இது உதவும் என பாலஸ்தீனத்தின் தனியார்துறை ஸ்தாபித்தலுக்கான இணைச் செயலாளர் மசூஜி அவர்கள் நம்பிக்கை வெளியிட்டார்.

08ஆம் திகதி: சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பெத்தலகேமிலிருந்து யெருசலம் சென்றடைந்தார். யெருசலத்தின் பிரதம மந்திரியின் அலுவலகத்தில் இஸ்ரேலின் முதலமைச்சர் பென்சமின் நெட்டன்யாருக்கும் மஷிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற இருதரப்பு கலந்துரையாடலின் போது வணிகம், விவசாயம், மற்றும் நீர் உட்பட பல துறைகளில் இருதரப்பு உறவுகளை விரிவுபடுத்துவதற்கு இலங்கையும் இஸ்ரேலும் உடன்பட்டன.

17ஆம் திகதி: தெற்கு பிலிப்பைன்ஸில் மிண்டானோ தீவில் ஆகஸ்சான் ஆறு பெருக்கெடுத்ததில் ஆற்றங்கரை யோரமாக உள்ள கிராமங்களில் இருந்து ஆகக்குறைந்தது 8000 மக்கள் வெளியேறினார்கள். அத்துடன் மோசமான காலநிலை காரணமாக மரணமடைந்தவர்களின் எண் ணிக்கை 34ஆக அதிகரித்தது.

21ஆம் திகதி: சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று 3 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக மாலைதீவின் சனாதிபதி அப்துல்லா ஜமீன் இலங்கையை வந்தடைந்தார்.

22ஆம் திகதி: சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட மாலைதீவின் ஜனாதிபதி அப்துல்லா ஜமீன் அவர்களும் வணிகம், பொருளாதாரம், வங்கியும் நிதியும், மீன்பிடி, கல்வி, பாதுகாப்பு மற்றும் கடல்சார் மற்றும் கலாசாரம் உட்பட பலதுறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பினை வலுப் படுத்துவதற்கு உடன்பட்டனர்.

பொருளியல் நோக்கு

மலர். 36 இதழ்கள். 09 - 10 மார்கழி.2013 / தை.2014

வெளியீடு :
ஆராய்ச்சித் திணைக்களம்,
மக்கள் வங்கி,
தலைமை அலுவலகம்,
சேர் சிற்றம்பலம்
ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02,
இலங்கை.

ஆலோசனை சபை

காமினி செனரத்,
தலைவர்,
மக்கள் வங்கி.

என். வசந்தகுமார்,
பிரதம நிறைவேற்று அதிகாரி,
பொதுமுகாமையாளர்,
மக்கள் வங்கி.

ரசித்த குணவர்தன,
பிரதி பொது முகாமையாளர்,
கடன் கட்டுப்பாடு மற்றும் இடர்,
மக்கள் வங்கி.

ஆலோசகப் பதிப்பாசிரியர்

கலாநிதி பிரட்ரிக் அபேரத்தின

பல்வேறு கோணங்களிலான அறிக்கைகள், கருத்துக்கள், விடயங்கள் மற்றும் விவாதங்கள் என்பவற்றை முன்வைப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் அறிவையும் ஆர்வத்தையும் தூண்டுவதே பொருளியல் நோக்கு சஞ்சிகையின் குறிக்கோளாகும். மக்கள் வங்கியின் ஒரு சமூக பணித்திட்டமாக இவ் வெளியீடு மேற்கொள்ளப்படுகிறது. எனினும், இச்சஞ்சிகையில் வெளியிடப்படும் கட்டுரைகள் மற்றும் அறிக்கைகள் என்பன, மக்கள் வங்கியின் கருத்துக்களையோ அல்லது அதன் உத்தியோகபூர்வக் கண்ணோட்டத்தையோ பிரதிபலிப்பவை அல்ல. ஆசிரியர்களின் பெயர்களுடன் வெளியிடப்படும் கட்டுரைகள் அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களாகவே உள்ளன. அவர்கள் சார்ந்திருக்கும் நிறுவனங்களின் கருத்துக்களாகக்கூட அமையவில்லை என்பதையும் கவனத்தில் கொள்க. அத்தகைய பரந்த நோக்கிலான கட்டுரைகள், கருத்துக்கள் மற்றும் கண்ணோட்டங்கள் என்பன வரவேற்கப்படுகின்றன. பொருளியல் நோக்கு, இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றது. சந்தா செலுத்துவதன் மூலமோ அல்லது நேரடிக் கொள்வனவின் மூலமோ அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மின்னஞ்சல்:
ecorev@peoplesbank.lk

உள்ளடக்கங்கள்

சிறப்பு கட்டுரைகள்

கலாநிதி.டி.எல்.ஏ.எச். சம்மிக்க 19 இலங்கையில் கட்டமைப்பு ரீதியான வன்முறையினை குறைப்பதற்கு தேயிலை சுற்றுலாத்துறையின் ஆற்றல்

கலாநிதி.டி.அச்சினி எம்.டி.சில்வா 29 உலகலாவிய ஆற்றல்மிக்க மீன்பிடித்துறையில் பெண்களின் வெளிப்பாடுகள்: அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளின் மீன் பிடித்துறையில் பெண்களின் ஈடுபாடும், அதன் தாக்கமும் மற்றும் முக்கியத்துவமும்.

மாணவர்களின் பக்கம்

பேராசிரியர்.டனி அத்தபத்து 34 சாத்தியமற்ற திரித்துவம்

விசேட அறிக்கை

சில பாதீட்டு தாற்பரியங்கள் -2014

நந்தசிரி கீம்பியாஹெட்டி
சரத் கட்டுகுருண்டு 03 ஒரு கண்ணோட்டம் - வரவு செலவுத்திட்டம் -2014

கலாநிதி. எஸ்.பி பிரேமரத்ன
என் பெரேரா
என் டில்ருக்சி 12 இலங்கையில் பெண்கள் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பான பாதீட்டு தாற்பரியங்கள் - 2014

அடுத்த வெளியீடு

- தேயிலை தொழிற்துறை –அண்மைக்கால போக்குகள்

PUBLIC LIBRARY
JAFFNA

அச்சுப்பதிப்பு: மக்கள் வங்கி அச்சிடல் சேவைகள் திணைக்களம்

பாதீடு - 2014 இன் சில சிறப்பம்சங்கள்

அரச வருவாய், செலவு மற்றும் பாதீடு பற்றாக்குறை (2004 – 2014)



* அனுமதிக்கப்பட்ட மதிப்பீடுகள்

அரச வருவாயின் கூறுகள்

(வரி மற்றும் வரி அல்லாதவை)- 2013

(மொத்த வருவாயின் வீதமாக)



அரச செலவினத்தின் பொருளாதார வகைப்படுத்தல் மற்றும் தேசிய கடன் கொடுத்தல் (ரூபா மில்லியனில்)

வகை	2012	2013(a)	2014(a)
நடப்புச்செலவினம்	**1,131,023**	**1,267,390**	**1,328,283**
பொருட்கள் சேவைகள் தொடர்பான செலவினம்	487,833	554,838	591,697
சம்பளங்களும் ஊதியங்களும்	347,747	414,446	410,614
வட்டி கொடுப்பனவுகள்	408,498	444,800	441,035
வெளிநாடு	90,839	85,000	76,000
உள்நாடு	317,659	359,800	365,035
நடப்பு மாற்றீடுகள் மற்றும் உதவித்தொகை	234,692	267,752	295,551
மூலதனச்செலவினங்கள்	**400,082**	**498,179**	**641,123**
மூலதன மாற்றீடுகள்	197,350	297,318	406,697
நிலையான சொத்துக்களை கையகப்படுத்தல்	202,732	209,462	234,426
	-	-8,600	-
கழிக்கப்பட்ட மீள் கொடுப்பனவுகளுக்கான கடன் கொடுத்தல்	25,394	19,375	16,213
மொத்த செலவினம் மற்றும் தேறிய கடன் கொடுப்பனவு	**1,556,498**	**1,784,944**	**1,985,619**

(a) அனுமதிக்கப்பட்ட மதிப்பீடுகள்

அரச நடப்பு செலவினத்தின் கூறுகள் - 2013

(மொத்த செலவினத்தின் வீதமாக)



அரச நிதி

(மொ. உ. உ வீதமாக)



மூலம் : இலங்கை மத்திய வங்கி ஆண்டு அறிக்கை - 2013

ஒரு கண்ணோட்டம் - வரவு செலவுத்திட்டம் 2014

நந்தசிறி கீம்பியாஹெட்டி
சிரேஷ்ட பொருளியல் விரிவுரையாளர்
ருகுணு பல்கலைக்கழகம்

சரத் கட்டுகுருண்டு
சிரேஷ்ட பொருளியல் விரிவுரையாளர்
ருகுணு பல்கலைக்கழகம்

அறிமுகம்

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 9 வது வரவு செலவுத்திட்டமாக இருக்கின்ற 2014 ஆம் ஆண்டுக்கான அரச வரவு செலவுத் திட்டமானது 2013ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. வரவு செலவுத்திட்ட கணிப்பீட்டுக்கு இணங்க நன்கொடை உட்பட மொத்தப் பெறுவனவானது ரூபா. 1,469.5 பில்லியன் ஆகவும் மொத்தச் செலவானது 1,985.6 பில்லியன் ஆகவும் வரவு செலவுத்திட்டத்தின் துண்டுவிழும் தொகை ரூபா 516.1 பில்லியனாக காணப்படுகின்றது. அதற்கிணங்க, 2014 இல் பொது முதலீடுகளை கிட்டத்தட்ட மொத்த உள்ளூர் உற்பத்தியினை 6.7 வீதத்தில் பராமரிப்பதன் நோக்கத்துடன் 2013 இல் அரச வருமானத்தினை மொத்த உள்ளூர் உற்பத்தியின் 13.6 வீதத்தில் இருந்து 14.5 வீதமாக உயர்த்துவதுடன் 2013 இல் மீண்டுவரும் செலவினத்தினை மொத்த உள்ளூர் உற்பத்தியின் 14.1 வீதத்தில் இருந்து 13.4 வீதமாக குறைக்கிறது. 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் பற்றாக் குறை தொகையானது 2013 இல் பதிவாகிய மொத்த உள்ளூர் உற்பத்தியின் 5.8 வீதம் என்ற நிலையில் இருந்து 5.2 வீதமாக குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

இக்கட்டுரையானது வரவு செலவுத்திட்ட மதிப்பீடு, நிதியளிப்பு மார்க்கம் மற்றும் புதிய வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கான கண்ணோட்டமாக அர்ப்பணிக்கப்படுகிறது. ஆகையினால் தேசிய பொருளாதாரம் அல்லது எந்தவொரு குறிப்பிட்ட துறை மீதான முன்மொழிவுகளையும் அதன் தாற்பரியங்கள் தொடர்பாக கருத்துக்கூறுவதை நாம் இச்சந்தர்ப்பத்தில் வேண்டுமென்றே தவிர்க்கின்றோம்.

கோட்பாட்டு ரீதியான பின்னனி

பொருளாதாரமானது நிறைவேலை வாய்ப்பு சமநிலையில் காணப்படுகின்றது என்ற கருத்தமைவுடன் தொன்மைப் பொருளியலாளர்கள் செயற்பட்டனர். நாணயமானது அர்த்தத்தில் **'நடுநிலையானதுடன்'** நாணயத்தின் நிரம்பலானது விலை மட்டத்தில் செல்வாக்கினைச் செலுத்துகின்ற போதிலும் அதன் பொருளாதாரத்தின் மெய்மாறியலியில் செல்வாக்கினைச் செலுத்த முடியாது. சுயாதீன சந்தைப் பொறிமுறையில் சார்ந்திருக்கையில் சுயாதீன சந்தைப் பொறிமுறையில் அரசாங்கத்தின் தலையீடு அவசியமானது என்று பரிந்துரைக்கப்படுவதுடன் பொதுவாக தீங்கிளைக்கக்கூடியது. எவ்வாறாயினும் தொன்மைப் பொருளியலாளர்கள் சந்தை தோல்வியினை சரிசெய்வதற்கு பொருளாதாரத்தின் சமூக நலன்புரித்தன்மைகளை பேணுவதற்கும் அரசாங்கத்தின் பங்களிப்பினை நிராகரிக்கவில்லை. திறள் கேள்வி மற்றும் பொருளாதார ஏற்ற இறக்கத்தின் மூலமாக உற்பத்தி அளவு மற்றும் வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. அரசாங்கத்தின் நிதிக் கொள்கை மூலமாக திரள் கேள்வியினை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இது நிர்வகிக்கப்பட முடியும் என கேனேசியன் (Keynesian) பொருளியலாளர்கள் (1930-60) நம்பினார்கள். 1960 இற்கு பின்னர் மில்டன் பிரீட்மன்(Milton Freedman) இனால் வழிநடத்தப் பட்ட நாணயக்கொள்கையியலாளர்கள் கருத்துப்படி பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் உறுதிப்பாட்டுக்கு பணத்தின் பங்கு மையப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அரச செலவினத்திற்காக அல்ல. எவ்வாறாயினும் உறுதியான பொருளாதாரமானது பொருத்தமான அளவு உழைப்பு, மூலதனம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற மூன்று உந்து விசையின் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டும் என நவ - பழம் பொருளியலாளர்கள் வலியுறுத்தினார்கள். புதிய தொழில்நுட்பமானது கிடைக்கக் கூடியதாக இருக்கின்ற பொழுது வளர்ச்சி சமநிலையை பேணுவதற்காக உழைப்பு மற்றும் மூலதனத்தினை சரிப்படுத்துவது அவசியமாகிறது.

ஒவ்வொரு அரசாங்கத்தினதும் அடையவேண்டியிருக்கிற பிரதான பேரினப் பொருளாதார இலக்குகள்:

1. பொருளாதார வளங்களின் நியாயமான பரம்பலும் முழு வேலைவாய்ப்பளிப்பதும்.
2. பொருளாதார உறுதிப்பாடு.
3. வருவாய் மீள் பங்கீடு
4. பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்.

எந்தவொரு பொருளாதாரத்திலும் அவ்வாறான பேரினப் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு அரசாங்கமானது, கேள்வியின் பக்கமான கொள்கைகள் மற்றும் நிரம்பல் பக்கமாக கொள்கை ஆகிய இரண்டு பிரதான பொருளாதார கொள்கைகளினையும் அடைந்திருக்க வேண்டும். இறைக்கொள்நெறி மற்றும்

நாணயக் கொள் நெறி ஆகிய இரண்டினதும் செல்வாக்கானது பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த கேள்வியில் செல்வாக்கு செலுத் துகிறது. ஆகையினால் இது கேள்வியின் பக்கமான கொள் கைகளாக அறியப்படுகிறது.

முழு வேலைவாய்ப்பளிப்பது, விலை உறுதிப்பாடு, நியாயமான வருவாய் மீள்பங்கீடு மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற பேரினப் பொருளியல் இலக்கு களை அடைவதற்கான அரச செலவினங்களை மற்றும் வரி களை பயன்படுத்துவது இறைக் கொள்நெறியாக இருக்கிறது. இறைகொள்நெறியின் அமுலாக் கலுக்கு அரச பாதீடானது பிரதான கொள்நெறி கருவியாக பயன்ப டுத்தப்படுகிறது. அவ்வழியில் ஒட் டுமொத்த கேள்வியினை தூண்டு வதன் ஊடாக மொத்த பொருளி யல் செயற்பாட்டு மட்டமானது செல்வாக்கு செலுத்தப்படுகிறது.

இறைகொள்நெறியானது நுண் மற் றும் பேரின மட்டங்களில் வேறு பட்ட வகையான பாதைகளின் ஊடாக அதனுடைய கொள்கை களை அடையமுடியும்.

வருவாய் பக்கத்தில், அரசாங்க வரி கொள்கையானது குறைவ ளர்ச்சி ஆதரவை சாதகப்படுத்துகி ன்ற வருவாய் பரம்பலில் சமத்து வமின்மைளை சீராக்குவதற்கு பயன்டுத்தப்பட முடியும். குறிப் பாக மிகசமத்துவமான சமூகத்தை நோக்கிய நேரடி வரியினை உந்து கின்ற பொருளாதாரத்தின் மீது அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. ஆனால் பொருளதா தார வளர்ச்சிக்கு மிகக்குறைவான ஊக்குவிப்புகள் காணப்படுகிறது. மேலும் வரிகள் பயனற்ற தனியார் நுகர்வினை வெகுவாக குறைப்ப தற்கும் மற்றும் பொருளாதாரத் தினுள் அவசியமற்ற பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுக்கொண் டிருப்பதனை தடுப்பதற்கும் பயன்படுத்தப்பட முடியும்.

அட்டவணை 1: நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு – 2014 அமைச்சு ரீதியான முதல் இருபது ஒதுக்கீடுகள்

	அமைச்சு	மீண்டுவரும் ரூபா மில்லியனில்	மூலதனம் ரூபா மில்லியனில்	மொத்தம் ரூபா மில்லியனில்
1	நிதி மற்றும் திட்டமிடல் (கடன் சேவை உட்பட)	4,83,618	6,36,274	11,19,892
2	பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி	2,10,674	45,358	2,56,032
3	பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள்	1,66,034	4,500	1,70,534
4	உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள்	1,14,191	39,252	1,53,443
5	பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் கட்டுமானங்கள்	229	1,44,770	1,44,999
6	சுகாதாரம்	95,727	37,500	1,33,227
7	பொருளாதார அபிவிருத்தி	34,675	86,150	1,20,825
8	போக்குவரத்து	20,066	39,298	59,364
9	நீர்ப்பாசன முகாமைத்துவம்	3,756	51,491	55,247
10	சட்டம் மற்றும் ஒழுங்கு	47,748	6,565	54,313
11	விவசாயம்	41,641	2,970	44,611
12	கல்வி	26,913	13,135	40,048
13	நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு	202	35,200	35,402
14	உயர்கல்வி	19,563	13,244	32,807
15	வலு மற்றும் சக்தி	199	23,542	23,741
16	மேன்மைதகு ஜனாதிபதி, பிரதம மந்திரி, மேல்நீதிமன்ற நீதிபதிகள் போன்றன.	10,590	6,276	16,866
17	சிவில் விமான போக்குவரத்து	171	13,508	13,679
18	இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி	5,120	6,100	11,220
19	அஞ்சல் சேவைகள்	9,012	350	9,362
20	வெளிவிவகாரங்கள்	8,300	1,000	9,300

ஆதாரம்: புள்ளிவிபர பின்னிணைப்பு 97 - மத்திய வங்கி வருடாந்த அறிக்கை - 2013

செலவின பக்கத்தில், நன்கு வடிவமைக்கப்பட்ட செலவின கொள்கை நீண்டகால வளர்ச்சி யின் மீது செல்வாக்கினை செலுத் துகிறது. குறிப்பாக கல்வித்துறை யின் மீதான அதிகரித்த செலவு, சுகாதாரம், பௌதீக உட்கட்ட மைப்பு மற்றும் ஆராய்ச்சியும் அபி விருத்தியும் நீண்டகால வளர்ச்சி யினை மேலுயர்த்த முடியும். உயர் வளர்சியானது பதிலுக்கு மனித மூலதன உருவாக்கத்தின் மீது செலவினம் செய்வதற்கும் மேலும் பொருதாதாரத்தின் வளர்ச்சி வேகத்தினை வலுவூட்டுவதற்கும் பாரிய அளவிலான வளங்களை உருவாக்குகிறது.

வளர்ச்சியின் மீதான தாக்கங்க ளுக்கு அப்பால், பொதுச்செலவின மானது மனித அபிவிருத்தி வெளிப்பாடுகளின் நேரடித்தாக் கங்களினையும் கொண்டிருக்க முடியும். குறிப்பாக சுகாதாரம் மற்றும் கல்வி மீதான செலவின மானது அவ்விடயமாக செலவின அளவினை மட்டுமல்ல இச்செல வினங்களினை வினைத்திறனான முறையிலும் மற்றும் வறியவர் களை எவ்வாறாக நல்லமுறையில் இலக்குவைக்கிறது என்பதையும் கவனத்திற்கொள்ளப்படுகிறது. மிக வும் முக்கியமாக, இறைகொள் நெறி ஒட்டுமொத்த கேள்வியினை யும் தேங்கிநிற்கும் பொருளாதாரத்

தின் அதிகரித்த வளர்ச்சியின் வெளியீட்டினையும் வேலைவாய்ப் பினையும் பெறுவதற்கு தூண்டுவ தற்காக பயன்படுத்தப்பட முடியும்.

அட்டணை 2: அமைச்சு ரீதியான செலவினம் 2012-2013

செலவினப்படுத்தப்படாத பெறுமதி மொத்த செலவின் ஒதுக்கீட்டின் வீதமாக

		2012	2013
1	கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு	60.90%	52.80%
2	இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சு	30.70%	53.40%
3	சுற்றாடல் அமைச்சு	53.40%	36.70%
4	கல்வி அமைச்சு	29.30%	12.40%
5	உயர் கல்வி அமைச்சு	38.30%	30.70%
6	அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி	90.90%	20.10%
7	கலாசார அலுவல்கள் அமைச்சு	40.60%	24.50%
8	தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு	54.50%	35.10%
9	இடர் முகாமைத்துவ அமைச்சு	35.00%	12.40%
10	கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சு	65.00%	31.40%
11	மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு	49.00%	22.00%
12	விளையாட்டுத்துறை அமைச்சு	43.20%	19.60%
13	சுதேச மருத்துவ அமைச்சு	47.90%	66.00%
14	தேசிய மரபுரிமைகள் அமைச்சு	41.80%	53.90%

ஆதாரம்: புள்ளிவிபர பிண்ணினைப்பு 97 - மத்திய வங்கி வருடாந்த அறிக்கை - 2012 மற்றும் 2013

எவ்வாறாயினும் அதிகரிக்கின்ற அங்கீகரிப்பு, சில சந்தர்ப்பங்க ளில், இறைகொள்நெறி பொருளா தார செயற்பாடுகளில் அதன் அவசியப்பட்ட வெளிப்பாட்டினை கொண்டிருக்கமுடியாமல் இருக்கக் கூடும். அவ்வாறான ஒருநிலைமை பொதுக்கடனின் மட்டமானது உயர் வாகவும் நிலையற்றதாகவும் உள் ளபோது ஏற்படக்கூடும். அர சாங்கமானது அதன் கடனினை சீராக்குவதற்கான இயலுமையினை கொண்டிராததன் நிமித்தம் பொரு ளாதார நெருக்கடியின் ஆபத் தினை அதிகரிக்கின்ற பாதீட்டு பற்றாக்குறை எப்பொழுதும் வெளிப்படுத்தப்படுகிறது. இது முக்கியமான சமூகநலன்புரி செல வினத்தினை கசக்கிப்பிழியும் அள வுக்கு வட்டி கொடுப்பனவினை அதிகரிக்கக்கூடும். அதிக வெளி நாட்டு வளங்களினை பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற நாடுகளும், உள் நாட்டு பொருளாதாரத்தினுள் அவ் வளங்களினை உள்வாங்குவதற்கு பற்றாக்குறையான செயல்திறனு டன் இணைக்கப்பட்ட பாதகமான பேரினப்பொருளாதார நிலைமை கள் காரணமாக விரிவாக்கப்பட்ட பாதீடு உயர் பற்றாக்குறைக்கு இட்டுச்செல்கிறது. நிதியளிப்பு பக் கத்தில், பொதுவாக வெளிநாட்டு கடன்கள் முதலீடு மற்றும் அதன் பாதகமாக இருக்கக்கூடிய விளை வுக்கு அப்பால் குறிப்பிட்ட இலக்கு மட்டத்திற்கான வளர்ச்சி வரை சாதகமான தாக்கத்தினை கொண்டுள்ளன. உள்ளூர் குடியி ருப்பாளர்கள் கொண்டிருக்கின்ற கடன்கள் உட்பட கடன் மீதான வட்டி கொடுப்பனவானது அரசாங் கத்தினால் உற்பத்தி செலவினத் தின் மீது குறிப்பிடத்தக்களவு நெருக்கடியினை கொண்டுள்ளது. மேலும், பாதீட்டு பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கு பெற்றுக்கொள் கின்ற அதிகரித்த அரசகடன்கள், வட்டி வீதங்களினை உயர்த்த கூடும். மேலும் முதலீட்டாளர்க ளுக்கு கிடைக்கக்கூடிய பணத் தின் அளவு குறையக்கூடும் அத னூடாக தனியார் துறையினரின் முதலீடு ஊக்கங்கெடக்கூடும். இது அரச செலவினத்தின் *"வெளியகற் றல் விளைவு"* என கூறப்படுகிறது.

அரச பாதீட்டு அறிக்கையானது அனுமதிக்காக பாராளுமன்றத் திற்கு நிதி அமைச்சரினால் முன் வைக்கப்படுகிற அடுத்த நிதி ஆண்டுக்கான அரசாங்கத்தின் வருவாய் மற்றும் செலவினங் களை முன்வைக்கின்ற அரச ஆவணமாக இருக்கிறது. பாதீடா னது நாட்டின் வருடாந்த நிதி அறிக்கையாகவும் அறியப்படுகி றது. இந்த ஆவணமானது எதிர் வரும் நிதி ஆண்டுக்கான எதிர் பார்க்கப்பட்ட அரசாங்கத்தின் வரு வாய்கள் மற்றும் அரசாங்கத்தின் செலவினங்களை மதிப்பிடுகிறது. அமைச்சுக்களுக்கு மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்பட இருக்கும் செலவினங்களை தெளி வாக பாராளுமன்றத்தில் விவா தத்திற்கு வைக்கின்ற பாதீட்டு முறியானது பாதீட்டின் முதலாவது வாசிப்பு என அழைக்கப்படுகிறது. பாதீட்டின் இரண்டாவது வாசிப்பு என அழைக்கப்படுவது சாதாரண மாக பாதீட்டு உரையின் ஒரு மாதத்திற்கு பின்னர் செய்யப்படு கிறது.

பாதீட்டு முறி - 2014

பாதீட்டின் முதலாவது வாசிப்பு என அழைக்கப்படுகிற 2014ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முறியானது 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி சமர்ப்பிக் கப்பட்டது. 2014ஆம் ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த அரச செலவினம் ரூபா.1,542 பில்லிய னாகும். அமைச்சுரீதியான முதல் 20 ஒதுக்கீடுகளும் மேலே அட்ட வணையில் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்து கடன் வழங்கும் சேவையை உள்ளடக்கிய பெரிய ஒதுக்கீட்டினைக் கொண்ட நிதி அமைச்சுக்கு அடுத்ததாக அதிக ஒதுக்கீடாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு ரூபா.256 பில்லியன் ஒதுக்கப் பட்டிருக்கிறது. 2014ஆம் ஆண்டின் அமைச்சுகளுக்கு முக்கிய செல வின அளவுகளாக ரூபா.93 பில்

PUBLIC LIBRARY
JAFFNA

லியனாக சுகாதாரதிற்கும் ரூபா.133 பில்லியனாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கும் இருந்த வேளை கடந்த வருடம் (2013) பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கும் ரூபா.121 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கமானது தேசிய பாதீட்டின் ஊடாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, பொதுநிர்வாக அமைச்சு, உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சு, சுகாதார அமைச்சு, நிதி அமைச்சு, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் கட்டுமான அமைச்சு மற்றும் பொருளாதார அமைச்சு போன்ற 7 அமைச்சுக்ளுக்கு மட்டும் 80 வீதத்திற்கு மேலாக செலவிட திட்டமிடுகிறது என்பது இங்கு கவனிக்கத்தக்கது டன் ஏனைய 52 அமைச்சுகளுக்கும் மீதியாக இருக்கின்ற 20 வீதமானதில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பாதீட்டின் பங்கு காணப்படுகிறது. மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையே இடைவெளி ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு பெரிதாக காணப்படுவது கடந்தகால சான்றாக இருப்பதனால் அமைச்சுகளின் மூலதன ஒதுக்கங்கள் தொடர்பாக முன்கூட்டியே கருத்துரைப்பது தற்பொழுது பொருத்தமற்றதாக காணப்படுகிறது. அமைச்சு மட்டத்தில் சரியான திட்டமிடல் இன்மையால் இந்நிலை ஏற்பட்டிருக்கக்கூடும் அல்லது திறைசேரியினால் உறுதியளிக்கப்பட்டதற்கு இணங்க நிதியானது விடுவிக்கப்படாதமையினால் ஆகும். குறிப்பிட்ட அமைச்சுகள் அவர்களுக்கான மொத்த அளவினையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை அதே நேரம் சில அமைச்சுகள் பெற வேண்டியதிலும் பார்க்க அதிகளவினை பெற்றுக்கொண்டமை அவதானிக்க முடிந்தது. எந்தவொரு அமைச்சினாலும் மொத்த ஒதுக்கீட்டின் செலவிடப்படாத அளவு குறைசெலவினம் என அழைக்கப்படுகிறது. கடந்த இரண்டு வருடங்களில் சில தெரிவு செய்யப்பட்ட அமைச்சுகளின் குறை செலவினத்தின் வீதமானது மேலே அட்டவணை 2 இல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மறை வான காரணங்கள் இருந்த போதிலும், ஆரம்ப மதிப்பீடுகளில் இருந்த பாரிய வேறுபாடு சந்தேகத்திற்கு இடமின்றி முக்கியத்துவத்தினையும் வெறும் நிதி ஒதுக்கீட்டின் பட்டியலாக பாதீட்டு முறியின் நம்பகத்தன்மை தடுக்கப்படுகிறது. மேலும் தேசிய திட்டமிடல் வேலைகளுக்கு பதிலாக அரசியல் ரீதியாக உந்தப்பட்ட நோக்கங்களை நோக்கிய அரசாங்கத்தின் துண்டு துண்டான அணுகுமுறையை குறிக்கிறது. உதாரணமாக அரசாங்கமானது 2013ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டத்திற்கான (CHOGM) செலவின ஒதுக்கீடாக எந்வொரு பாதீட்டு ஒதுக்கத்தின் இணைப்பினையும் கொண்டிருக்கவில்லை. சில ஏனைய அமைச்சுகளுக்கு ஒதுக் கப்பட்டிருந்த நிதியின் பகுதியினை கைப்பற்றிக் கொண்டிருந்ததை அரசாங்கம் செய்ததுடன் ரூபா 381 மில்லியனை வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சின் ஊடாக மேலதிகமாக செலவழித்துக்கொண்டிருந்தது. இக்குறிப்பிட்ட அமைச்சின் 2013ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் ஒதுக்கீட்டின் 98.1 வீதம் மேலதிகமாகவும் மூலதன ஒதுக்கீட்டின் 82.2 வீதம் மேலதிகமாகவும் செலவழித்திருந்ததை, பொது நிதியினை தன்னிச்சையான தவறான முகாமை செய்ததாக நாங்கள் உய்த்துணர்கின்றோம் என மத்தியவங்கி அதன் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. அட்டவணை 2 இல் பட்டியலிடப்பட்ட அமைச்சுகள் குறைசெலவின அலகுகளுக்கான சில உதாரணங்களாக இருக்கின்றன.

அதற்கு மேலும், 2014ஆம் ஆண்டுக்கான அரசாங்க கடன் வாங்கல்கள் வரையறை ரூபா. 1,100 பில்லியனாக பாதீட்டு முறி அமைந்திருந்தது. இது 2013ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முறி ரூபா 1,295 இல் இருந்து 15 வீதம் குறைவாகும். அறிந்த உண்மைகளில், அரசாங்க பாதீட்டு பற்றாக்குறை கடன் மீள் கொடுப்பனவுக்காக சேர்க்கப்பட்டபொழுது ரூ 1,200 பில்லியனை விஞ்சும். பாதீட்டு முறியில் தொகுக்கப்பட்டிருந்த கடன் வாங்கும் எல்லை முற்றுமுழுதாக யதார்த்தமற்றது. இந்த எல்லையானது ஆறு வாரங்களின் பின்னர் பாராளுமன்றத்தில் அதிகரிக்கபட்டபொழுது இது நிரூபிக்கப்பட்டது.

வரவு - செலவுத்திட்டம் 2014 சுருக்கம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 9வது வரவு செலவுத்திட்டமாக இருக்கின்ற 2014ஆம் ஆண்டுக்கான அரச வரவு செலவுத் திட்டமானது 2013ஆம் ஆண்டு கார்த்திகை

அட்டவணை 3 : வரவு செலவுத்திட்ட சுருக்கம் - 2014

		ரூபா. பில்லியன்
(1)	**மொத்த வருமானம் மற்றும் நன்கொடைகள்**	**1,469.50**
a	வருமான வரி	283.3
b	பொருள்கள் சேவைகள் வரி	688.5
c	வெளிநாட்டு வர்த்தக வரி	302.6
d	வரியில்லா வருமானம்	162.8
e	நன்கொடைகள்	32
(2)	**மொத்த செலவு**	**1,985.60**
a	மீண்டுவரும்	1,328.30
b	மூலதனம்	668.5
c	ஏனையவை	-11.1
(3)	**வரவு செலவு திட்ட பற்றாக்குறை**	**516.1**

ஆதாரம் : வரவு செலவு திட்ட உரை - 2014

மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பாதீட்டின் மதிப்பீடுகளுக்கு இணங்க நன்கொடைகள் உட்பட மொத்த பெறுவனவுகள் ரூபா. 1,469.5 பில்லியன், மொத்த

செலவினம் ரூபா.1,985.6 பில்லியன் மேலும் பாதீட்டின் பற்றாக்குறை ரூபா.516.1 பில்லியன். 2014ஆம் ஆண்டின் பாதீட்டுச் சுருக்கம் (அட்டவணை-3) பின்வருமாறு.

இலங்கையின் ஒட்டுமொத்த இறைகொள்நெறி மூலோபாயமான *"இலங்கை: ஆசியாவின் வளர்ந்து வருகின்ற அதிசயம் - மஹிந்த சிந்தனை –எதிர்கால நோக்கு"* என்ற அரசாங்கத்தின் கொள்கைகட்டமைப்பின் மூலம் வழங்கப்பட்ட கொள்கை வழிகாட்டல்களுக்கு இணங்க பரந்த அடிப்படையிலான இடைக்கால அபிவிருத்தியின் நோக்கங்களுக்கு ஆதரவு வழங்குவதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் இடைக்கால அடிப்படையிலான இறைகொள் நெறி மூலோபாயம் இடைக்கால மற்றும் நீண்டகாலத்தில் வளர்ச்சி செயற்பாட்டில் ஆதரவளிப்பதற்கு உகந்த மட்டத்திற்கு பாதீட்டு பற்றாக்குறை மற்றும் பொதுக்கடனை குறைப்பதற்கு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. 2014 - 2016ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான இடைக்கால இறைகட்டமைப்பின் மீது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 வீதத்திற்கு கீழ் பாதீட்டு பற்றாக்குறையினை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. வலியுறுத்துகின்ற மூலோபாயமானது அரச வருமானத்தினை அதிகரித்தலுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கிட்டத்தட்ட 6 - 7 வீதத்தில் உறுதியான பொது முதலீட்டு மட்டத்தினை பராமரிக்கையில் நடப்பு செலவின வளர்ச்சியினை மட்டுப்படுத்துகை கருத்தில் கொள்கிறது (அத்தபத்து, 2013).

2013ஆம் ஆண்டு மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டதின்படி அரசாங்கத்தின் இறைகொள்நெறி மூலோபாயம் நிலைத்திருக்கத்தக்கதும் பிராந்தியரீதியில் சமநிலையான வளர்ச்சியை அடைவதில் இடைக்கால நோக்கத்திற்கு ஆதரவளிக்கையில் இறைபற்றாக்குறையினை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதன் ஊடாக இலக்குவைக்கப்பட்டது. இறைகொள்நெறி மூலோபாயமானது விரைவுபடுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்காக உகந்த சூழ்நிலையினை உருவாக்குகையில் மேலும் பாதீட்டுப் பற்றாக்குறையினை குறைப்பதற்காக 2013 – 2016ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான இடைக்கால பேரின இறைகொள்நெறி கட்டமைப்பின் வழியே உருவாக்கப்பட்டது. ஒப்பீட்டுக்காக 2014ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் சுருக்கமானது 2009 – 2013 ஆம் ஆண்டுக்கான தொடர்புபட்ட பாதீட்டின் பின்வரும் அட்டவணை - 4 இல் முன்வைக்கப்படுகிறது. அட்டவணையின் கீழ்பகுதி பாதீட்டு மதிப்பீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக முன்வைக்கப்படுகின்றன. இதற்கிணங்க, பொது மூலதனங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.7 வீதமாக பேணப்பட்டதுடன், 2013 இல் அரசாங்கத்தின் வருமான அதிகரிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13.6 வீதத்தில் இருந்து 14.5 வீதமாகவும் மற்றும் 2013ஆம் ஆண்டு மீண்டுவரும் செலவினத்தின் குறைவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14.1 வீதத்தில் இருந்து 13.4 வீதமாகவும் 2014ஆம் ஆண்டு இலக்கிடப்பட்டன. 2014ஆம் ஆண்டுக்கான பாதீட்டு பற்றாக்குறை 2013 இல் பதிவாகிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.8 வீதத்தில் இருந்து 5.2 வீதமாக குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

அரச வருமானம்

2013ஆம் ஆண்டு மத்தியவங்கியின் வருடாந்த அறிக்கையில் கரிட்டப்பட்டவாறு, எதிர்கால வருமானத்தின் மீதான வரிக்கான அடித்தளத்தினை பரவலாக்குவதற்கு, வரிவிலக்குகளை யதார்த்தமாக்குதல் மற்றும் சலுகைகள், கையாளுகைக்கான வாய்ப்புக்களினை இழிவளவாக்குதல், செயல்திறனை மேம்படுத்தல் மற்றும் வரிமுறை மையினை எளிதாக்குதல் போன்ற வரி மறுசீரமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இது அரச வருமானத்தினை மொத்த உள்ளூர் உற்பத்தியின் வீதமாக அதிகரிப்பதற்கு உதவும்.

அரச வருமானத்தின் மீட்டெடுத்தல் கடந்த 2009, 2010ஆம் ஆகிய இரண்டு வருட காலப்பகுதியில் இருந்தது போல் தொடர்ச்சியாக குறைந்து செல்வதை உணர்ந்தால் அரச வருமானமானது மொத்த உள்ளூர் உற்பத்தியின் வீதமாதக இருந்த போதிலும் 2013 இல் 13.6 வீதமாக இருந்த வருமானம் 2014 இல் 14.5 ஆக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதே போக்கினை மொத்த அரச வருமானத்தின் வீதமாக வரி வருமானத்திலும் வரியில்லா வருமானத்திலும் அவதானிக்க முடிந்தது. கடந்த இரண்டு வருடங்கள் நீங்கலாக மொத்த உள்ளூர் உற்பத்தியின் வரி வருமானம் கிட்டத்தட்ட 12.8 வீதம் தேக்கமுற்றிருந்தது. வரி வருமானமானது 2009ஆம் ஆண்டுவரை குறைவடைகின்ற போக்கினை கொண்டிருந்த போதிலும் வரி மற்றும் வரியில்லா வருமானத்தின் வீதத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை. இது கடந்த 5 வருடங்களினை கவனத்திற்கொள்கையில் மொத்த அரச வருமானத்தின் முறையே 88 வீதமாகவும் மற்றும் 12 வீதமாகவும் காணப்பட்டிருக்கிறது. எவ்வாறாயினும், சராசரியாக மொத்த வரி வருமானத்திற்கு மறைமுக வரிகளின் விகிதாசார பங்களிப்பு தற்பொழுதும் 78 வீதத்திற்கு மேலாக காணப்படுகிறது. இது வரி சேகரிப்பின் மீது அரசாங்கத்தின் கூடிய கவனத்தையும் சமத்துவத்தை நோக்கிய குறைவான அர்ப்பணிப்பினையும் குறிக்கிறது.

2014ஆம் ஆண்டு பாதீட்டில் கீழே விளக்கப்பட்ட புதிய வருமான முன்மொழிவுகளின் கீழ் அரசானது

அட்டவணை 4 : பொருளியல் வகையீட்டுக்கு இணங்க அரச பாதீடு 2009 -2014 (மில்லியனில்)

	2009	2010	2012	2013	2014
மொத்த வருமானமும் நன்கொடைகளும்	725.6	834.1	1,067.50	1,203.10	1,469.50
மொத்த வருமானம்	699.7	817.2	1,051.40	1,183.10	1,437.40
வரி வருமானம்	619	724.7	908.1	1,052.20	1,274.60
வருமான வரி	139.6	135.6	172.5	239.5	283.3
பொருள்கள் சேவைகள் வரி	316	435.4	519.6	578.4	688.5
வெளிநாட்டு வர்த்தக வரி	163.3	153.7	216.6	234.1	302.6
வரியில்லா வருமானம்	80.7	92.5	142.5	130.9	162.8
நன்கொடைகள்	25.9	16.9	16.0	20.0	32.0
மொத்த செலவினம்	1,201.90	1,280.20	1,556.50	1,712.40	1,985.60
மீண்டுவரும்	879.6	937.1	1,131.00	1,224.90	1,328.30
சம்பளங்களும் ஊதியங்களும்	271.2	300.6	347.7	391.4	410.6
ஏனைய பொருள்கள் சேவைகள்	108.5	87.7	140.0	132.2	191.8
வட்டி	309.7	352.6	408.4	444.8	441.0
மானியங்களும் இடமாற்றங்களும்	190.2	196.2	234.6	256.4	284.7
பொது மூலதனம்	330.4	356.5	443.9	503.9	668.5
கல்வி மற்றும் சுகாதாரம்	30.5	32.4	46.1	55.5	74.1
உட்கட்டமைப்பு	299.5	324.1	397.9	448.4	594.4
ஏனையவை	(8.1)	(13.4)	(18.4)	(16.4)	(11.1)
வருமானம் மேலதிகம் (+) பற்றாக்குறை (-)	(179.9)	(119.9)	(79.5)	(41.7)	109.2
பாதீடு மேலதிகம் (+) பற்றாக்குறை(-)	**(476.4)**	**(445.9)**	**(448.9)**	**(509.2)**	**(516.1)**
மொத்த நிதியிடல்	**476.4**	**445.9**	**488.9**	**509.2**	**516.1**
மொத்த வெளிநாட்டு நிதியிடல்	83.9	194.9	180.7	149.8	235.5
வெளிநாட்டு கடன்கள் - தேறிய	194.2	269.9	364.6	247.1	331.5
வெளிநாட்டு கடன்கள்	136.8	158	234.4	247.1	234
வெளிநாட்டு வர்த்தகம்	57.4	11.9	130.2	0.0	97.5
கடன் மீள்கொடுப்பனவுகள்	(110.3)	(75.1)	(183.8)	(97.2)	(96)
மொத்த உள்நாட்டு நிதியிடல்	392.5	251.1	308.2	359.3	280.6
வங்கியல்லா கடன்கள்	196.5	204.1	70.9	104.7	129.3
திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைகள் மீதான வெளிநாட்டு முதலீடுகள்	146.9	48.8	105.6	53.2	51.3
வங்கி கடன்கள்	49.0	(1.9)	131.5	201.4	100.0
வருமானங்களும் நன்கொடைகளும் /GDP(%)	15.0	14.9	14.1	13.8	14.8
வருமானம்/GDP(%)	14.5	14.6	13.9	13.6	14.5
வரி/GDP(%)	12.8	12.9	12	12.1	12.8
செலவினம் /GDP(%)	24.9	22.8	20.5	19.7	20.0
நடப்பு செலவினம் /GDP(%)	18.2	16.7	14.9	14.1	13.4
பொது முதலீடு /GDP(%)	6.8	6.4	5.9	5.8	6.7
வருமானம் மேலதிகம் (+) பற்றாக்குறை (-) /GDP(%)	(3.7)	(2.1)	(1)	(0.5)	1.1
முதன்மை (+) பற்றாக்குறை (-) /GDP(%)	(3.4)	(1.7)	(1.1)	(0.7)	(0.8)
பாதீடு (+) பற்றாக்குறை (-) /GDP(%)	(9.9)	(8.0)	(6.4)	(5.8)	(5.2)

ஆதாரம் : பாதீட்டு உரை - 2014

கடந்தகால வரி வருமானத்திலும் பார்க்க மேலதிக வரி வருமானம் ரூபா.41,415 மில்லியனை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கிறது.

1. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு தேசிய கட்டுமான வரியினை (NBT) 2 வீதத்தினால் விரிவாக்கல் – மேலதிக வரி வருமானமாக ரூபா.3,665 மில்லியன் எதிர்வு கூறப்படுகிறது.

2. சிறப்பு அங்காடி மற்றும் வணிக தராசு போன்றவற்றிற்கு பெறுமதி சேர் வரியின் பிரயோகத்தினை வலுப்படுத்தல். (காலாண்டு புரள்வு ரூபா.250 மில்லியன் மற்றும் புரள்வின் 25 வீதம் விலக்கு எல்லை) (மேலதிக வரி வருமானம் ரூபா.15,000 மில்லியன் என எதிர்வு கூறப்படுகிறது).

3. தொலைத்தொடர்புகள் தீர்வை 25 வீதமாக நிர்ணயிப்பதற்கு (மேலதிக வருமானம் ரூபா. 4,000 மில்லியன் என எதிர்வு கூறப்படுகிறது).

4. சுங்கவரிக்காக மோட்டார் வாகனங்களின் பெறுமானத் தேய்வு மதிப்பீட்டில் திருத்தம். (மேலதிக வருமானம் ரூபா.2,000 மில்லியன் என எதிர்வு கூறப்படுகிறது).

5. முதன்மைப் பண்டங்களின் ஏற்றுமதியின் மீதான "CESS" வரியில் திருத்தம் மற்றும் உள்நாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு, குறை மதிப்பீட்டுக்கு உட் படக்கூடிய பொருள்கள். (மேலதிக வருமானம் ரூபா. 4,000 மில்லியன் எதிர்வு கூறப்படுகிறது).

6. உள்ளூர் பெறுமதி சேர்ப்பிற்கு ஆதரவளிப்பதற்காக விசேட பண்ட தீர்வையில் / சுங்க தீர்வையில் திருத்தம் (மேலதிக வருமானம் ரூபா.12,750 மில்லியன் என எதிர்வு கூறப்படுகிறது.)

அரசிற்கு உரித்தான தொழில் முயற்சிகளில் இருந்து குறைவான இலாபமும் பங்குலாபமும் உருவாக்கப்பட்டமையினால் கடந்த வருடத்திலும் பார்க்க 2013ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக வரியில்லா வருமானம் குறைந்தது. அதற்கிணங்க, கடந்த வருடம் 1.9 வீதமாக இருந்தமொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக வரியில்லா வருமானம் 2013ஆம் ஆண்டில் 1.5 வீதமாக குறைந்தது. 2013ஆம் ஆண்டின் மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையின் படி, மத்திய வங்கியில் இருந்தும் அரசின் வரியில்லா வருமான மூலங்களில் இருந்தும் ஏனைய அரசிற்கு உரித்தான தொழில் முயற்சிகளில் இருந்தும் இலாபத்தினதும் பங்கு இலாபத்தினதும் குறிப்பிடத்தக்க குறைவான மாற்றீடுகள் காரணமாக 38.7 வீதம் குறைவான இலாப மாற்றீடாக இருந்தது. இது வரியில்லா வருமானத்தின் குறைவிற்கான பிரதான காரணமாக இருந்தது. எவ்வாறாயினும், வாகன வருமான அனுமதிப்பத்திரம் போன்ற தெரிவு செய்யப்பட்ட கட்டணங்களும் விதிப்பனவுகளும் உயர்த்தப்பட்டதன் காரணமாக கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளில் இருந்தான வருமானமானது 54.3 வீதமாக குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. அதே சமயம், வட்டிகள் மற்றும் வாடகைகளில் இருந்தான வருமானங்கள் 2.7 வீதத்தினால் அதிகரித்தது. அரசாங்கமானது 2014ஆம் ஆண்டு பாதீட்டின் ஊடாக வரியில்லா வருமானத்தினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 1.7 வீதத்தினால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கிறது என்பதனை முக்கியமாக குறிப்பிடுகிறது.

எவ்வாறாயினும், வருமானம் மீதான பாதீட்டு இலக்குகள் தொடர்பாக எங்களுடைய வரலாற்றுரீதியான அனுபவங்கள் மிகவும் ஈர்க்கக்கூடியதாக இல்லை. எல்லா வருடங்களிலும் இந்நிலை காணப்படாத போதிலும் கடந்த அண்மைய காலங்களில் அநேகமான வருடங்களில், அரசானது வருமான இலக்குகளினை அடைய தவறியுள்ளது. 2013ஆம் ஆண்டு மத்திய வங்கியின் அறிக்கை தொடர்பாக *"குறைவான மோட்டார் வாகனங்கள் மற்றும் எரிபொருள் இறக்குமதிகள், குறைவான இறக்குமதி தொடர்பான வரிதிரட்டல்கள், உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கு வரிவிலக்குகளும் சலுகைகளும் வழங்கப்பட்டமை, மற்றும் அரசநிறுவனங்களில் இருந்து இலாபத்தினதும் பங்குஇலாபத்தினதும் குறைவான பரிமாற்றங்கள், அத்துடன் நடப்பிலுள்ள தொடருகின்ற உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள் நிமித்தம் 2013ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியின் பொழுது அரச வருமானத்தின் செயல்திறன் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாக காணப்பட்டமை ஆகியவை இக்காலப்பகுதிகளின் பொழுது அரசின் இலக்குகளை அடைவதில் காணப்பட்ட பிரதான சவால்கள் இருந்தன. பொருளாதாரத்தின் வளர்ச்சிவேகத்திற்கு இடையூறு விளைவிக்காமல் அதன் செலவின நிகழ்ச்சித்திட்டங்களினை அறிவார்ந்த முறையில் சீரமைக்கப்படுவதன் மூலம் இச்சவால்களை அரசாங்கம் வெற்றிகரமாக எதிர்கொண்டது."* உண்மையில், எதிர்பாக்கப்பட்ட வருமானத்தை உணரமுடியாதபொழுது, திட்டமிடப்பட்ட செலவினத்தை குறைப்பது தவிர அரசாங்கம் மாற்றுத்தெரிவினை கொண்டிருக்கவில்லை.

அரச செலவினம்

எவ்வாறு புத்திசாலித்தனமாக திட்டமிடப்பட்டது என்பதிலும் பார்க்க, தற்போதைய சூழ்நிலையில், அரசாங்கமானது புதிய பாதீட்டு முன்மொழிவுகள் ஊடாக அதன் மொத்த செலவினத்தின் மிகவும் சிறிய பகுதியுடன் எவ்வாறு சமாளிக்கவேண்டியுள்ளது என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இது ஏனென்றால், அரசசெலவினத்தின் பெரும்பாலான பகுதி முன்தீர்மானிக்கப்பட்டதாகவோ அல்லது ஏற்கனவே முன்மொழியப்பட்டதாகவோ இருக்கிறது. உதாரணமாக மீண்டுவரும் செவினத்தின் 37 வீதம் பொதுக் கடனுக்கான வட்டி கொடுப்பனவாக செல்கிறது. 33 வீதம் அரச வேலையாட்களின் சம்பளங்களாகவும் ஊதியங்களாகவும் செல்கிறது. மற்றைய 10 வீதம் ஓய்வூதிய கொடுப்பனவாகும். மீண்டும்வரும் செலவினம் 80 வீதமான பொழுதிலும் இது முன்தீர்மானிக்கப்பட்டதாகும். 2013 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில், *"விரும்பிய மட்டத்தில் பொது மூலதனத்தினை பராமரிக்கிற மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த மூலதன மட்டத்தில் மேம்பாட்டினை முழுமையாக்குகின்ற அதேவேளை செலவின பக்கத்தில் மீண்டுவரும் செலவினத்தினை அறிவுசார்ந்த முறையில் சீராக்குவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன."* என குறிப்பிடப்பட்டுள்ளது மீண்டுவரும் செலவினத்தை அறிவுசார்ந்த முறையில் சீரமைத்தல் என்று அழைக்கப்படும் கருத்தாக தோன்றிய போதிலும் சமூர்த்தி மற்றும் உரமானியம் போன்ற வீட்டுத்துறைக்கான கொடுப்பனவுகளை வெட்டி மீள எடுத்தலாகும் என்பதை தவிர புதிதாக வேறு எதுவுமில்லை. சமூர்த்தி மற்றும் உரமானிய செலவினமானது 2009ஆம் ஆண்டு 4 வீதத்தில் இருந்து 2013ஆம் ஆண்டு 3 வீதமாக குறைக்கப்பட்டிருந்தது.

அட்டவணை - 5 இல் கொடுக்கப்பட்ட புதிய செலவின முன்மொழிவுகள் 2014ஆம் ஆண்டு பாதீட்டில் முன்வைக்கப்பட்டது. புதிய செலவின முன்மொழிவுகளின் கீழ் ரூபா. 70.6 பில்லியன் மூலதனச் செலவிலும் ரூபா. 27.8 பில்லியன் மீண்டுவரும் செலவினத்திலும் மொத்தமாக கிட்டத்தட்ட ரூபா. 98 பில்லியனினை செலவழிப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது. 2014 ஆம் ஆண்டுக்காக கொடுக்க வேண்டிய மொத்த அரசசெவினத்தின் 5 வீதம் மட்டுமே புதிய செலவின முன்மொழிவாக கருதுகிறது. மூலதன மற்றும் மீண்டுவரும் இயல்பின் அடிப்படையில் புதிய முன்மொழிவுகள்

அட்டணை 5: செலவு முன்மொழிவுகள் -2014- திறைசேரியின் செலவின வாக்குப் பணத்திலிருந்து நிதி ஒதுக்கீடுகள்

		ஒதுக்கீடு (ரூபா மில்லியனில்)	
		மீண்வரும்	மூலதனம்
1	தேசிய சமூதாய நீர்வழங்கல் துறையினை ஸ்தாபித்தலும் தொடர்புபட்ட அபிவிருத்தி வேலைகளும்	0.00	3,000.00
2	இலங்கை போக்குவரத்து சபையின் வருமான பற்றாக்குறைக்கான ஏற்பாடுகள்	500.00	-
3	உமா ஓயா, மொறகஹகந்த மற்றும் யான் ஓயா நீர்ப்பாசன திட்டங்களின் அபிவிருத்தியை துரிதப்படுத்தல்	-	14,000.00
4	உயர்தரத்திலான விதை மற்றும் நடுகை பொருள்களை விருத்திசெய்தல்	300.00	-
5	கமநல சேவை நிலையங்களை நவீனமயப்படுத்தல்	-	300.00
6	சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் கைவிடப்பட்ட நெற்காணிகளின் அபிவிருத்தி.	-	2,300.00
7	விவசாய வெளிக்கள அலுவலர்களுக்கான ஊக்குவிப்புகள்	300.00	-
8	வெளிக்கள அலுவலர்களுக்கான மோட்டார் சைக்கிள் வழங்கலுக்கான குறைந்த மானியம்	20,000.00	-
9	உலக உணவுத்திட்ட உணவு உதவி	-	3,000.00
10	மாவட்ட செயலாளர்களின் கீழ் தானிய உற்பத்தி மாவட்டங்களுக்காக வளர்ச்சியுறும் நிதியினை ஸ்தாபித்தல்	-	1,500.00
11	சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு மண் பாதுகாப்பு உதவி.	-	200.00
12	விவசாய ஓய்வூதிய திட்டத்திற்காக மூலதன பங்களிப்பு	-	1,000.00
13	மாவட்டங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் விவசாய ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகூட வசதிகள்	-	500.00
14	மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் நங்கூரமிடும் வசதிகளை விருத்திசெய்தல்.	-	1,000.00
15	கால்நடை சேவையின் வலுப்படுத்தல்	200.00	-
16	கால்நடை மருத்துவர்களுக்கான கொடுப்பனவுகள்	50.00	-
17	தொடர்புபட்ட கிராமங்களில் 1,000 பாலங்களினை அமைத்தல் மற்றும் விதி வசதிகளை மேம்படுத்தல்	-	4,500.00
18	பின்தங்கிய கிராமங்களுக்கு சிறிய பஸ் வண்டிகளை வழங்கல்	-	300.00
19	மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட பிரதம கணக்காளர்களுக்கு ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை கொடுப்பனவு	25.00	-
20	விசேட திறனாளிகளுக்காக தொழிற்கல்வி பாடசாலைகளை நவீனமயப்படுத்தல்	-	100.00
21	சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் தடுப்பு	300.00	400.00
22	உள்ளூராட்சிசபைகளின் வலுப்படுத்தல் (பிரதேச சபைகள்)	1,400.00	2,000.00
23	தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் வனசீவராசிகள் பாதுகாப்பு	0.00	1,000.00
24	வனஜீவராசி திணைக்களத்தினை வலுவூட்டல்	-	200.00
25	வடமத்திய மாகாணத்திற்காக கிராமிய நீர் சுத்திகரிப்பு கருத்திட்டம்	-	900.00
26	தொற்றலடையாத நோய்களில் முதலீடு - புற்றுநொய், பக்கவாதம் மற்றும் சிறுநீரகம்	-	2,000.00
27	சிறுவர் வைத்தியசாலைகளை நவீனமயமாக்கல்	-	1,000.00
28	கொழும்பு, றாகம, களுபோவல தேசிய வைத்தியசாலைகளின் அபிவிருத்தி	-	12,000.00
29	வைத்தியசாலை ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு	100.00	-
30	கண்டி மற்றும் அநுராதபுரத்தில் அரங்காடல் கலைநிலையங்கள்	-	1,500.00
31	லயனல் வென்ட், லும்பினி திரையரங்கு மற்றும் காலி நகர மண்டப திரையரங்கு ஆகியவற்றினை நவீனமயப்படுத்தல்.	-	300.00
32	கலைஞர்களுக்காக 05 விடுமுறை விடுதிகள்	-	150.00
33	மரபுரிமைகள் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு முன்னெடுப்புகள்	-	100.00
34	கிராமிய பாடசாலைகளில் சுகாதார மற்றும் ஏனைய வசதிகள்	-	1,000.00
35	மகரகம மற்றும் ஏனைய ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளை நவீனமயப்படுத்தல்	-	750.00
36	பிரிவென கல்வி	150.00	300.00
37	திறன் விருத்தி கல்வி முன்னெடுப்பு	-	1,200.00
38	தொழிற்பயிற்சி கல்வி ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கான ஊக்குவிப்புகள்	300.00	-
39	பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்களின் விரிவாக்கம் மற்றும் தர முன்னேற்றம்	-	2,000.00
40	பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு கல்விசார கொடுப்பனவுகள்	200.00	-
41	மருத்துவத்திற்கான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தை விருத்திசெய்தல்	-	600.00
42	மருத்துவர்களுக்கான ஆராய்ச்சி கொடுப்பனவுகள் மற்றும் உள்ளக மருத்துவர்களுக்கான கொடுப்பனவுகள்.	1,400.00	-
43	நெனசல நிலையங்களை விரிவாக்கலும் பதிய வசதியளித்தலும்	-	1,000.00
44	தேசிய விஞ்ஞான நிலையத்தின் உருவாக்கத்தடதிற்காக ஆரம்ப முதலீடு	-	300.00
45	பாரிய கொழும்பு வெள்ளத்தடுப்பு செயற்திட்டம்	-	1,500.00
46	வீடமைப்புத்திட்டங்களின் மேம்படுத்துகை மற்றும் நவீனப்படுத்துகை	-	800.00
47	குறை வருவாய் வீடமைப்பு அபிவிருத்தி திட்டம்	-	500.00
48	சட்ட மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு	-	500.00
49	நீதிபதிகளுக்கான பிரத்தியோக கொடுப்பனவுகள்	25.00	-
50	பொலிஸ் சேவைக்கான வீடமைப்புத்திட்டங்கள்	-	1,500.00
51	பொலிஸ் கல்லூரியில் வசதிகளின் விரிவாக்கம்	-	500.00
52	மக்களின் பிரதிநிதிகள் மூலமான கருத்திட்டங்களின் அமுலாக்கம்	-	4,000.00
53	2017 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுக்காக இளைஞர்களை தயார்படுத்தல்	-	500.00
54	இளைஞர் விருத்திக்கான ஒதுக்கீடு	-	150.00
55	2014 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் இளைஞர் மாநாட்டின் பங்கெடுப்பு	-	250.00
56	அரச சேவையாளர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு	17,300.00	-
57	ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு	3,300.00	-
	மொத்தம்	27,850.00	70,600.00

ஆதாரம் : தேசிய பாதீட்டு உரை

அட்டவணை 6 : மொத்த கடன்வாங்கல் அவசியப்பாடுகள் - 2014

	ரூபா மில்லியனில்
மொத்த வருமான பெறுவனவுகள் மற்றும் நன்கொடைகள்	1,495.00
கடன் மீள் கொடுப்பனவுகள் உட்பட மொத்த கொடுப்பனவுகள் அதில் மொத்த கடன் மீள் கொடுப்பனவு ரூபா 589 பில்லியன்	2,599.00
முற்கொடுப்பனவு கணக்குகளுக்கான ஏற்பாடுகள், பெறுவனவுகளிலும் கொடுப்பனவுகளிலும், மாறுபாடு கணக்கு, தற்செயல் மற்றும் அரசுக்கு உரித்தான தொழில் முயற்சிகள் போன்றவற்றின் ஐந்தொகைக்கான பிணைகள் வழங்கல் மீதான ஆபத்து ஏற்பாடுகள்	174.00
மொத்த கடன்வாங்கல் அவசியப்பாடு	1,278.00

ஆதாரம் : பாதீட்டு உரை - 2014

பார்க்கப்படுகிற பொழுது 40 முன் மொழிவுகள் மூலதன செலவினத் தின் கீழும் 14 புதிய முன்மொழிவு கள் மீண்டு வரும் செவினத்தின் கீழும் வகைப்படுத்தப்பட முடியும். அட்டவணை 5 இல் காட்டப்பட்ட தற்கு இணங்க இதில் மூன்று முன்மொழிவுகளின் கூறுகள் மூல தன மற்றும் மீண்டுவரும் செலவி னங்கள் ஆகிய இரண்டிலும் உள்ளடக்குகிறது.

அட்டவணை 4 இல் குறிப்பிடப் பட்டதன்படி 2014 ஆம் ஆண்டுக் கான அரச பாதீட்டு பற்றாக் குறையானது ரூபா. 416.1 பில்லி யனாகும். இது கடந்த வருடத் துடன் ஒப்பிடுகின்றபொழுது கிட் டத்தட்ட 7 பில்லியன் உயர்வாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக பாதீட்டுப் பற்றாக்குறை யானது குறைகின்ற போக்கில் இருப்பது புள்ளிவிபரங்களில் வெளிப்படுத்தப்படுகிறது. 2009ஆம் ஆண்டில் பாதீட்டு பற்றாக்குறை யானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 9.9 வீதம் உயர்வாக இருந்தது. இது 2010 இல் 8 வீதமாக குறைந்ததுடன் 2012 இல் 6.4 வீதமாகவும் 2013 இல் 5.8 வீதமாகவும் இருந்தது. 2014ஆம் ஆண்டுக்காக முன்மொழி யப்பட்ட பாதீட்டின் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.2 வீதமாக மேலும் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அரசபாதீட் டில், பாதீடானது பொருளாதார வகைப்படுத்தல் பயன்படுத்தப்பட்டு முன்வைக்கப்படுகின்ற பொழுது பாதீட்டுப் பற்றாக்குறையினை குறைப்பதற்கு அற்புதமான செயற் பாடாக எப்போதும் அதிகரித்து வருகின்ற அரசாங்கத்தின் கடன் தவணைப்பண மீள்கொடுப்பனவு செலவின பக்கத்தில் அறிக்கை யிடப்படாமை போன்ற மறைக்கப் பட்ட இரகசியம் காணப்படுகிறது. பொருளாதார வகைப்படுத்தல் முறைக்கிணங்க அரச கடனின் மீதான வட்டிக்கொடுப்பனவு மட் டும் பாதீட்டில் பதியப்படுகிறது. ஆனால் கடன் மீள்கொடுப்பனவு தவணைப்பணம் பதியப்படுவதி ல்லை. அட்டவணை 6 இற்கு இணங்க 2014ஆம் ஆண்டு கடன் மீள்கொடுப்பனவு தவணைப்பணத் திற்கான தவறவிடப்பட்ட கொடுப் பனவு ரூபா. 589 பில்லியன். இந்த பெறுமதியும் சேர்க்கப்பட்டால் உண்மையான பாதீட்டு பற்றாக் குறை ரூபா 1,105 பில்லியனுக்கு அதிகரிக்கும். இது மொத்த உள் நாட்டு உற்பத்தியின் வீதமாக கிட்டத்தட்ட 11.13 வீதமாகும். முற் கொடுப்பனவு கணக்கு நடவடிக் கைகளுக்கான ஏற்பாடுகள் உட்பட பெறுவனவுகள் மற்றும் கொடுப்ப னவுகளில் மாறுபாட்டு கணக்கின் மீது ஆபத்து ஏற்பாடுகள், தற் செயல் பொறுப்புகள் மற்றும் அர சுக்கு சொந்தமான தொழில் முயற் சிகளின் மீள்கட்டமைப்பு ஐந்தொ கைக்கான பிணைகள் வழங்கல் போன்ற அரசாங்கத்தின் மொத்த தேறிய கடன்வாங்கல் அவசியப் பாடுகள் ரூபா. 1,278 பில்லியனாக மதிப்பிடப்படுகிறது. (அட்டவணை 6 ஐப் பார்க்க)

நிதியளிப்பு வழிமுறைகளினை கருதுகையில் பின்வருவனவற்றில் ஒன்றினை அவதானிக்க முடியும்.

- மொத்தமாக ரூபா. 516 பில் லியன் நிதியளிப்பு முறை, கடன் மீள்கொடுப்பனவு உட் பட பாதீட்டில் பிரகடனப்படுத் தப்பட்ட பாதீட்டுப் பற்றாக்கு றைக்கு சமனாக தோன்றுகி றது. ரூபா. 589 பில்லியன் பெறுமதியான கடன் மூலதன மீள் கொடுப்பனவுகளுக்கான நிதியினை அரசாங்கம் எந்த மூலங்களில் இருந்து அடையா ளம் கண்டறியப் போகிறது என்ற தெளிவின்மைகாணப்படு கிறது.

- பணவீக்க தன்மையாக காணப் படுகிற வங்கிக்கடன் வாங் கல் முறையில் ரூபா. 100 பில் லியனை பெறுவதற்கு அரசாங் கம் திட்டமிடுகிறது. இது மத்திய வங்கியினால் புதிய நாணயம் அச்சிடப்படுத லையோ அல்லது வணிக வங்கி அமைப்பு மூலமாக நாணயத்தை உருவாக்குவ தையோ கருதுகிறது.

- எஞ்சிய ரூபா. 97.5 பில்லி யன் வெளிநாட்டு வணிக கடன்வாங்கலாக இருக்கப்போ கிறது. இது பதிலுக்கு உயர் வட்டி மீள்கொடுப்பனவை உட்குறிப்பாக காட்டுகிறது.

நிதியளிப்பு முறைகள் ஒழுங்குப டுத்தலின் பொழுது வெறும் அனு மானமான எண்களிலும் பார்க்க நிதியளிப்பின் யதார்த்தமான மூலா தாரம் கண்டுபிடிப்பது மிக முக் கியமாக இருக்கிறது. எவ்வாறா யினும், இவ்விடயமாக இலங் கையின் அனுபவமானது கவரக் கூடியதாக இல்லை. மத்திய வங் கியானது ஒவ்வொரு வருடமும் அறிக்கையிடுவது வழக்கமாக இருந்துவருகிறது. நிதியளிப்பின் திட்டமிடப்பட்ட முறையின் அடை திறன் எதிர்பாராத விதமாக வெற் றியளிக்கப்படாத அறிக்கையாக இருந்தது. உதாரணமாக, பாதீட்டு பற்றாக்குறைக்கு நிதியளிப்பின்

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்)

PUBLIC LIBRARY
JAFFNA

இலங்கையில் பெண்கள் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பான பாதீட்டு தாற்பரியங்களும் - 2014

கலாநிதி. எஸ். பி. பிரேமரத்ன
என். டில்ருக்சி
என். பெரேரா

பொருளியல் துறை
கொழும்பு பல்கலைக்கழகம்

அறிமுகம்

2014ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் அண்மைய சமர்ப்பிப்புடன், அதன் தாற்பரியங்களினை பகுப்பாய்வு செய்வதற்கான சரியான நேரமாக இது காணப்படுகிறது. இதன் தாற் பரியங்கள் பெண்கள், தொழில்மு யற்சியாளர்கள், சிறிய வணிக மற்றும் சுய தொழிலாளர்கள் தொடர்பான பல்வேறுபட்ட அம் சங்களில் எதிர்வுகூறப்படமுடியும். அரச பாதீடு மற்றும் அதன் கொள் கைகள் தொடர்பான பகுப்பாய்வு செய்வதில் இலங்கை 50 வருடங் களுக்கு மேலான அனுபவத்தினை கொண்டுள்ள போதிலும், இலங் கைப் பெண்களின் மீது அதன் தாக்கம் தொடர்பாக முறையான பகுப்பாய்வு அரிதாகவே காணக்கூ டியதாக இருக்கிறது. எனினும் உலகம் பூராகவும் பெண்கள் மிகப்பெரிய அனுகூலமற்ற குழு வாக காணப்படுகின்றனர். (Chakraborty, 2003). அவ்வாறான நிலை யில், பாலின சமத்துவத்துவத் திற்கான நிகழ்ச்சிநிரல் அபிவிருத் திக்கான முன்னுரிமைப்படுத்தப் பட்ட பட்டியலில் மேல்மட்டத்திற்கு நகர்த்தப்பட்டிருக்கிறது. எந்த வொரு அபிவிருத்தி முயற்சிகளி லும் பெண்களின் பிரச்சினைகளை யும் விழித்துரைக்க வேண்டும். பெண்கள் அதிகாரமளிப்பும் சுய தொழில் வாய்ப்பும் அத்துடன் பெண்களினால் முகாமைத்துவப் படுத்தப்படுகிற நுண் மற்றும் சிறிய வணிக அபிவிருத்திகள் ஆகியவற்றுக்கு இடையே நேரடித் தொடர்புகள் காணப்படுகின்றன. ஏற்கனவே இயங்கிக்கொண்டிருக் கின்ற மற்றும் ஆற்றல்மிக்க நிறுவ னங்கள், தொழில் முயற்சிகளை நடாத்துவதற்கு பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதுடன் தொழில் முயற்சியாளர்கள் அத்துடன் உள் ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தையில் அவர்களை போட்டியான பங்காள ராக உருவாக்குதல் போன்றன துடிப்பான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு முக்கியமாக இருக்கிறது. ஆகையினால், இந்த கட்டுரையானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் மீது பாதீட்டு தாற்பரியங்கள் மற் றும் "பாலின வரவு செலவுத்திட் டம்" இவ் எண்ணக்கரு போன்ற வற்றினை முன்னிலைப்படுத்த முயல்கிறது.

வருடாந்த அரச பாதீடானது மற் றைய எந்தவொரு ஆவணத்தை காட்டிலும் அதிகளவு பொருளா தார மற்றும் சமூக முன்னு ரிமைகளை பிரதிபலிக்கிறது. அரச பாதீட்டு முன்மொழிவுகளா னவை, கொள்கைகள் (அநேக மான சந்தர்ப்பங்கள்) மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் வரையறுக்கப் பட்டு அவை வள ஒதுக்கீடுக ளாக தெளிவுபடுத்துகிற இடமாக இருக்கின்றன. பாரம்பரியமாக பாதீட்டின் முறைப்படுத்தலானது பாலின நடுநிலை செயன்முறை யாக தோன்றக்கூடும். ஏனெனில், ஆண்களினதும் பெண்களிதும் வேறுபட்ட உரிமைகள் மற்றும் இயலுமைகள் தொடர்பாக வெளிப் படைத்தன்மை காணப்படுவ தில்லை. எவ்வாறாயினும், பாதீட்டு ஒதுக்கீடு சமுதாயத்தின் முழுவதும் ஒரு தலைச்சார்பினை மீள்உருவா க்க முடியும். எவ்வாறாயினும், அண்மைய காலங்களில் எமது அயல்நாடான இந்தியா உட்பட பல நாடுகள் பாலின பாதீடு தொடர்பாக விவாதிக்க ஆரம்பித்தி ருக்கின்றன.

பாலின பாதீடு

"பாலின பாதீடு" பெண்களுக்கான தனியானதொரு பாதீட்டினை கருத வில்லை. இது பொதுக் கொள்கை கள் மீதான கவனம் செலுத்துகிற தும் அவர்களின் இன தாற்பரி யங்களை வெளிக்கொண்டு வருவ தற்குமான இலக்கை அடிப்படை யாகக் கொண்ட அனுபவ பயிற் சியினை உள்ளடக்குகிறது. ஆண் கள் மற்றும் பெண்கள் தொடர் பான அரச வருமானங்கள் மற்றும் செலவின கொள்கைகளை உள்ள டக்குகின்ற அரசாங்கத்தின் வருடா ந்த பாதீட்டின் தாக்கத்தினை நிர் ணயிப்பதற்கான வழிமுறைகளை வழங்குகிறது. வேறுவழியில் கூறு வதாயின், அரச பாதீட்டினை பரிசீலனை செய்வதற்கும் பெண் கள் மற்றும் ஆண்கள் மீதான தாற்பரியங்களை வெவ்வேறாக தீர்மானிப்பதற்காக பாலின பாதீ டிடல் ஆய்வுமுறை கருவியாக பயன்படுத்தப்பட்டது. பாலின சமத்துவமின்மையினையும் பொது வளங்களின் பரம்பலின் பக்கச்சார் பினை ஆய்வு செய்வதற்கும் இக்கருவியானது பயன்படுத்தப்பட முடிந்தது.

பாலின பாதீடிடல் செய்முறைகள், பாலின கண்ணோட்டத்திலிருந்து ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைக ளுடன் ஒப்பிடுகையில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கான தாற்பரியரிங்கள் அத்துடன் தாக் கங்களினை அடையாளப்படுத்த லில் இருந்தான எந்த வடிவத்தி லான பொது செலவினம் அல்லது பொது நாணயத்தை உருவாக்கு கின்ற முறையினை பகுப்பாய்வு செய்வதன் நோக்கமாக இருக்கி றது. ஒட்டுமொத்த பாலின பாதீடி டல் செயன்முறையில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கிடையில் வளங்களை மிகவும் சமனான முறையில் பங்கீடு செய்வதை

உறுதிசெய்கிறது. மேலும் ஆண் கள் மற்றும் பெண்கள் பல்வேறு பட்ட வித்தியாசமான தேவைப்பா டுகளை கொண்டுள்ளனர். அவை திட்டமிடலிலும் பாதீட்டிலும் பிரதி பலிக்கப்பட வேண்டும் என்பதனை அங்கீகரிக்கிறது.

பாலின தரத்தினை முன்னிலைப்ப டுத்துவதற்கு அவர்களின் மூலோ பாயத்தில் மிகவும் முக்கியமான கருவியாக பல நாடுகளில் உள்ள அரசாங்கங்கள், அரசாங் கங்களுக்கு இடையிலான நிறுவ னங்கள், அபிவிருத்தி நிறுவனங் கள். பாராளுமன்றங்கள், தன்னார் வத்தொண்டு நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக குழுக்கள் உட்பட பல்வேறுபட்ட நிறுவனங்கள் பாலின பொறுப்புக்கூறல் பாதீடு களை பயன்படுத்துகிறது (Esim, 2000). பாலின பொறுப்புக்கூறல் பாதீடுகள் பெண்களுக்கான வளங் களின் ஒதுக்கீடுகளை அதிக ரிப்பதை நோக்கமாக இருக்கிறது. அவைகள் தன்சானியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா, உகண்டா, அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா போன்ற பல நாடுகளில் மேற் கொள்ளப்பட்டுவருகிறது. அவர்கள் பிரதானமாக பின்வரும் வகை யான வினாக்களுக்கு விடை யளிப்பதற்கு முயற்சித்திருக்கிறார் கள் (Balmori, 2003).

- அரசாங்கங்களினால் பாலின சமத்துவமின்மையினை அகற் றுவதற்காக ஏற்றுக்கொள்ளப் பட்ட திட்டவட்டமான வழி முறைகளில் காணப்பட்ட துல் லியத்தன்மை என்ன? மற்றும் அவ்வாறான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு உள்வாங் கப்பட்ட உண்மையான பாதீட்டு ஒதுக்கீடுகள் எவை?
- அவ்வாறான ஒவ்வொரு வழி முறைகளுக்குமாக ஒதுக்கப் பட்ட அளவு அவ்வருடத்தில் அதற்கிணங்க செலவு செய் யப்பட்டதா? அல்லது இல் லையா ?
- இரு பாலரினதும் சமத்துவ மான நன்மை பெறுகின்ற வர்கள் என்று கூறப்படுபவை களாக இருக்கின்ற திட்டங்க ளின் கீழ் உண்மையான செல வினத்தின் பரம்பல் எவ்வாறு சமத்துவமாக இருந்தது ?

பாலின பாதீடிடல் துறையில் தரவுகளின் கிடைப்பனவின் அளவு குறைவாக இருந்தமை ஆராய்ச்சி யாளர்களினால் முகம் கொடுக்கப் பட்ட பாரிய பிரச்சினையாகும். பாலின பகுப்பாய்வானது ஒப்பீட் டளவில் புதிய செய்முறையாக இருப்பதனால் தரவுகள் சேகரிப்பு தற்பொழுதும் வினைத்திறனான பொறிமுறையாக காணப்பட வில்லை. வேறுபட்ட அரசாங்கத்தி ணைக்களங்கள் மற்றும் அமைச் சுக்களில் இருந்து திரட்டப்படாத பாலின தரவுகளினை பெறுவதற்கு கடினமாக இருந்துவருகிறது. அபி விருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் கிடைக்கக்கூடிய தரவு கள் ஒரு நடைமுறைப்பிரச்சினை யாக இருக்கிறது.

பகுப்பாய்வு கருவிகளும் உத்திகளும்

வேறுபட்ட நாடுகளில் தேசிய மற்றும் அரச பாதீடுகளின் முக்கிய பாலின பகுப்பாய்வுக்கு செயல் முறையில், வேறுபட்ட கருவிகள் விருத்தி செய்யப்பட்டிக்கின்றன.

பாலின - விழிப்புணர்வு கொள்கை மதிப்பீடு:

இவ்வகையான ஆய்வு பிரதான மாக வினாக்களுக்கு விடைய ளிப்பதற்கு முயற்சிக்கிறது. கொள் கைகளுக்கும் நிகழ்ச்சித்திட்டங்க ளுக்கும் தேசிய மற்றும் அரச பாதீடுகளினால் நிதியளிக்கப்படு கின்றனவா? மற்றும் பாலின சமத் துவமின்மையுடன் இணைந்த வள ஒதுக்கீடுகள் குறைவதாக, அதிக ரிப்பதாக அல்லது மாற்றமில்லாது இருப்பது போல் தோன்றுகிறதா? பாலின கண்ணோட்டத்தில் அரச கொள்கைகள் மற்றும் சேவைகள் ஆய்வு செய்யப்படுகிறது. வேறு வகையில் கூறுவதாயின், பாலின கண்ணோட்டத்தில் பொதுப்பணத் தின் மூலமாக நிதியளிக்கப்படுகிற கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங் களும் எவ்வாறு சமத்துவமின் மையை குறைக்கும் அல்லது அதிகரிக்கும் என்பதனை ஆராய்ந்து பார்க்கிறது. பெண்க ளின் நில உரிமையாண்மை மற்றும் உரிமைகள் தொடர்பான சட்டவரையறைகளின் நிமித்தம் பெண்கள் மறுசீரமைப்பு செயன்மு றைகள் மற்றும் தொடர்புபட்ட செலவினங்கள் மூலமான நன்மை களினை பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர் (Bal- mori,2003). காணி விவகார திணைக்களம் அதனுடைய நில மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பாலின விழிப்புணர்வு மதிப்பாய்வினை மேற்கொண்டபொழுது அதனுடைய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டி னுள் பாலினம் தொடர்பான் அக் கறையினை ஒருங்கிணைக்க மற் றும் ஊழியர்களுக்கு பாலினம் தொடர்பான பயிற்சி வழங்க ஆரம்பித்தது. VAT இன் பொருத்தமற்ற விகிதாசாரத்தினால் பெரிய சுமையினை காவுகின்ற நாளாந்த வீட்டுக்குரிய செலவினங் களை கையாளுகின்ற முகாமையா ளராக பெண்கள் அடையாளப்ப டுத்தப்பட்டனர். அடையாளப்படுத் தல்களின் அடிப்படையில் பிரித்தா னியாவில் பெண்களின் பாதீட்டுக் குழு சில மறைமுக வரிகளை அகற்றுவதற்கு அரசாங்கத்தினை திருப்திப்படுத்த இயலுமாக இருந் தது (Esim, 2000).

பாலினம் - பிரிக்கப்பட்ட பயனாளிகள் மதிப்பீடு:

இக்கருவியானது பொது சேவை கள், தேவைகளை பூர்த்திசெய்கின் றதா? மற்றும் அவர்களின் முன் னுரிமைப்படுத்தல்களுக்கு இணங்க பொதுச்செலவினத்தின் தற்போ தைய வடிவம் எவ்வாறானது என மதிப்பாய்வு செய்வதற்கும், அரச நிகழ்ச்சித்திட்டங்களில் ஆண்களும் பெண்களும் எவ்வாறு மதிப்பிடப் படுகிறார்கள் என்பதனை கண் டறிவதற்கு பயனாளிகளின் அபிப் பிராயங்களினை சேகரிப்பதற்கும்,

பகுப்பாய்வு செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. அரச பாதீடுகள் தொடர்பாக இலக்குக் குழு கலந்துரையாடல்கள், ஆய்வுகள், அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் மற்றும் பொது விசாரணைகள் போன்றன தரவுகளினை சேகரிப்பதற்கான சில உத்திகளாக இருக்கின்றன. உதாரணமாக, 1996 இல் அமெரிக்காவில் ஓர் அரசசார்பற்ற நிறுவனம் பல்வேறுபட்ட பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் செலவினை கணிப்பிட்டதுடன் ஆற்றல்மிக்க சமூக நலன்புரி செலவினங்களுடன் அவைகள் ஒப்பிடப்பட்டது. இங்கு வினாவப்பட்டவை: எதை நீங்கள் தெரிவு செய்வீர்கள் - நடப்பு வருடத்திற்கான $ 2.1 பில்லியன் பெறுமதியான போர்த்திட்டமா அல்லது அமெரிக்க பெண்களுக்கான வருடாந்த சுகாதார பராமரிப்பு செலவினம் $ 1.3 மில்லியனா? அவர்கள் முன்மொழியப்பட்ட பாதுகாப்பு செலவு குறைப்பில் இருந்து சேமிப்புகளினை கணக்கிட்டதுடன் இவைகள் எவ்வழிகளில் பெண்களின் நன்மைகளுக்கு முதலீடு செய்ய முடியுமென திட்டத்தினை வரைந்தனர் (Elson,2001).

பாலினம் - பிரிக்கப்பட்ட பொது செலவின நிகழ்வுப் பகுப்பாய்வு:

இந்த ஆய்வு உத்திகள் பொது சுகாதார சேவைகள், கல்வி போன்ற பொது சேவைகளில் இருந்து ஆண்களும் பெண்களும் அத்துடன் பெண்பிள்ளைகளும் ஆண் பிள்ளைகளும் எந்தளவிற்கு நன்மை பெறுகிறார்கள் என ஒப்பிடுவதற்கு பயன்படுகிறது. பாலின ரீதியாக பொதுசெலவினங்களின் பரம்பலினை மதிப்பிடுவதற்கு வீட்டுத்துறை ஆய்வில் இருந்து பெறப்பட்ட தரவுகள் வழமையாக பயன்படுத்தப்படுகிறது.

உதாரணமாக உலக வங்கி மற்றும் கானா அரசாங்கம் விரிவுபடுத்தப்பட்ட வறுமை ஆய்வினை 1993 - 94 காலப்பகுதியில் நடாத்தினார்கள். கானாவில் பொது செலவினத்தின் குறிப்பாக கல்வியில், பாலின வேறுபாட்டுப்பரம்பலில் நிலைத்திருப்பதை சான்றாக அடையாளப்படுத்தினர். இந்த பாலின ஒருபக்கச்சார்பானது, கூடிய வறுமையுள்ள வீடுகளில் அதிகமாக இருந்தது அவதானிக்கப்பட்டது (Elson, 2001).

பாலினம் - பிரிக்கப்பட்ட பொது வருவாய் நிகழ்வுப் பகுப்பாய்வு:

ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண்களினால் நேரடி மற்றும் மறைமுக வரிகளாகவும் அத்துடன் ஏனைய பாவனை கட்டணங்களாகவும் செலுத்தப்பட்ட ஒப்பீட்டளவு இம்முறையில் கணிப்பிடப்படுகிறது. வேறு வகையில் கூறுவதாயின், இப் பகுப்பாய்வானது தனிநபர்களின் வேறுபட்ட பிரிவினர்களுக்கிடையே (பெண்கள், ஆண்கள், பெண்பிள்ளைகள் மற்றும் ஆண்பிள்ளைகள்) வரிகளும் ஏனைய பாவனை கட்டணங்களும் எவ்வாறு பாதிக்கிறது என கணிப்பிடுவதற்கு பகுப்பாய்வு பயன்படுத்தபட முடியும். உதாரணமாக, கனடாவில் உள்ள ஒரு தன்னார்வத்தொண்டு நிறுவனம் ஆண்கள் மற்றும் பெண்கள் தொடர்பான தனியார் ஓய்வுகால சேமிப்பகளுக்கான வரி நன்மைகளின் நடப்பு முறைமையின் வேறுபட்ட தாக்கங்களினை விளக்கினார்கள். இது கனடா அரசாங்கத்தினால் அனுசரணையளிக்கப்பட்ட ஓய்வூதியத்திட்ட மறுசீரமைப்புக்கு பிரச்சாரமாக ஊக்குவிக்கப்பட்டது (UNIFEM,2003).

பாலினம் - பிரிக்கப்பட்ட சரியான நேர பாதீட்டின் தாக்கத்தின் பகுப்பாய்வு:

இந்த ஆய்வு உத்திகள் அரசாங்க பாதீட்டு ஒதுக்கீடுகளுக்கும் வீட்டுத்துறை உறுப்பினர்கள் அவர்களுடைய நேரத்தை செலவிடுவதில், வீட்டு நேரத்தில் பணியில் ஈடுபடுகின்ற நேரத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பவற்றுக்கு இடையிலான தொடர்பினை பரிசீலிப்பதற்கு தரவுகள் பயன்படுத்தப்படுகிறது. இவ்வகை ஆய்வு கொள்கை பகுப்பாய்வுக்காக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதற்காக ஊதியம் செலுத்தப்படாத தொழிலாளர்களின் அளவினை வெளிப்படுத்துவதற்கு உதவுகிறது. மேலும், அதிகளவான பெண்கள் ஆண்களைவிட ஊதியம் இல்லாமல் தொழிலில் ஈடுபடுவதனால் குறிப்பாக பெண்களுக்கு இவ் ஆய்வு உதவுகிறது. முறைசார் தொழிலாளர் சந்தையில் அவர்களுடைய தொழிலானது அநேகமாக கணக்கில் எடுக்கப்படாத தன்மை காணப்படுகின்றமையினால் தேசியவருவாய் கணக்கில் இந்த விகிதம் சேர்க்கப்படவில்லை.

உதாரணமாக சாம்பியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் சாம்பிய பெண்கள் சுகயீனமுற்ற குடும்ப உறுப்பினர்களினை பராமரிப்பதற்கு வைத்தியசாலையில் உணவு வழங்கல் மற்றும் மருத்துவ கவனிப்பு போன்றவற்றிற்கு அதிக நேரத்தினை செலவழித்ததுடன் விவசாயத்திற்கு குறைவான நேரத்தினையும் செலவழித்தனர் (Esim, 2000).

பாலினம் - விழிப்புணர்வு பாதீட்டு கூற்று:

இது பாலின சமத்துவம், வேலைவாய்ப்பிலும் பயிற்சியிலும் பாலின சமநிலையை இலக்குப்படுத்திய செலவினத்தின் பங்கு போன்ற வேறுபட்ட குறிகாட்டிகளின் மூலமான பாலின சமத்துவத்திற்கான மற்றும் பிரதானமாக பெண்களினால் பயன்படுத்தப்படுகின்ற பொதுச்சேவைகளுக்கான செலவினங்களின் பங்கு போன்றன அரசாங்க பாதீட்டின் தாற்பரியங்களின் சுருக்கமான ஓர் வருடாந்த அறிக்கையாகும்.

உதாரணமாக 2001 இல் பிரான்ஸ் அரசாங்கம் பாதீட்டுடன் பாலின சமத்துவத்தினை ஊக்குவிப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவினத்தின் பகுப்பாய்வு இணைப்பைப் பயன்படுத்துவதன் மூலம் முதல் நடவடிக்கை எடுத்திருந்தது.

இலங்கையில் பாலின பாதீட்டு செய்முறை

இலங்கையின் தேசிய பாதீடு பாலின நடுநிலை கொள்கை கூற்றாக இருப்பதனால் ஆண்க ளுக்கும் பெண்களுக்குமாக வெவ் வேறான ஒதுக்கீடுகளை வழங்குவ தில்லை. ஆனால், தாய் மற்றும் சேய் பராமரிப்பு சேவைகள், பிரி வென கல்வி, பெண் சாரணியம், மற்றும் ஆண் சாரணர் போன்ற அமைப்புகளுக்கு சில சந்தர்ப்பங் களில் பெண்கள், ஆண்கள் மற் றும் பிள்ளைகளை குறிப்பாக இலக்குப்படுத்திய ஒதுக்கீடுகளை மேற்கொள்கிறது. எவ்வாறாயினும் ஒதுக்கீடுகளின் நோக்கங்கள் மற் றும் ஒதுக்கீடுகளின் பாலின அடிப் படையிலான நுகர்வு அதே போல் பயனாளியின் தாக்கம் போன்றவற்றினை புரிந்து கொள் ளல் முக்கியத்துவமாக இருக்கி றது.

பாலின பாதீட்டு செய்முறையில் இலங்கை இன்னமும் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. 1997 இல் பொதுநலவாய செயலகத்தி னால் இலங்கையில் முதலாவது முயற்சி மேற்கொள்ளப்பட்டது (Chakraborty,2003) முதல் பாலின பாதீடு இலங்கையின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் சுகாதா ரம், கல்வி, பொது வேலைவாய்ப் புத்துறை, விவசாயம், தொழிற் துறை மற்றும் சமூக சேவைகளை உள்ளடக்கியது. 2000ஆம் ஆண் டில் 'இலங்கையின் தேசிய பாதீடு நடைமுறைக்கு வருதல்' என்ற தலைப்பிடப்பட்ட அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் கல்வி, சமூக சேவைகள் மற்றும் சுகாதா ரம் போன்ற பொதுச் செலவினத் தின் சமத்துவமான கிடைப்பனவுத் திறன் மற்றும் பயன்பாடுகளுக் கான விடயங்கள் காணப்பட்டன. உதாரணமாக கல்வித்துறையில் கிட்டத்தட்ட 48 வீதமும் சுகாதாரத் துறையில் 56 வீதமும் சமூக சேவைத்துறையில் 57 சதவீதமும் மீண்டுவரும் செலவினத்தில் பெண்கள் நன்மையடைந்தார்கள். அதற்கிணங்க, இலங்கையில் அத் துறைகளுக்கு பெண்களுக்கான நிதி அதிகரிப்பு அவசியமில்லை என அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அது பாலின சமத்துவமின்மை யினை அதிகரிக்கக்கூடிய நடப்பி லுள்ள அரச நிகழ்ச்சித்திட்டங் களின் மற்றும் விளைவு கண்கா ணிப்பு முறைமையில் பொருத்த மான நன்மைகளினை வகுப்பதும் அடிப்படையில் மதிப்பாய்வு அவ சிப்படுகிறது என வலியுறுத்து கிறது. வளங்களின் ஒதுக்கிடுகளில் பாலின விழிப்புணர்வுள்ள திட்ட மிடல் பொறிமுறையினை நிறுவுவ தற்கு இந்த முன்னோடி செய் முறை உதவியது. செய்முறையின் அடையாளப்படுத்தல்களின் அடிப் படையில், பெண்கள் விவகார, கல்வி, சுகாதாரம், சமூக சேவை கள், தொழிற்துறை மற்றும் விவ சாய அமைச்சுக்களின் பிரதிநிதி களை மற்றும் புள்ளிவிபரவியல் கணக்கெடுப்பு திணைக்களம் உள் ளடக்கிய அமைச்சுகளுக்கு இடை யிலான குழு, இலங்கையில் பாலின பாதீடிடல் கருத்திட்டத்தி னையும் முன்னேற்றத்தினையும் செயல்திறனையும் மதிப்பாய்வு செய்வதற்கான அமைப்பினை வைத்திருந்தது.

பல்வேறுபட்ட நிறுவனங்களினால் பிரதானமாக பெண்கள் விவகார அமைச்சு மற்றும் UNIFEM இனால் வழிநடத்தப்படுகின்ற ஏனைய சில தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் பல பயிற்சி பட்ட றைகள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்ட பொழுதிலும் இலங் கையில் இரண்டாவது பெரிய பாலின பாதீட்டு பகுப்பாய்வு முயற்சி 2003 ஆம் ஆண்டிலேயே UNIFEM இன் ஒருங்கிணைப் புடன் பெண்கள் விவகார அமைச் சினால் மேற்கொள்ளப்பட்டது (Chakraborty, 2003, Premaratne and Liyanarchchi 2004). இது 2003 ஆம் ஆண்டின் பாரிய பாலின முன்னிலைப்படுத்தப்பட்ட பகுப் பாய்வின் தேசிய பாதீடாகும். இங்கே ஆண்கள் மற்றும் பெண் களின் கிடைப்பனவுத்திறன் மற்றும் பொருளாதார கட்டமைப்பினுள் அதிகாரம் போன்றவற்றில் முக்கிய வேறுபாடுகள் இருந்தன. பெண் கள் பொருளாதார தீர்மானமெடுத் தலில் அரிதாகவே பிரதிநிதித்து வப்படுத்துகின்றனர். பொருளாதார கொள்கை வகுப்பதில், பெண்க ளிதும் பாலினத்தினதும் தொடர் பான அக்கறைகள் இல்லாததாக இருக்கின்றது. பொருளாதார கட்ட மைப்புக்கள் மற்றும் கொள்கைக ளானவை பெண்களினதும் ஆண்க ளினதும் கிடைப்பனவுத்திறன், பொருளாதார வளங்கள், பொரு ளாதார அதிகாரம் போன்றன தொடர்பாக தொடர்ச்சியாக தனிப் பட்ட மட்டத்திலும் குடும்பமட்டத் திலும் அதேபோல் சமூகமட்டம் முழுவதிலுமாக வேறுபட்ட தாக் கத்தினை ஏற்படுத்துகிறது.

பொருளாதார கட்டமைப்பினுள் கிடைப்பனவுத்திறனும் அதிகாரமும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் குறிப்பிடத்தகக் வேறு பாடுகள் இருக்கின்றன. பொருளா தார தீர்மானமெடுத்தலில் பெண் கள் அரிதாகவே பிரதிநிதித்துவம் பெறுகின்றனர். பெண்களினதும் மற்றும் பாலினத்தினதும் அக்கறை கள் பொருளாதார கொள்கை வகுப்பதிலிருந்தும் விலகியிருக் கிறது [2]. (CEDAW அறிக்கை 2011, Kodikara 2009, Rajasingham Senanayake 2004. பொருளாதார கட்டமைப்புகள் மற்றும் கொள்கை கள் பெண்களினதும் ஆண்களின தும் கிடைப்பனவுத்திறன் மற்றும் பொருளாதார வளங்கள், பொரு ளாதார அதிகாரம் தொடர்ச்சியாக தனிப்பட்ட மட்டத்திலும் குடும்பமட் டத்திலும் அதேபோல் சமூகத்தி லும் முழுவதுமாக வேறுபட்ட தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

பெண்களுக்கான அல்லது பெண் கள் மற்றும் ஆண்கள் தொடர்பான குறிப்பிட்ட கொள்கைகள், நிகழ்ச் சித்திட்டங்கள் மற்றும் செலவினங் களின் வேறுபட்ட விளைவுகள் தொடர்பாக மதிப்பிடுவதற்கு வசதி யாக பாலின பாதீட்டு முன்னெ

PUBLIC LIBRARY
JAFFNA

டுப்புகளுக்கு அதிகரித்த பாதீட்டு ஒதுக்கீடுகளை செய்யுமாறு பிரச்சாரத்தினை அரச அமைச்சுகளுக்கும், திணைக்களங்களுக்கும் தன்னார்வத்தொண்டு நிறுவனங்களுக்கும் பங்குதாரர்களுக்கும் செய்தலைக் காட்டிலும், அரச கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் ஊக்குவிப்பதற்கான செலவுகளை உறுதிப்படுத்துவதற்கான முக்கியகருவியாக பாலின பாதீட்டினை பயன்படுத்துவது இலகுவாக காணப்படுகிறது.

அரச பாதீட்டில் பாலின பகுப்பாய்வின் இறுதி நோக்கம் திட்டமிடல் மற்றும் பாதீடலில் அடிப்படையாக இருக்கின்ற மாதிரிகளினுள் பாலின மாறிகளை ஒருங்கிணைப்பதாக இருக்கிறது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தொடர்பாக 2014ஆம் ஆண்டு பாதீட்டின் தாற்பரியங்கள்.

பலவீனத்தை தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாக பாலினம் காணப்படுகிறது. ஆகையினால் பொருளாதார நிலைமாற்ற காலப்பகுதியினுள் பெண்களுக்கு குறிப்பாக அதிகரித்த வறுமை மற்றும் பாதுகாப்பின்மை இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. வறுமையை குறைக்கின்ற பொருளாதார மறுசீரமைப்பானது பெண்களை அடையாமல் இருக்கக்கூடும். பொருளாதார வாய்ப்புகளில் பெண்களின் பிரதிபலிப்புக்கான தடைகளினை குறைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட முடியும். அவற்றில் சில பெண்களின் மீதான நேரத்தின் சுமையினை குறைப்பதாக இருக்கிறது. உதாரணமாக நீர் வழங்கல், குழந்தை பராமரிப்பு வசதிகள், பாதை மற்றும் மின்சாரம் என்பன போன்ற சமூகக்கட்டமைப்பு ஏற்பாட்டில் மேம்பாடுகள் ஊடாக.

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் பிள்ளைகளின் போசாக்கின்மை, குறைப்பதற்கான விசேட முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுவதற்கு தொடர்புபட்ட நிறுவனங்களின் 2014ஆம் ஆண்டுக்கான முன்மொழிவுகள் கவனிக்கத்தக்கது. மேலும் நல்ல போசாக்கு ஊக்குவிப்பை நோக்க மாகக்கொண்டு வீடுகளில் உற்பத்திசெய்யப்பட்ட மரக்கறிகள், பால் மற்றும் முட்டை போன்றவற்றினை பிரபல்யப்படுத்துவதற்கு திவிநெகும / சமுர்த்தி திட்டங்கள் போன்றவை பயன்படுத்தப்படும். அண்மைய பாதீட்டிலும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறையினை தடுப்பதற்கு அனுசரணையளிப்பதற்கு பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்ற வெளிக்களமட்ட அலுவலர்களுக்கு 300 மில்லியன் ஒதுக்குவதற்காக முன்மொழியப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான பெண்கள் பரந்தளவிலான உயர்ந்த தரத்திலான நுண் தொழில்முயற்சிகளில் வெற்றிகரமாக ஈடுபடுகின்றனர். அதேசமயம் குடும்ப வருவாய்க்கான முக்கிய ஆதாரமாக இருப்பதுடன் எம் மக்களுக்கு தொழில்வாய்ப்பினையும் ஏற்படுத்துகிறது. நிதியளிப்பு நிறுவனங்கள் மற்றும் அரசசேவை வழங்குநர்களினால், நிலம் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பல்வேறுபட்ட கொடுப்பனவுகள் விதிக்கப்படுதல், பற்றாக்குறையான தொழில் முதலீடு, சிக்கலான பெயர்களுடன் கூடிய வரிகள், சிறிய கடன்களுக்காக பாரம்பரிய பிணைகளின் வற்புறுத்தல்கள், நிர்வாக இறுக்கங்களுடன் அவர்களுடைய செயற்பாடுகளுக்கான போதிய அங்கீகரிப்பின்மை போன்ற காரணிகளினால் தொழில் முயற்சிகள் வரையறுக்கப்படுகிறது என தொழில் முயற்சியாளர்கள் எங்களுக்கு விளக்கமளித்தனர்.

மேலும், நுண்தொழில் பெண் முயற்சியாளர் கடன் பாதுகாப்புத்திட்டம் அமுல்படுத்துவதற்கு பிராந்திய அபிவிருத்தி வங்கிகள், வணிக வங்கிகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான வங்கியியல் அலகுகள் உத்தரவாதம் அவசியமின்றி ரூபா. 250,000 வரையிலான தொழில் மூலதன கடனினை வழங்குவதற்கு முன்மொழியப்படுகிறது. அவ்வாறான கடனினைப் பெறுவதற்கான வயது வரம்பு 68 வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் அவ் வயதிற்கு அப்பால் மேலதிக வாய்ப்புக்கான தகுதி பெறுவதற்கு நியமிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர் ஒருவரை பரிந்துரைக்க முடியும். ஆகையினால் பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் பெண் தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்திக்காக பாதீட்டு வருடம் 2014 மற்றும் 2015ஆம் ஆண்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது.

இன்னொரு முக்கிய பாதீட்டு முன்மொழிவாக ரூபா 500 கொடுப்பனவு நிபந்தனைக்கு உட்பட்டு சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு திவிநெகும உரிமை அட்டை விநியோகித்தல் காணப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளில் உள்ளூர் அதிகாரிகளுக்கு செலுத்துவதற்கு அவர்கள் விலக்களிக்கப்படுகிறார்கள். இது செலவுக்கான பகுதிகளினை குறைப்பதன் மூலமாக இலங்கை மக்களின் கணிசமான எண்ணிக்கையுடையோரின் சுய தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கிறது. அதற்கு மேலும் ரூபா 50,000 இற்கு குறைந்த மாதாந்த புரள்வுள்ள வியாபாரத்தில் ஈடுபடுகின்ற சிறிய வர்த்தகர்களுக்கு உள்ளூர் நிறுவனங்களினால் விதிக்கப்படுகின்ற அனைத்து வரிகளில் இருந்தும் விலக்கு அளிப்பதற்கான முன்மொழிவானது செலவினை குறைப்பதற்காக போராடுகின்ற சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை மேலும் ஊக்குவிக்கும்.

முடிவு

பலவீனத்தை தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாக பாலினம் காணப்

படுகிறது. ஆகையினால் பொருளாதார நிலைமாற்ற காலப்பகுதியினுள் பெண்களுக்கு குறிப்பாக அதிகரித்த வறுமை மற்றும் பாதுகாப்பின்மை இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. வறுமையை குறைக்கின்ற பொருளாதார மறுசீரமைப்பானது பெண்களை சென்றடையாமல் இருக்கக்கூடும். பொருளாதார வாய்ப்புகளில் பெண்களின் பிரதிபலிப்புக்கான தடைகளினை குறைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட முடியும். அவற்றில் சில பெண்களின் மீதான நேர சுமையினை குறைப்பதாக இருக்கிறது. உதாரணமாக நீர் வழங்கல், குழந்தை பராமரிப்பு வசதிகள், பாதை மற்றும் மின்சாரம் என்பன போன்ற சமூகக்கட்டமைப்பு ஏற்பாட்டில் மேம்பாடுகள் ஊடாக உதாரணமாக சமுர்த்தி திட்டத்தின் மூலமாக பெண்களின் பெரும்பாலான வர்கள் நன்மை அடைந்திருக்கிறார்கள் என அண்மைய ஆய்வுகளின் இருந்து அறியப்பட்டது (நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, 2014).

ஓட்டுமொத்தமாக இது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு நல்ல பாதீடாக காணப்படுகிறது. ஆனால் எந்தவொரு தேசிய பாதீடும் நாட்டிற்கு முக்கிய ஆவணமாக இருப்பதனால் இவ்வகை முன்மொழிவுகள் எல்லாவற்றினையும் உள்ளடக்கிய கட்டமைப்பாக இருக்கவேண்டும். இது மரபுவழியிலும் பார்க்க பரந்துபட்ட பிரச்சினைகளை மையப்படுத்தியிருக்கிறதாக தோன்றுகிறது. உதாரணமாக பாலினம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தொடர்பான பிரச்சினைகள் நிதி பற்றாக்குறையினால் மட்டும் தொடர்பானதல்ல. ஓய்வூதிய வயதில் சமூக பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும், சமூக விழுமியங்களும் நெறிமுறைகளும் போன்ற பல அடிப்படை விடயங்களும் காணப்படுகின்றன. வணிகத்தில் அரசின் முனைப்பான பங்களிப்பு மற்றும் மானியத் தலையீடுகள் சில பாதீட்டு முன்மொழிவுகளின் ஏனைய ஆபத்துக்களாக இருக்கின்றன. இது காலப் போக்கில் போட்டித்திறனுக்கும் தனியார்த்துறைக்கும் ஆபத்தாக இருக்கக்கூடும்

துணைநூற் பட்டியல்கள்

Balmori, H. H. (2003). *Gender and Budget Overview Report.* London: BRIDGE.

Chakraborty, L. S. (2003). *Budgetary Allocations and Gender in Sri Lanka.* New Delhi: UNIFEM, South Asia .

Committee on the Elimination of Discrimination against Women (CEDAW) 2011, *United Nations Convention on the Elimination of all Forms of Discrimination against Women.* United Nations.

Elson, D. (2001). Gender Responsive Budget Initiatives: Key Dimensions and Practical Examples. *Gender Budget Initiatives* (pp. 15-28). New York: United Nations Development Fund for Women (UNIFEM).

Esim, S. (2000). Impact of Government Budgets on Poverty and Gender Equality. *Inter-Agency Workshop on Improving the Effectiveness of Integrating Gender into Government Budgets.* London: International Center for Research on Women (ICRW).

Government of India, Ministries and Departments. (2006). *Startegies and Tools for Gender Budgeting.* New Delhi: Government of India Ministries and Departments.

ILO. (2005). Overview of Gender-responsive Budget Initiatives. Bureau for Gender Equality

Kodikara, C., 2009. The Struggle for Equal Political Representation of Women in Sri Lanka, A Stocktaking Report for the Ministry of Child Development and Women's Empowerment and the United Nations Development Programme, Available at http://www.undp.lk/Shared percent20Documents/WPEpercent20FINALpercent20PDF.pdf [Accessed 10th March 2013].

Ministry of Finance and Planing. (2014). *Budget 2014.* Colombo: Government of Sri Lanka.

Premaratne S.P and Liyanarchchi, S (2004) *Gender Analysis of Inra- and Inter Household Budget: An Anti-poverty Programme,* Unpublished, Center for Women's Resaerch (CENWOR) and United Nation Development Fund for Women (UNIFEM).

Rajasingham-Senanayake, D., 2004. Between Reality and Representation : Women's Agency in War and post-conflict Sri Lanka, *Cultural Dynamics*

16(2/3): 141-168

UNIFEM. (2003). Gender Budget Initiatives. New York: The United Nations Development Fund for Women (UNIFEM).

அடிக்குறிப்புக்கள்

1. துரதிர்ஷ்டவசமாக, அக்குழு தற்பொழுது தொழிற்படுவதில்லை.

2. சமூக முரண்பாடுகள் மற்றும் யுத்தங்கள் அதன் விளைவால் உருவான விதவைகள் வழியே இலங்கைத்தீவினை பல வருடங்களாக பெண் தலைவர்கள் ஆட்சி செய்தார்கள் (Rajasingham-Senanayake, 2004). எனினும் இலங்கையின் விடயத்தில், கொள்கைகளிலும் பொது வாழ்விலும் தீர்மானமெடுத்தல் மட்டத்தில் பெண்களின் பங்களிப்பு அதிகுறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறது என CEDAW குழு அறிக்கை 2011ஆம் ஆண்டில் குறிப்பிட்டது. இலங்கையானது பாரபட்சமின்மைக்கான சட்டக் கட்டமைப்பு மற்றும் தேசிய பொறிமுறை என்பவற்றை போதியதாக கொண்டிருக்கவில்லை (CEDAW குழு அறிக்கை 2011). பெண்களுக்கான கொள்கைகளில் பல

தடைகள் காணப்படுகின்றன. Kodikara, 2009 இற்கிணங்க, இந்த தடைகள் மூன்று அடிப்படை மட்டங்களில் தொழிற்படுகிறது.

(1) தனிப்பட்ட மட்டத்தில்: சமூக கலாசார, பொருளாதார மற்றும் உளவியல் தடைகளின் நிமித்தம் தொழில் கொள்கைகளுக்காக குறைந்தளவிலான பெண்கள் ஆண்களிலும் பார்க்க சுயமாக தெரிவுசெய்யப்படுகின்ற இடங்களில் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது.

(2) அரசியல் கட்சிகளின் மட்டத்தில்: தேர்தலுக்கான அபேட்சகராக இருப்பதற்கு பெரும்பாலாக புறக்கணிக்கப்படும் இடங்களில் இவ்வாறான தடை காணப்படுகிறது..

(3) தேர்தல் தொகுதி மட்டத்தில்: அபேட்சகர்களுக்கு வாக்காளர்கள் வாக்களிக்காத பொழுது இவ்வாறான தடை காணப்படுகிறது.

(11 ஆம் பக்க தொடர்ச்சி)

கடந்தகால அனுபவம் தொடர்பாக மத்திய வங்கியின் 2013ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இருந்து மேற்கோள் கீழே கொடுக்கப்படுகிறது.

"2013 ஆம் ஆண்டில் வெளிநாட்டு மூலங்களில் இருந்து கடன் வாங்கல்களை குறைப்பதற்காக அரச பற்றாக்குறையின் நிதியளிப்புக்கு உள்நாட்டு வளங்கள் மீது பெரும் நம்பிக்கை வைக்கப்பட்டது. அதற்கிணங்க, ஒப்பீட்டளவில் 2013ஆம் ஆண்டு பாதீட்டு மதிப்பீட்டில் இலக்கிடப்பட்ட 71 வீதத்தில் மிகுதி வெளிநாட்டு மூலங்களினூடாக நிதியளிக்கப்படுகையில் 2013 ஆம் ஆண்டில் மொத்த அவசிய நிதியளிப்பு ரூபா. 516.1 பில்லியனில் 76 வீதம் உள்நாட்டு நிதியளிப்பு பங்களித்தது. அதன் விளைவாக உண்மையாக ரூபா. 359.4 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 2013ஆம் ஆண்டில் தேறிய உள்நாட்டு நிதியளிப்பு ரூபா. 392.4 ஆக பெறுமதியிடப்பட்டது. பாதீட்டு மதிப்பீடுகளிலும் பார்க்க குறிப் பிடத்தக்களவு குறைவாக காணப்படாதமையினால் பற்றாக்குறை நிதியளிப்பில், வங்கியல்லா துறையிலிருந்து கடன்வாங்கலை அரசாங்கமானது அதிகளவு நம்பியிருந்தது. அதன் பலனாக வங்கித்துறையில் இருந்து தேறிய கடன் வாங்கல் 2013ஆம் ஆண்டில் ரூபா. 297 பில்லியன் இது அவ்வருடத்திற்காக மதிப்பிடப்பட்ட உண்மையான மதிப்பீட்டினை விட ரூபா. 70 பில்லியன் மேலதிகமாக இருந்தது. மேலும் 2012 ஆம் ஆண்டில் வங்கித்துறையில் இருந்து கடன்வாங்கப்பட்டதில் இருந்து ரூபா. 131.5 பில்லியன் உயர்வாக இருந்தது. (மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை 2013, பக்கம்-175)

முடிவு

முடிவாக, அரசாங்கமானது பாதீட்டு மதிப்பீடுகளுடன் ஒழுங்குபடுத்துவதற்கு தோல்வி அடைந்திருப்பதை கடந்த அண்மைக்காலங்களில் உண்மையில் கைவரப் பெற்ற விளைவுகளின் முடிவாக காண்கிறோம். யதார்த்தமற்ற திட்டமிடல் மற்றும் அர்ப்பணிப்பு இல்லாத அமுலாக்கம் ஆகிய இரண்டும் பலவீனமான அரச முகாமைத்துவத்தில் நிலைத்திருக்கிறது என்பதனை உட்கிடக்கையாக உணர்த்துகிறது. குறிப்பாக செலவின பக்கத்தில் அதேபோல் நிதியளிப்பு வழிமுறையிலும் இது சான்றாக இருக்கிறது.

கால அடிப்டையிலும் நிதியாண்டு தொடங்குவதற்கு முன்கூட்டியே செலவின முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்ட பொழுதிலும் அதே வேளை, அதேநாளின் நடு இரவில் இருந்து பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகிற பாதீடு பாராளுமன்றத்தின் முன் அனுமதிக்கப்படுவதையும் அத்துடன் சில செலவின முன்மொழிவுகள் நிதிவருடத்தின் இறுதிவரை ஒத்திவைக்கப்படுதல் போன்ற அர்த்தப்பாடுள்ள பாதீடானது அமுல்படுத்துவதன் நிமித்தம் பொருத்தப்பாடின்மை எழுவது அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அவ்வாறான பொருத்தப்பாடின்மைகளை எதிர்வுகூறல் தவறுகள் என ஒதுக்க முடியாது. அவற்றில் பல பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட இடைக்கால நீண்டகால திட்டங்களின் மீதான பணியாற்றுகையின் விளைவினால் உருவாவதைக் காட்டிலும் ஆளும் கட்சியின் அரசியல் அக்கறையின் நிமித்தம் உருவாகிறது. எவ்வாறாயினும், இப்பிரச்சினையானது ஆய்வாளர்களின் பரந்தளவிலான ஆய்வுக்கான அவசியப்பாடு காணப்படுவதுடன் நாட்டின் கொள்கை வகுப்பாளர்களின் முற்றுமுழுதான கவனத்தினையும் ஈர்க்கவேண்டும்.

துணைநூற்பட்டியல்.

1. *Atapattu, D. (2013). "Using Fiscal Policy to Promote Growth and Development." Economic Review 39(1& 2):27-29.*

2. *Central Bank of Sri Lanka. (2013). Annual Report 2013, Colombo.*

3. *Ministry of Finance and Planning. (2013). Government Budget Speech2014, Colombo*

■

சிறப்பு கட்டுரை

இலங்கையில் கட்டமைப்பு ரீதியிலான வன்முறையினை குறைப்பதற்காக தேயிலை சுற்றுலாத்துறையின் ஆற்றல்.

கலாநிதி. டி.எல்.ஏ.எச்.சம்மிக்க
சிரேஷ்ட விரிவுரையாளர்
பொருளியல் துறை
ருகுணு பல்கலைக்கழகம்

அறிமுகம்

கட்டமைப்பு ரீதியிலான வன்முறை (மோதல்களுக்கு காரணமான அனைத்தையும் வர்ணிப்பதற்கு உள்ளடக்கிய சொல்லாகும்) யின் காரணமாக இலங்கையில் பெரும் துன்பகரமான நிலை காணப்படுகிறது. Galtung (1969) என்பவரின் கருத்துப்படி, பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பு காரணமாக மனித ஆற்றலின் மீதான எந்தவொரு முரண்பாட்டினையும் இந்தச்சொல் குறிக்கிறது. வளங்கள் அதேபோல் அரசியல் அதிகாரம், சுகாதார பராமரிப்பு மற்றும் சட்டநிலைப்பாடு போன்ற அனைத்து வடிவங்களினதும் சமத்துவமில்லாத கிடைப்பனவு கட்டமைப்பு வன்முறைக் கானவையாக இருக்கின்றன. கட்டமைப்பு வன்முறைக்கு ஏதுவான காரணி தொடர்பாக Swan இனுடைய விளக்கமானது Galtung(ibit) இனால் எடுத்துக்கூறப்பட்ட கருதுகோளின் அடிப்படையில் காணப்படுகிறது. Swan (1999) இன் கருத்துப்படி, வன்முறையின் நேரடி மற்றும் கண்ணுக்கு புலப்படக்கூடிய வடிவங்களில் அடிப்படை ஆதாரமாக காணப்படுகின்ற சிகிச்சை அவசியப்படுபவை "வன்முறையின் மறைமுக வடிவங்களாகும்." எனினும் இது மிகவும் நுட்பமானது. ஏனெனில் அவைகளின் பாதிப்பு நீங்கலாக, வன்முறையில் இழைத்த குற்றம் அமைதியானதும் கண்ணுக்கு புலப்படாததும் ஆகும். மறைமுக வன்முறை சமூக அமைப்புடன் இணைந்ததான வன்முறையாகும். இந் நுட்பமானது சில பேருக்கு ஆதரவாகவும் மற்றவர்களுக்கு எதிராகவும் பாரபட்சம் காட்டுகிறது. அதன் விளைவாகச் சமூகத்தில், சிலர் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு சலுகைகளும் பெறுகின்றவேளை மற்றவர்கள் இடர்பாடுகளுக்கும் சுரண்டல்களுக்கும் முகம்கொடுக்கிறார்கள். இது சமூக பொருளாதார சமத்துவமின்மையை தீவிரப்படுத்துகிறது. ஏனெனில், இது நிறுவனமயமாக்கப்படுகிறது அத்துடன் சமூக பொருளாதார மற்றும் அரசியல் முறைமைக்கு உள்ளார்ந்தமாக இருக்கிறது. இது பொதுவாக கட்டமைப்பு வன்முறையாக குறிப்படப்படுகிறது. (பக்கம் 17).

கடந்த இரண்டு தசாப்தங்களின் பொழுது, அபிவிருத்தி அடைந்துவருகின்ற உலகத்தில் சுற்றுலாத்துறையின் தாக்கங்களினால் சூழவுள்ள பிரச்சினைகள் தொடர்பாக குறிப்பிடத்தக்களவு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறிப்பாக, இத்துறையின் மீதான பங்களிப்பு பொருளாதார அபிவிருத்தியை நோக்கியதாக உருவாக்கமுடியும் (Sharply and atelfer: 2002). சுற்றுலாத்துறையானது பொருளாதார அபிவிருத்தி, கலாசாரங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர மரியாதை ஊடாக கட்டமைப்பு வன்முறையினை குறைப்பதற்கு பங்களிப்பு செய்கின்றது. இலங்கையானது இரண்டரை வருட தசாப்த வன்முறை முரண்பாடுகளிலிருந்து மெதுவாக மீண்டு வந்துகொண்டிருக்கிறதுடன் அதன் கதாநாயகர்கள் இராணுவ ரீதியில் நசுக்கப்பட்டிருக்கிற பொழுதிலும், நல்லிணக்க, மீள்கட்டுமான மற்றும் மீள்புணரமைப்பு நெறிமுறைகள் மேற்கொள்வதற்கு மிக அவசியப்பாடு காணப்படுகிறது. இந்நிலைமையில், சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்தல் அமைதி ஊக்குவிப்பாளர் என்ற வகையில் வாய்ப்பாக இருக்கிறது. சுற்றுலாத்துறை ஊடான அமைதிக்கான சர்வதேச நிறுவனம் (IIPT's) 1988 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வன்கூவரில் "சுற்றுலாத்துறை: அமைதிக்கு இன்றிமையாத சக்தி" தொடர்பான அவர்களுடைய முதலாவது சர்வதேச மாநாட்டினை நடாத்தினார்கள். இது அமைதிக்கான சக்தியாக சுற்றுலாத்துறையின் பல பரிமானங்களை பரிசீலிப்பதற்கான கருத்துக்களமாக

பிரதான தேயிலை நுகர்வோர்கள்	வருடாந்த தேயிலை இறக்குமதி (மெ.தொ) 2002	வருடாந்த தேயிலை இறக்குமதி (மெ.தொ) 2006	வருடாந்த தேயிலை இறக்குமதி கணிப்பீடு (மெ.தொ) 2017
ரஸ்யா	1,62,601	2,46,700	3,28,000
ஏனைய விடுலைபெற்ற நாடுகளின் பொதுநலவாயம்	53,000	65,000	71,000
ஐக்கிய இராச்சியம்	1,36,598	2,02,500	2,35,000
அமெரிக்கா	93,474	89,100	92,300
பாகிஸ்தான்	97,827	1,15,500	1,19,100
யப்பான்	51,487	1,39,400	1,44,000

ஆதாரம்: FAO கைந்நூல் -2008

உயர் அளவு தேயிலை நுகர்வு நாடுகள்

உலக தரம்	நாடு	ஆளுக்குரிய வருடாந்த தேயிலை நுகர்வு
1	துருக்கி	7.52
2	மெறொக்கோ	4.34
3	அயர்லாந்து	3.22
4	மசிடோனியா	3.22
5	ஐக்கிய இராச்சியம்	2.74
6	சிலெல்சு	2.08
7	ஐக்கிய அரபு எமிரேட்	1.89
15	ரஸ்யா	1.21
24	யப்பான்	0.99

ஆதாரம்: FAO கைந்நூல் -2008

இருந்தது. சுற்றுலாத்துறையின் ஆற்றல், மனிதகுலத்தின் வரலாற்றில் மிகப்பெரிய அமைதிக்கால இயக்கமாக இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டது. ஏனெனில், இது மக்களின் கலாசாரம், பொருளாதாரங்கள், பாரம்பரியங்கள், மரபுரிமை மற்றும் சமயம் போன்றவற்றுடன் தொடர்புபடுகிறது.

வெகுசன சுற்றுலாத்துறையில் இருந்து மாற்றீட்டு சுற்றுலாத்துறை

விமர்சகர்களின் கருத்துகளுக்கு இணங்க கட்டமைப்புரீதியான வன்முறைகள் நிறைந்திருக்கிற வெகுசன சுற்றுலாத்துறையிலும் பார்க்க எதிர்மறையான தாக்கங்களினை கொண்டுள்ள இச்சுற்றுலாத்துறை அமைதியினை ஊக்குவிப்பதற்கான அதன் இயலுமைக்கு சிறிதளவு நம்பிக்கையைக் கொடுக்கின்றது. Hills மற்றும் Lundgren (1977) ஆகியோர் சிறிய தீவுகளின் பொருளாதாரத்தினை இலக்குப்படுத்தினார்கள். சுற்றுலாத்துறையுடன் இணைந்த சமத்துவமற்ற பொருளாதார மற்றும் சமூக தாக்கங்களின் பின்னணியில் கரிபியன் (Caribbean) தீவில் மேற்கொள்ளப்பட்ட உயர் நுட்பமான ஆய்வில், மூன்றாம் உலக பொருளாதாரங்களில் அந்நியச்செலாவணியை ஈட்டுவதற்கான வழியாக சுற்றுலாத்துறை இருந்ததை விசேட முக்கியத்துவம் வாய்ந்த அவதானிப்பாக இருந்தது. பெருமளவு நாணய உருவாக்கத்தின் வெளியீடானது அவர்களின தேசிய பொருளாதாரத்திற்கு நேரடியாக திரும்பி வந்தது சான்றாக இருக்கிறது. இந்த வெளியீடானது அபிவிருத்தி அடைந்துவருகின்ற உலகத்தில் சுற்றுலாத்துறையின் உரிமையாண்மையும் கட்டுப்பாடும் உடைய அபிவிருத்தி அடைந்த நாடுகளின் முதன்மையான விளைவாக இருக்கிறது. பல்தேசிய கம்பனிகள் மற்றும் உலகளாவிய பெருநிறுவனங்கள் அவர்களின் மூலதனத்தின் ஒதுக்கீடுகள், நிபுணர்கள், தொழில்நுட்பம், மேலிருந்து கீழ்வரை நிபுணர்களினால் வழிநடத்தப்படுகின்ற முகாமைத்துவத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட உல்லாச விடுதிகள், சுற்றுலா நடத்துநர்கள், விமான நிறுவனங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றின் மூலமாக சுற்றுலாத்துறையின் நன்மைகளை பாரிய அளவில் கட்டுப்படுத்துகிறது. சுற்றுலாத்துறை தொடர்பான பெரும்பாலான கட்டுரைப்படைப்புக்கள் அபிவிருத்தியின் கீழ் குறிப்பிடப்பட்ட கோட்பாட்டுரீதியான கட்டமைப்புகளை சுற்றுலாத்துறை தொடர்பான பிரச்சினைகளாக ஏற்றுக்கொள்கின்றன. சார்பு கோட்பாடானது சுற்றுலாத்துறையில் பொருளாதார சுரண்டல் மற்றும் மைய - சுற்றளவு தொடர்பினை முக்கியத்துவப்படுத்துகின்றது. இது அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுக்கு (பெறப்பட்ட செல்வமானது குடியேற்ற நாட்டில் இருந்து தாய்நாட்டிற்கு மாற்றப்படுகிற இடங்கள்), அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் பொருத்தமான பெருநகர் மையங்கள் அவசியப்படுகிற புதிய வகை பெருந்தோட்ட பொருளாதாரத்துக்கு சமனானது என Mathews (1978) இனால் வலுவாக வாதிடப்படுகிறது. மூன்றாம் உலகத்தில் சுற்றுலாத்துறையில் அரசியல் பொருளாதாரம் தொடர்பாக Britton (1982) குறிப்பிடுகையில் பெரியளவிலான பல்தேசிய முதல்தர உலக கம்பனி விமானப்போக்குவரத்து, பரந்தளவிலான சுற்றுப்பயண ஏற்பாடுகள் மற்றும் தொடர் சுற்றுலா விடுதிகள் போன்ற சர்வதேச சுற்றுலாத்துறையினை கட்டுப்படுத்துகின்ற மற்றும் ஒருங்கிணைக்கின்ற சக்தியாக மாறியிருக்கிறது எனக்கூறினார். இந்த கம்பனிகள், சுற்றுலாத்துறை தொடர்பான உற்பத்திகளை விருத்திசெய்வதற்கான தொழிற்துறைப் பாகங்களை உருவாக்குவதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் சந்தைப்படுத்துவதற்கும் இயலுமானதாக இருந்தன. 1989இல் Britton, அவருடைய வாதத்தினை பின்வருமாறு திருத்தியமைத்தார். சுற்றுலா தொழிற்துறையின் வெளிநாட்டு உரிமையாண்மையை நிலையாக வைத்திருப்பதற்காக அவை அபிவிருத்தி அடைந்து வருகின்ற உலகத்தின் மீது சமனிலையற்ற மத்திய - சுற்றயல் உறவினை ஏற்படுத்துமுகமாக கட்டமைப்புரீதியான சார்புநிலையை விதிக்கிறது. பல்தேசிய கூட்டுத்தாபனங்கள் மூன்றாம் உலகத்தின் வளர்ச்சியற்ற நிலைக்கு இட்டுச்சென்றது என Muller (1979) அவதானித்தார். அதேநேரம், அவர்களுடைய நாடுகளில் சமூக, நிறுவன மற்றும் பொருளியல் சூழ்நிலைகளின் கீழ் சுற்றுலாத்துறையிலிருந்து எவ்வாறு குறிப்பிட்ட உயர்மட்ட நன்மைகளை பெறலாம் என சார்புகோட்பாட்டாளர்களினால் மற்றொரு நோக்கு வெளியிடப்பட்டது. Lea (1988) இன் கருத்துப்படி பொதுவாக அவர்களுடைய கடந்தகால காலனித்துவத்துடன் இணைக்கப்படுகிறமையினால் விருத்தியடைகின்ற பொருளாதாரங்கள் சுற்றுலாத்துறையினால் சுரண்டப்படுகிறது. போட்டி நிறைந்த ஏற்றுமதி மற்றும் கட்டமைப்புரீதியாக சீர்செய்யப்பட்ட கடன் திட்டங்களின் மூலமாக பல நாடுகளில் வெளிநோக்கிய சார்புடைய அபிவிருத்தியின் நவ - தாராளவாத மூலோபாயத்தின் மையப்பகுதியாக சுற்றுலாத்துறையானது ஊக்குவிக்கப்படுகிறது என நவ-தாராளவாத மாதிரியுரு வலியுருத்துகிறது. பெரி

நாடுகள்	2006	2007	2008	2009	2010	2011	2012
கனடா	14,863	11,862	9,745	10,785	21,231	26,090	50,694
ஐக்கிய அமெரிக்க இராச்சியம்	20,825	16,476	13,458	14,259	19,321	27,568	27,908
ஜேர்மனி	47,296	35,016	30,154	29,664	45,981	55,339	69,652
பிரான்ஸ்	22,703	9,540	10,703	16,205	31,119	50,175	55,473
நெதர்லாந்து	19,460	17,532	13,180	11,297	17,268	26,004	25,564
ரஸ்யா	8,000	13,530	15,831	11,390	13,312	21,291	30,156
இந்தியா	128,520	105,906	88,628	83,650	125,112	178,359	191,281
யப்பான்	16,217	14,274	10,578	10,931	14,998	20,951	23,421
அவுஸ்ரேலியா	24,900	22,993	21,378	26,023	37,025	51,411	50,039
மத்திய கிழக்கு	10,991	13,513	16,701	23,821	37,501	36,376	58,901
ஐக்கிய இராச்சியம்	88,531	94,089	80,214	81,682	105,938	106,895	111,928

ஆதாரம் : இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, வருடாந்த அறிக்கை - 2012/15

யதாக வடிவமைக்கப்பட்ட முதலாம் உலகத்தில் தளமிடப்பட்ட பல்தேசிய கம்பனிகளின் வெகுசன சுற்றுலாத்துறையினை இதற்குச்சான்றாக எடுத்துக்காட்டுகிறது அத்துடன் அபிவிருத்தியடைந்த அல்லது குறை அபிவிருத்திய டைந்த பிரதேசங்கள் அல்லது நாடுகளில் சுற்றுலாத்தளங்கள் இருக்கவேண்டும் என்பதற்காக அதற்கான கேள்வியினை நெறிப்படுத்துகிறது. ஒரு சுற்றுலா பயணிக்கான இலாப அளவு சிறிதாக இருந்தபோதிலும் இந்த கம்பனிகளுக்கு மொத்த நிதி இலாபமானது பொதுவாக பாரியதாக இருக்கிறது. ஏனைய இணைந்த பண்புகளாக உள்ளூர் வாழ்க்கைமுறை அல்லது குறை வருமானம் மற்றும் தாழ்நிலை தொழில்களில் ஈடுபடுகின்ற பெரும்பாலான உள்ளூர் மக்களின் வரையறுக்கப்பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட பங்கு போன்றன உள்ளடக்கப்படுகிறது. வெகுசன சுற்றுலாத்துறையின் இவ் யதார்த்தங்களானவை நவீன மயமாக்கலில் இருந்து அபிவிருத்தி மூலோபாயங்கள் மூலமாக ஊக்குவிக்கப்பட்டது. நவ-தாராள மயமாக்கலின் சார்புநிலை அதன் செயற்பாட்டில் கட்டமைப்புரீதியான வன்முறையினை ஏற்படுத்துகிறது. 1970 இல் அபிவிருத்தி கொள்கையானது "மாறிவருகின்ற அபிவிருத்தியாக" புதிய பரிமாணமெடுத்தது. இது செயல்முறையில் கட்டமைப்பு ரீதியான வன்முறையினை குறைப்பதற்கு முயலுகிறது. ஆரம்பத்திலிருந்து உள்ளூர் மக்களின் பங்களிப்புடன்கூடிய கீழிருந்து மேலான அணுகுமுறையின் மீதான இலக்குடன் இணைந்த மற்றும் பின் நவீனத்துவத்துடன் இணைந்த நவ-சனரஞ்சக அபிவிருத்தியினுள் ஒன்றுசேருகின்ற பல கருத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில அபிவிருத்தியுடன் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட நிலைத்திருக்கத்தக்க வடிவமாக ஆராய்ந்து அடையாளப்படுத்தப்பட முடியும். சிலவகை சூழலியல் சுற்றுலாத்துறை உட்பட சுற்றாடல் அணுகுமுறைகளை இயலுமைப்படுத்தல் அடிமட்ட அபிவிருத்திக்கு ஆதாரமளிக்கிறது. மற்றும் சமூக அடிப்படையிலான சுற்றுலாத்துறையானது வெகுசன சுற்றுலாத்துறையிலும் பார்க்க கூடுதலாக நிலைத்திருக்கத்தக்க பண்புகளினை வெளிக்காட்டுகிறது. நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி, பொதுமக்களின் பங்களிப்புக்காக அவ்வப்போது அதனுடன் இணைந்த தேவைப்பாடுகள், மற்றும் சமூக மட்ட திட்டமிடல் போன்றவற்றை சுற்றுலாத்துறைக்காக Murphy இனால் பரிந்துரைக்கப்படுகிறது. இது மாற்றுவழி அபிவிருத்தி மாதிரியுருவிற்கு உதாரணமாக பார்க்க முடியும் (Murphy,1985). சூழல் சுற்றுலாத்துறை, இயற்கை சுற்றுலாத்துறை, ஒழுக்க சுற்றுலா மற்றும் பொறுப்பு சுற்றுலா போன்றன சுற்றுலாத்துறை விபரிப்புக்களில் சிலவாகும். இவைகள் அண்மைக்காலங்களில் உருவானவையாகும். (Brigugli, 1996). Jolliffe (2007) தேயிலைக்கும் சுற்றுலாத்துறைக்கும் இடையிலான தொடர்பினை வரலாற்றுரீதியான, மற்றும் தொழிற்துறை கண்ணோட்டங்களில் இருந்து அறிமுகப்படுத்தினார். தேயிலை சுற்றுலாத்துறையும் சமூக மாற்றமும், தேயிலை சுற்றுலா பயணிகளின் நடத்தைப்போக்கு, தேயிலை சந்தைப்படுத்தும் இடங்கள், தேயிலை சுற்றுலாத்துறை அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் தேயிலை விருந்தோம்பல் போன்றன எதிர்கால தேயிலை சுற்றுலாத்துறை கற்கைகளுக்கான ஐந்து முக்கிய பகுதிகளாகும்.

இலங்கையில் தேயிலை சுற்றுலாத்துறையின் ஆற்றல்.

தேநீர் அருந்துகின்ற பழக்கங்கள் மற்றும் தேயிலை தொடர்பான கலாசாரங்கள் உலகளவில் பரிமாற்றம் அடைவதனால், தேயிலை சுற்றுலாத்துறை புதிய மாற்றுவகை சுற்றுலாத்துறையாக வளர்ந்துவருகிறது. தேயிலை தோட்டமானது ஐக்கிய அமெரிக்காவின், தென் கரோலினாவில் (South Carolina) திறக்கப்பட்டது. இது தேயிலைத் தோட்டங்களினூடாக தேயிலை தொழிற்சாலைகளுக்கான பயணங்கள் மற்றும் தள்ளுவண்டி சவாரிகள் போன்றவற்றினை வழங்குகிறது (Sanchez, 2008). இலங்கையில் தேயிலை சுற்றுலாத்துறையானது மரபுரிமை சுற்றுலாத்துறை, சூழல் சுற்றுலாத்துறை, ஆரோக்கிய சுற்றுலாத்துறை மற்றும் கிராமிய சுற்றலாத்துறை போன்ற வற்றுடன் ஒருங்கிணைந்ததாக விருத்தியடைந்திருக்கிறது (Gunasekara & Momsen, 2007). தேயிலை சுற்றுலாத்துறையானது தேயிலை பயிரிடப்பட்டுள்ள தேயிலை தோட்டங்கள், தேயிலை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள், விற்பனை அல்லது சேவை வழங்குவதற்கான தேயிலை விற்பனை நிலையங்கள் மற்றும் தேயிலை

PUBLIC LIBRARY JAFFNA

கலாசாரத்தினை பாதுகாப்பதற்கு அல்லது ஆய்வு செய்வதற்கான நிறுவனங்கள் ஆகியவற்றினை உள்ளடக்கியுள்ள (Jolliffe,2007), வரலாற்றினுடனான ஆர்வத்தினால் ஊக்குவிக்கப்பட்ட, பாரம்பரிய மற்றும் தேயிலை நுகர்வு சுற்றுலாத்துறையாக வரையறுக்கப்படுகிறது(Jolliffe,2003:136).

இக்கட்டுரையானது விடய நூல்களினை மதிப்பாய்வு செய்வதன் மூலமும் நேர்காணுகை மற்றும் களத்தில் நேரடி அவதானிப்புகளின் ஊடாக சேகரிக்கப்பட்ட தரவுகளையும் பரிசீலனை செய்வதன் மூலமாக தேயிலை கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை போன்றவற்றின் அறிவினை தொகுக்கும். மாற்றுத்தெரிவு சுற்றுலாத்துறையின் புதிய பரிமாணங்களினூடாக தேயிலை சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் ஆற்றலினை வெளிப்படுத்துவது இதன் பிரதான நோக்கமாக இருக்கிறது. தேநீர் அருந்துகின்ற பழக்கங்கள் தேயிலை சுற்றுலாத்துறையை நோக்கிய மனப்போக்கினை ஏற்படுத்துகிறது. ஆகையினால் தேயிலை சுற்றுலாத்துறைக்காக ஈர்ப்பாளர்களை அடையாளப்படுத்துவதற்கு பிரதான தேயிலை நுகர்வு நாடுகளினை பரிசீலிப்பது முக்கியமாக இருக்கிறது. வருடாந்த தேயிலை இறக்குமதிகள் மற்றும் தனிநபருக்குரிய தேயிலை நுகர்வு உலகில் தேநீரை நேசிக்கின்ற நாடுகள் மீதான எண்ணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு இது உதவியாக இருக்கும்.

இலங்கையை தரிசிக்க வருகின்ற வருகையாளர்களின் பாங்கினை இத்தரவுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையை தரிசிக்கின்ற சில முன்னணி நாடுகள் உலகின் பிரதான தேயிலை நுகர்வோர்களுள் அடங்கி இருக்கின்றனர் என்பதை காட்டுகிறது. இலங்கையில் தேயிலை சுற்றுலாத்துறையினை விருத்திசெய்வதற்கு இந்த உண்மையானது ஊக்கமளிக்கிறது. இந்த நாடுகளில் உள்ள மக்களுக்கு தேநீர் அருந்துவது மிகவும் மகிழ்ச்சிகரமான அனுபவமாக இருக்கிறது. தேநீர் தயாரிக்கின்ற செயற்பாடுகளும் அதன் சுற்றுப்புறமும் விருந்தாளிகளுக்கு கவர்ச்சிகரமான அனுபவத்தினை கொடுக்கிறது. தேயிலை பயிரிடப்படுகின்ற தேயிலை தோட்டங்கள், தேயிலை உற்பத்தி செய்கின்ற தேயிலைத் தொழிற்சாலைகள், தேநீர் விற்பனை செய்கின்ற அல்லது பரிமாறுகின்ற தேநீர் கடைகள் மற்றும் தேயிலை பாதுகாப்பு மற்றும் வளர்ப்பு ஆராய்ச்சி நிறுவனங்கள் என்ற அடிப்படையில் உள்ளடக்கியிருந்த தேயிலை சுற்றுலாத் துறையானது அழகான இயற்கை சூழலுடன் அல்லது விசேட வரலாற்றுரீதியான மரபுரிமையுடன் கூடிய, தேயிலை கலாசாரத்தின் பல்லினத்தன்மையை வெளிப்படுத்துகின்ற அல்லது அதனை சுற்றி வேடிக்கை பார்ப்பதன் ஊடான உள்ளூர் பழக்கவழக்கங்கள், கற்றலுடன் அனுபவ அறிவினைப் பெறுதல், களியாட்ட நடவடிக்கைகள், கடைவீதிப்பயணம் மற்றும் சுற்றுலாத் துறை உற்பத்திகள் போன்றன அடிப்படையாக அமைந்த தேயிலை பயிரிடப்படும் இடங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இலங்கையில் பாரிய ஆற்றலுடைய தேயிலை சுற்றலாத்துறையானது பெரிய சுற்றுலாத்துறை ஈர்ப்பாளராக அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இலங்கையில் தேயிலை சுற்றுலாத்துறையானது தேயிலைத் தோட்டங்களில் பயணித்தல், தேயிலை கொழுந்து பறிப்பதை இரசித்தல், தேநீரையும் சிற்றுண்டிகளையும் சுவை பார்த்தல் மற்றும் நினைவுப் பொருள்களை கொள்வனவு செய்தல் போன்று சாதாரணமாக இருந்தது (Gunasekara & Momsen, 2007). பின்வரும் விநியோகங்களினை உள்ளடக்கிய இலங்கையின் தேயிலை சுற்றுலாத்துறையை Jollife மற்றும் Aslam (2009) ஆகியோர் பரிந்துரைத்தார்கள்: கடைகள், அழகுசாதன கடைகள் போன்ற சில்லறை விற்பனை நிலையங்கள், தேநீர் விடுதிகள் மற்றும் தேயிலை சூழலில் அமைந்த தங்குமிடங்கள் போன்ற வதிவிடங்கள், தேயிலை தொழிற்சாலைகள், அருங்காட்சியகங்கள் மற்றும் விளக்கமளிப்பு மையங்கள் போன்ற ஈர்ப்புள்ள இடங்கள், சிற்றுண்டிச்சாலை, உணவுவிடுதிகள் போன்ற உணவுச் சேவை, மற்றும் மாலைநேர விருந்துண்ணல் தேயிலைத் தோட்டங்களினூடாக நடைப்பயணம் போன்ற பொழுதுபோக்கு செயற்பாடுகள். (Gunasekara & Momsen,2007) ஆகியோர் இலங்கையில் விடய ஆய்வினை நடாத்தியதுடன் பரிந்துரைகளை வழங்கினார்கள். அப்பரிந்துரைகளில் இலங்கையில் தேயிலை சுற்றுலாத்துறையானது மரபுரிமை சுற்றுலாத்துறை, சூழல் சுற்றுலாத்துறை, ஆரோக்கிய சுற்றுலாத்துறை, கிராமிய சுற்றுலாத்துறை, பிரத்தியேக சுற்றுலாத்துறை மற்றும் சமூக அடிப்படையிலான சுற்றுலாத்துறை உட்பட பல்வேறுபட்ட திசைகளில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். Jollife மற்றும் Aslam (2009) ஆகியோர் இலங்கையில் உள்ளூர் தேயிலை மரபுரிமை சுற்றுலாத்துறையில் மூன்று நிரம்பல் கூறுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் ஒப்பிடுவதற்கும் நேரடி அவதானிப்பு, மற்றும் பகுதி கட்டமைப்பு முறைசாரா நேர்காணல்கள் போன்ற முறைகளைப் பயன்படுத்தி விடய ஆய்வினை நடாத்தினார்கள். அவ் நிரம்பல் கூறுகளாவன: தேயிலைத்துறை இருப்பிடங்கள், தேயிலை தொழிற்சாலைகள், மற்றும் உள்ளூர் தேயிலை விற்பனை நிலையங்கள் என்பனவாகும். பெரும்பாலானவர்களின் பார்வைக்கு தேயிலை சுற்றுலாத்துறையினது பரிமாணங்கள் விரிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை மேல் கட்டுரையானது கூறுகிறது. தேயிலை அருங்காட்சியகங்கள், தேயிலை தோட்டங்கள், தேயிலையுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள், தேயிலை விற்பனை கடை

கள், தேயிலை தொடர்பான நிகழ்வுகள், தேயிலை நாட்டுப்புற நடிப்பு, மற்றும் தேயிலை தொடர்பான உற்பத்திகள் போன்ற வகைகளில் தேயிலை சுற்றுலாத்துறையானது சீனாவில் அபிவிருத்தியடைந்திருந்தது என்பதை Ji (2006) நிருபித்துள்ளார். Zhang (2004) என்பவர் சீனாவில் நான்கு வகையான தேயிலைத் சுற்றுலாத்துறை தொடர்பான ஈர்ப்புகள் உள்ளது என முடிவுக்கு வந்தார்: அழகான இயற்கைக்காட்சிகளுடன் சார்ந்திருந்த இயற்கையான நிலத்தோற்றம் மற்றும் சிறப்பான இயற்கை சுற்றாடல், வேறுபடுத்துகின்ற தேயிலை கலாசார நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் கொண்டிருந்த விசேட தேயிலை பழக்க வழக்கங்கள், கிராமிய சுற்றுலாத்துறையாக அபிவிருத்தி அடைந்திருந்த மற்றும் சுற்றுலாப்பயணிகளுக்கு தேயிலை நடுகை மற்றும் கொழுந்து பறிக்கின்ற அனுபவங்களினை வழங்குகிற விவசாய சூழலியல் பசுமை, வரலாற்று மரபுரிமைகள் போன்ற வற்றின் அடிப்படையிலமைந்த வரலாற்று தொல்பொருளியல் என்பனவாகும்.

பங்கசு தாக்கம் காரணமாக கோப்பி பயிர்ச்செய்கை தோல்வி அடைந்ததன் பின்னர் 19ஆம் நூற்றாண்டின் பிற்காலப்பகுதியில் காலனித்துவ காலத்தில் இலங்கைக்கு தேயிலை அறிமுகப்படுத்தப்பட்டது. ஏனைய தொழிற்துறைகள் டொலர் மதிப்பில் மேலோங்கி நிற்கின்றபோதிலும் இலங்கையின் பொருளாதார முக்கியத்துவமானதாக தேயிலைத் தொழில்துறை தொடர்ந்தும் இருந்துவருகிறது. இது பிரதான ஏற்றுமதியில் அதிக வருமானத்தை ஈட்டித்தருவதற்கு பயன்படுகிறது. இது தற்பொழுது பிரதான ஏற்றுமதியில் அந்நிய செலாவணி மற்றும் வேலைவாய்ப்பின் முக்கிய மூலாதாரமாக இருக்கிறது. தேயிலைத் துறையானது நேரடியாகவும் மறை முகமாகவும் நாட்டின் சனத்தொகையில் 10 வீதத்தினை உள்ளடக்கிய ஒரு மில்லியனுக்கு மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குகிறது. தொழிலாளர்களில் பெண்களின் ஆதிக்கம் கூடுதலாக காணப்படுகிறது. தேயிலையிலிருந்து ஏற்றுமதி வருவாய் மொத்த ஏற்றுமதி வருவாயில் கிட்டத்தட்ட 15 வீதமாகும். இது 2012இல் 1.12 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகவும் 2013இல் 1.21 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகவும் அதிகரித்தது (பெருந்தோட்ட தொழிற் துறை அமைச்சு 2013). தேயிலைத் தொழிற்துறையானது மொத்த உள் நாட்டு உற்பத்தியில் கிட்டத்தட்ட 2 வீதம் பங்பளிப்பு செய்கிறது. இது விவசாய ஏற்றுமதி வருவாயின் 65 வீதத்தினை உள்ளடக்குகிறது. 2013இல் மொத்த ஏற்றுமதி அளவு 263 மில்லியன் கிலோகிராமை எட்டியது. அதிகளவானவர்கள் ஈடுபடுகின்றனர் என்ற ரீதியில் பிரதான தொழிற்துறையாக இருப்பதனால், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்கு மற்றும் உள்வாங்கப்பட்டிருக்கின்ற நிலம், அதன் உள்ளார்ந்த ஆற்றல் போன்றவற்றை கருத்திற்கொண்டால் நாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செயற்பாட்டில் இதனை அலட்சியம் செய்யமுடியாது. மஹிந்த சிந்தனை அபிவிருத்தி கட்டமைப்பிற்கு இணங்க, சுற்றுலாத்துறையானது பிரதான அபிவிருத்திக்குரிய கருவியாக காணப்படுகிறது. இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுற்றுலா தொழிற்துறைக்கான முடுக்கிவிடப்பட்ட அபிவிருத்தி திட்டத்தினை அறிமுகப்படுத்துவதுடன் 2016ஆம் ஆண்டளவில் வருடாந்தம் 2.5 மில்லியன் சுற்றுலாபயணிகளை ஈர்ப்பதற்கான உட்கட்டுமான மற்றும் ஏனைய அவசியப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான திட்டத்தினை ஆரம்பிப்பதாக கூறியிருந்தார். சுற்றுலாத்துறையின் ஆகக்கூடிய நன்மைகள் சமூகத்திற்கு சென்றடைவதற்கு உறுதிப்படுத்தப்படும் மற்றும் உள்நாட்டு மதிப்பு ருவாக்கம் ஊடாக பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கப்படும் என மேலும் கூறினார் (மஹிந்த சிந்தனை, 2010:94). அரச கொள்கையானது சுற்றுலாத்துறை அபிவிருத்தி அரவணைப்பின் முக்கியத்துவத்தினையும் அதேவேளை அதன் சமூகம் நோக்கிய பார்வையையும் பரிந்துரைக்கிறது. சமூகமானது சுற்றுலாத்துறை அபிவிருத்தியின் மையக் கருப்பொருளாக மாறுகிறபொழுது இது வெகுசன சுற்றுலாத்துறையில் இருந்து வேறுபட்டு மாற்று வகை சுற்றுலாத்துறைக்கு செல்கிறது. ஏழை சார்பு சுற்றுலாத்துறையானது பொருளாதாரரீதியில் தாழ்த்தப்பட்ட தேயிலைத்துறையின் சமூகத்திற்கு அதன் நன்மைகள் சென்றடைவதற்கு வழியமைக்கும் பாதையினை வழங்குகிறது. தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் அரை மில்லியன் மக்களை அல்லது இலங்கையின் சனத்தொகையில் (21 மில்லியன்) 5 வீதத்தினை உள்ளடக்குகிறார்கள். காலனித்துவ காலத்திலிருந்து அவர்கள் பல சமூக பொருளாதார இடர்களுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தேயிலைத்தோட்டங்களில் வேலைசெய்கின்ற குடும்பங்கள் வருமானத்திலும் போசணையிலும் தேசத்தின் மிக வறியவர்களாக இருக்கிறார்கள். இந்நிலைமை தேயிலைத்தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளில் மோசமாக காணப்படுகிறது. மூன்றில் ஒருவர் குறைநிறை உடையவர்களாக வகைப்படுத்தப்படுகிறார்கள், 40 வீதமான குழந்தைகள் குறைநிறையுடன் பிறக்கின்றனர். மிக அண்மையில் (2009-2010 இல்) மேற்கொள்ளப்பட்ட வறுமை தொடர்பான ஆய்வில் குடும்பங்களில் 11.4 வீதத்தினர் தேசிய வறுமை மட்டமான மாதாந்த வருமானம் ரூபா (இலங்கை) 3,028 அல்லது கிட்டத்தட்ட 27 அமெரிக்க டொலர் இற்கு கீழ் வாழ்வது அவதானிக்கப்பட்டது (Sriram, 2001). Radhakrishnan (2008:19) அவர்கள் ஒன்று அல்லது இரண்டு அறைகளை மட்டுமே கொண்டதான பல வீடுகள் நேர்கோட்டில்

தொடராக அமைக்கப்பட்ட லயன் கள் என அழைக்கப்படுகின்ற வீடுகளில் வசிக்கிறார்கள் என கூறினார். பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கான இந்த வீட மைப்பு முறைமையும் சுற்றாடல் சுகாதார நிலைமைகளும் பொது வாக மோசமாக காணப்படுகிறது.

ஏழைசார் சுற்றுலாத்துறையின் அணுகுமுறையாக தேயிலை சுற்றுலாத்துறை.

தேயிலை சுற்றுலாத்துறையானது ஏழைசார் சுற்றுலாத்துறையாகவும் (Pro-poor tourism -PPT) பார்க்க முடியும். ஏழைகளுக்காக தேறிய நன்மைகளை உருவாக்குகின்ற சுற் றுலாத்துறை ஏழைசார் சுற்று லாத்துறை என வரையறுக்க முடியும். பொருளாதார நன்மைகள் ஒன்று மட்டுமே இங்கு காணப்ப டுகிறது (மிகவும் முக்கியமான அங்கமாகையால்). சமூக சுற்றா டலும் கலாசார செலவு - பயன் பகுப்பாய்வும் இங்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவது அவசிய மாகிறது. ஏழைசார் சுற்றுலாத் துறையின் மூலோபாயமானது துறையின் ஒட்டுமொத்த விரிவாக் கத்திலும் பார்க்க சுற்றுலாத்துறை யினுள் ஏழைமக்களுக்கான வாய்ப் புக்களை திறந்துவிடுதலை குறிப் பாக மையப்படுத்துகிறது (Ashley மற்றும் Goodwin,2000). ஏழை சார்பானது நவீனமயமாக்கல் கோட்பாட்டு தோல்வியின் ஏமாற் றத்தால் பொருளாதார மற்றும் சமூக நீதியினை கொண்டுவருவ தற்கு மேலாதிக்க அபிவிருத்தி சிந்தனையின் மாற்றத்தினை பிரதி பலிக்கிறது (Chamber,1998:117). ஏழை சார்பு சுற்றுலாத்துறையின் அறிமுகத்தினூடாக உள்ளூர் மக் களுக்கு நன்மைகளை கொண்டு வருவதினை நியமாக்குவதற்கு தொழிற்துறையின் முழு ஆற்றலுக் குமான முன்னெடுப்புக்களை அனுமதிக்கிறது. சுற்றுலாத்துறை விருத்தியானது அநேகமாக வறு மைக்குறைப்புக்கு வழியமைக்காத போதிலும் தொழிற்துறையானது ஏழைசார்பு சுற்றுலாத்துறைக்கு பொருத்தப்பாடான பல்வேறுபட்ட பண்புகளை கொண்டுள்ளது (Ashley etal, 2001). சுற்றுலாத்துறை யின் பல்வேறு அடிப்படை நுட்ப மான உள்ளூர் பொருள்கள் மற் றும் சேவைகளின் கிடைப்பனவுக் கான சந்தை வாய்ப்புகளை உரு வாக்குவதன் ஊடாக உற்பத்தி களை சுற்றுலா பயணிகளுக்கு விநியோகித்தல். மேலும் இது சுற்றுலாத்துறை நடத்துநர்கள், உள் ளூர் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வறிய உற்பத்தியாளர்க ளுக்கு இடையில் பொருளாதார இணைப்பினை உருவாக்குவதற் கான ஆற்றலினையும் கொண் டுள்ளது (farmers and artisans). இந்த இணைப்பினை நியப்படுத்து வதற்கும் பற்றிப்பிடிப்பதற்கும் ஏது வாக உபசரிப்பு சமூகம் நிதியி யல் நன்மைகளை பெறுவதற்கான பாரிய ஆற்றலினை கொண்டுள் ளது. அனைத்து அவசிய ஏழை சார்பு பண்புகளையும் கொண்டிருப் பதற்கு ஏழை சார்பு சுற்றுலாத் துறைக்கான முன்மொழிவாளரி னால் ஒரு தொகுதி கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

செயன்முறையில் இக் கொள்கை களின் பிரயோகம் வறுமை ஒழிப் பிற்கான பல்பரிமான அணுகு முறையை அடைவதற்கான இயலு மையளிக்கிறது. ஆனால் இவ் அனைத்து கொள்கைகளினதும் பிரயோகம் நியவாழ்க்கை சூழ் நிலையில் தற்பொழுதும் பார்ப் பதற்கு பொதுவானதாக இல்லை. கருதுகோலின் நவீனத்துவம் மற் றும் அதன் பண்புகள் மாறுகின்ற காலப்பகுதியில் வெகுசன சுற்று லாத்துறையுடன் அதன் கலப்பின் நிமித்தம் இது பெரும்பாலும் சரி யானதாக இருக்கிறது. சில அறி ஞர்கள் ஏழைசார் சுற்றுலாத்துறை யானது குறிப்பிட்ட உற்பத்தி அல்லது முக்கிய துறையுடன் தொடர்புபட்டதல்ல என்றபொழுதி லும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி யில் முகாமைத்துவத்துவத்திற் கான ஓர் அணுகுமுறையாகும் என வாதிடுகின்றனர். வறுமைக் குறைப்பிற்கு சுற்றுலாத்துறையின் பங்களிப்பு அதிகரிக்கப்படுவதுடன் வறிய மக்கள் உற்பத்தி மேம் பாட்டில் மிகவும் வினைத்திறனான

ஏழை சார்பு சுற்றுலாத்துறை கொள்கைகள்

பங்களிப்பு	வறிய மக்களின் வாழ்வாதார முன்னுரிமைகள் சுற்றுலாத்துறை அபிவிருத்தி என்றவகையில் பிரதிபலிக்க வேண்டுமென்பதால் அவர்கள் சுற்றுலாத்துறை தீர்மானங்களில் பங்கெடுக்கவேண்டும்
முழுமையான வாழ்வாதார அனுகுமுறை	வறியவர்களின் வாழ்வாதார அக்கறைகளின் அளவின் அங்கிகாரம் (பொருளாதாரம், சமூக மற்றும் சூழல் : குறுகியகால மற்றும் நீண்டகால). பணம் மற்றும் வேலையின் மீது குறுகிய இலக்கு போதுமானதல்ல.
சமனிலைப்படுத்தப்பட்ட அணுகுமுறை	சிறய மட்டத்தில் இருந்து பெரியமட்டம் வரை அவசியப்படுகிற செயற்பாடுகளின் பல்லினத்தன்மை. பரந்த சுற்றுலாத்துறை முறைமைகளுடன் இணைப்புகள் முக்கியமானவை. ஏழை சார்பு முன்னெடுப்புகளுக்கு ஈடுசெய்கின்ற உற்பத்திகள் மற்றும் துறைகள் (உதாரணமாக, போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்தல்)
பரவலான பயன்பாடு	மூலோபாயங்கள் அவைகளுக்கிடையே வேறுபடக்கூடிய பொழுதிலும் எந்தவொரு சுற்றுலாத்துறை பிரிவுக்கும் பிரயோகிக்கும் ஏழை சார்பு கொள்கைகள் (உதாரணம்: வெகுசன சுற்றுலாத்துறை மற்றும் வனஜீவராசிகள் சுற்றுலாத்துறை)
பரம்பல்	ஏழை சார்பு சுற்றுலாத்துறை கொள்கைகளை சில முதலீட்டு இலாப பரம்பலின் அடிப்படையிலும் அத்துடன் எவ்வாறு செல்வாக்கினை செலுத்துகிறது போன்ற பகுப்பாய்வுக்காக ஊக்கவித்தல்.
நெகிழ்வு	வெளிப்படையான அணுகுமுறை வறியவர்களின் நன்மைகளை உச்சப்படுத்துவது போல் இருப்பதில்லை. அபிவிருத்தியின் அளவு அல்லது வேகம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அவசியப்படக் கூடும்.பொருத்தமான மூலோபாயமும் நேரிடையான தாக்கங்களும் மேம்பாட்டுக்கான காலத்தினை எடுக்கும். நிலைமைகள் பல்திசைக்குரியது.
வணிக யதார்த்தம்	ஏழைசார் சுற்றுலாத்துறை மூலோபாயங்கள் வணிக நிலைத்திருப்பின் தடைகளுடன் செயலாற்ற வேண்டியிருக்கிறது.
குறுக்கான ஒழுக்காற்ற கற்றல்	பரீட்சிக்கப்படாதது ஆகையால், அனுபவத்தினூடான கற்றல் அவசியப்படுகிறது. ஏழைசார் சுற்றுலாத்துறை வறுமை பகுப்பாய்வு, சுற்றாடல் முகாமைத்துவம், நல்லாட்சி, மற்றும் சிறிய தொழில் முயற்சிகளின் விருத்தி போன்றவற்றில் இருந்து கற்றலின் மூலமாக பெறவேண்டியுள்ளது.

ஆதாரம்: Roe மற்றும் Urquhart (2004:309)

முறையில் பங்குபற்றுவதற்கான இயலுமையைக் கொண்டிருப்பதனால் அது சுற்றுலா வர்த்தகத்திற்கும் வறிய மக்களுக்கும் இடையேயான இணைப்பினை அதிகரிக்கிறது. இங்கு பல்வேறு பட்ட வகையான வறுமையுடனான தொடர்புகள் கருதப்படுவது அவசியமாகும். அவைகளாவன ஊழியர்கள், அயலிலுள்ள சமூகத்தவர்கள், நில உரிமையாளர்கள், உணவு உற்பத்தியாளர்கள், எரிபொருள் மற்றும் ஏனைய விநியோகத்தர்கள், கைவினை பொருள்களின் உற்பத்தியாளர்கள், சுற்றுலாத் துறை உட்கட்டமைப்பினதும் (பாதைகள்) வளங்களினதும் ஏனைய பாவனையாளர்கள் போன்றன. உள்ளூர் வேலைவாய்ப்பினை அதிகரித்தலில் இருந்து நிபுணத்துவ ஆலோசனைக்கான பொறிமுறைகளினை கட்டியெழுப்புதல் வரையான பல வகையான ஏழைசார் சுற்றுலாத்துறை மூலோபாயங்கள் இருக்கின்றன. எந்தவொரு வகையான கம்பனியும் ஏழைசார் சுற்றுலாத்துறையில் பங்கெடுத்துக்கொள்ள முடியும். ஒரு சிறிய விடுதி, நகர சுற்றுலா விடுதி, சுற்றுலா பயண நடத்துநர் அல்லது உட்கட்டுமானத்தின் விருத்தியாளர் என்ற வகையில் (Duim and Caalders, 2008:111). கம்பனியின் வகை அல்லது சுற்றுலாத்துறையின் வகை முக்கிய காரணியாக இல்லை. ஆனால் தேறிய இலாபங்களில் அதிகரிப்பு வறியமக்களுக்கு செல்வது நிரூபிக்கப்பட முடியும். அதன் விளைவாக சிறிய மற்றும் நுண் தொழில் முயற்சிகளின் மீதான ஆதரவு, கிராமிய சுற்றுலாத்துறை கருத்திட்டங்களுக்கான ஆதரவு, சமூக மற்றும் தனியார்துறை நடத்துநர்களுக்கிடையேயான தொழில் கூட்டினை விருத்திசெய்தல், ஏழைசார் திட்டமிடலின் பங்களிப்பு மற்றும் தொழில் செய்யும் இடத்தின் சூழ் நிலைகளை மேம்படுத்துதல், பயிற்சியும் ஊழியர் அபிவிருத்தியும், மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் முகாமைத்துவம் போன்ற பரந்துபட்ட வழிமுறைகள் உட்பட வறியவர்களுக்கான தெளிவான நன்மைகளைக் கொண்டுள்ளதை ஏழைசார் முன்னெடுப்புகள் வெளிப்படுத்தின (Mowforth and Munt, 2003). சுற்றுலாத்துறை சமூகங்கள் என்ற வகையில் சுற்றுலாத்துறையில் இருந்து நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கு பல வழிகளில் பங்களிப்பு செய்ய முடியும். அலுவலக நிறைவேற்று உத்தியோகத்தர், உணவு மற்றும் பானம், சமையல் சேவை, வதிவிட வசதிகள் வழங்கப்படுகின்ற இடங்களில் வதிவிட செயற்பாட்டு அறைசேவைகள் போன்ற வேலை வாய்ப்புக்கள் விருந்தோம்பல் சேவைகளில் கிடைக்கக்கூடியதாக உள்ளது. இவ்வகை இடங்களில் காலனித்துவ காலத்தில் கட்டப்பட்ட தேயிலை மாளிகைகள் இருக்க முடியும், கைவிடப்பட்ட தேயிலை தொழிற்சாலைகள் உல்லாசப்பயண விடுதிகளாக மாற்றப்பட்டன அல்லது பொருத்தமான வீடுகளில் தங்குமிடங்கள் தேயிலைத் தோட்டங்களின் அயலில் இருக்கக்கூடும். உள்ளூர்வாசிகளுக்கான வாய்ப்புகள் தேயிலை சுற்றுலாத்துறைக்கான பல பல்லினப்படுத்தப்பட்ட உற்பத்திகள் விரிவுபடுத்த முடிந்தது. அவ்வாறான வையாக தேநீர் நிகழ்வுகள், தேநீர் விருந்துபசாரமும் தேநீர் விழாக்களும், தேயிலை கொழுந்து பறிக்கும் அனுபவத்தினையும் பெற்றுக்கொள்வதற்காக தேயிலைத்தோட்டங்களுக்கு விஜயம் செய்தல், தேயிலைத் தோட்டங்களில் நடைப்பயணம், இயற்கை நடைப்பயணம், தேயிலை நாட்டியம், சைக்கிள் ஓட்டம், மலையில் வண்டியோட்டுதல், பறவைகளை இரசித்தல், மலையேற்றமும் நடைப்பயணமும், பெருந்தோட்டத்துறையின் வாழ்வாதாரத்தினை அனுபவித்தல், புகைப்பட மெடுத்தலும் படப்பிடிப்பும், மாலை நேரவிருந்துண்ணல் உணவு, உள்ளரங்க மற்றும் வெளியரங்க விளையாட்டுக்கள், வீட்டுத் திரையரங்கு, தேயிலை அருங்காட்சியகம், தேயிலை தோட்டங்களும் குடியிருப்புக்களும் காணப்படுகின்றன. சுற்றுலாத்துறையில் இருந்து நேரடியாக நன்மைகளைப் பெறமுடிந்த மக்களுக்கு தேயிலைத் தொழிற்சாலையும் தொழில் செய்வதற்கு ஏற்ற மற்றொரு இடமாக காணப்படுகிறது. காலியில் "வளஹண்டுவ" தேயிலைத் தொழிற்சாலையிலும் மாத்தறையில் எஸ். எல். எஸ் தேயிலைத் தொழிற்சாலையிலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பொழுது கிடைத்த அனுபவத்திற்கு இணங்க, தேயிலை உற்பத்தி செயல்முறையின் அவதானிப்பாளர் என்ற வகையிலும் அதில் பங்கேற்பாளர் என்ற வகையிலும் சுற்றுலா துறையினை கவர்வதற்கான அதிக ஆற்றல் அங்கு காணப்படுகிறது. தேயிலை உற்பத்திச்செயல்முறையானது பல படிமுறைகளின் ஊடாக செல்கிறது. அவையாவன, வதங்கவிடுதல், உருட்டுமுறை நொதித்தல், தீயிடலும் உயர்வெப்பத்தில் வாட்டுதலும் மற்றும் களஞ்சியப்படுத்தலும் தரப்படுத்தலும் ஆகும். தொழிற்சாலையினை பார்வையிட வருபவர்கள் செயல்முறையில் பங்குபற்றுவதுடன் நேரடி அனுபவத்தினையும் பெற்றுக்கொள்ளக் கூடிய இடமாக இரண்டு கட்டங்களாக அமைந்திருக்கின்ற, வதங்கவிடுதல் மற்றும் வகைப்படுத்தும் இடங்கள் காணப்படுகின்றன. தேயிலை கொழுந்து பறித்தலும் பார்வையிட வருபவர்களின் கவனத்தைக் கவர்கின்ற அனுபவமாகும். தொழிற்சாலையினுள் பார்வையிட வருபவர்களின் நேரடியான சமூகமளிப்பானது, தொழிலாளர்களை வேலையின் மீதான கவனத்திலிருந்து வெளியே இழுக்கக்கூடும் என உற்பத்தியாளரின் மனங்களில் சந்தேகத்தினை ஏற்படுத்துகிறது. அதே சமயத்தில் இதன் விளைவாக ஊழியரின் ஊதியத்தில் மேலதிக வருவாயினையும் அதேபோல் உற்பத்தியாளருக்கான இலாபமும் அதிகமாக சேர்க்கப்படுகின்ற பொறிமுறையாக இருப்பதனால் இது பார்வையிட வருபவர்களை வர

வேற்பதற்காக உற்பத்தியாளரை ஊக்கப்படுத்துகிறது. இது நாளாந்த பழக்கத்தில் வருகின்ற பொழுது பார்வையிட வருபவர்க ளினால் குழப்பமேற்படுவது பெரு மளவு குறைக்கப்படுகிறது. பயணி கள் வழமையாக பார்வையிட விஜயம் செய்வதற்கு வாய்ப் பினை வழங்குகின்ற வளஹண் டுவ போன்ற தேயிலைத் தொழிற்சாலையின் மூலமாக இந் தச் சந்தேகங்களினை அகற்ற முடியும். வறியவர்களுக்கான தெளிவான நன்மைகளுக்கான வழிமுறையை ஏற்படுத்துவதற்காக சமூகங்களுக்கு இடையிலும் தனி யார் துறையினருக்கு இடையேயும் கூட்டாண்மையை விருத்திசெய்தல், ஏழைசார் பங்களிப்புத்திட்டமிடல் இந்தக்கட்டத்தில் முக்கியமானது. இது தொடர்பான சேவைகளில் தேநீர் சில்லறை விற்பனை, தேநீர் சுவை பார்த்தல் போன்ற பரந் துபட்ட துறைகளும் தொழிற்சா லைக்கு நன்மைகளை கொண்டு வருகிறது. சிறந்த தரமான உற்பத்தியில் இருந்து தயாரிக்கப் பட்ட புதிய தேநீர் கவரக்கூடிய தாக இருக்கும். ஏனெனில், பெரும்பாலான உள்ளூர் வாசிகள் அதேபோல் வெளிநாட்டவர்களும் நல்ல தரமான உற்பத்திப்பொருட் களினை பெற்றுக்கொள்ள முடியா தவர்களாக இருக்கின்றனர். விநி யோகத்தர்களிடமிருந்து பெறுகின்ற தேயிலை அநேகமான சந்தர்ப் பங்களில் தரம் குறைந்ததுடன் கலப்படம் செய்யப்பட்டவையாக காணப்படுகிறது. இலங்கையில் இருந்து மிகச்சிறந்த தேயிலை மட்டும் ஏற்றுமதி செய்கின்ற பொழுதிலும் ஆபிரிக்க நாடுகள் மற்றும் இந்தியாவிலிருந்து பெறப் படுகின்ற தரம் குறைந்த மலிவான உற்பத்திகளுடன் இவை கலக்கப்ப டுகிறது.

தேயிலை சுற்றுலாத்துறை: சமாதான ஊக்குவிப்பாளராக

தேயிலை சுற்றுலாத்துறையினூ டாக கட்டமைப்புரீதியான அமைதி யினை அடைவதற்கான சாத்தியப் பாடுகளுக்கு முயலுகின்ற முயற்சி யில் அனைவருக்குமான அடிப் படை மனித தேவைகளை அதா வது சமத்துவம், அமைதி, மற்றும் பங்களிப்பாங்கான சமூகங்களை நோக்கிய அபிவிருத்திக்காக அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. தேயிலை சுற்றுலாத்து றையின் ஊடாக சமாதானத்தினை அடைவதற்கு அவசிப்படுகின்ற அணுகுமுறைகளின் புரிந்துணர் வுக்கான நோக்குடன் வறுமை, பாகுபாடு, ஒதுக்கிவைத்தலும் சுற் றாடல் சீரழிவும் போன்ற வடி வங்களில் அமைந்த கட்டமைப்பு ரீதியான வன்முறைகள் கவலைய ளிப்பதாக இருக்கின்றன. தற்போ தைய தொழிலாளர் சந்தையில் பெண்கள், பயிற்சி பெறாத மற் றும் பகுதி பயிற்சி பெற்ற தொழி லாளர்கள் அத்துடன் வறியவர் கள், கிராமமக்கள் போன்ற ஓரங் கட்டப்பட்டவர்களுக்கு எந்தவொரு வேலைவாய்ப்பினையும் அருமை யாகவே வழங்குகிற சந்தர்ப் பத்தில் சுற்றுலாத்துறையானது, அவர்களுக்கான வாழ்வாதார வாய்ப்புக்களினை வழங்குவதன் மூலமும் வாழ்க்கை நிலைமை களை உயர்த்துவதன் மூலமும், சமூக சமத்துவம் இன்மையைக் குறைக்கிறது (Rie et al, ibid). இது பெருந்தோட்டத்துறையில் இளம் தலைமுறையினரின் பிரதான பிரச் சினையாக இருக்கிறது. பல பெருந்தோட்டங்களில் நல்ல படித்த மற்றும் பயிற்சிபெற்ற சில குறிப்பிட்ட வகை மக்களுக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக் கள் கிடைக்கக்கூடியதாக இல்லை. முகாமைத்துவத்திற்கு ஏற்றவாறு பெருந்தோட்டங்கள் எதிர்நோக் குகின்ற பொருளாதார இழப்புக ளின் காரணமாக பயிற்சி பெறாத வர்களுக்கு கிடைக்கின்ற வேலை வாய்ப்புக்களும் தொடர்ச்சியாக கிடைக்கக்கூடியதாக இல்லை. தேயிலை சுற்றுலாத்துறையானது இம்மக்களுக்கு வேலைவாய்ப் புக்கான மாற்றுவழிப்பாதையையும் மேலதிக வருமானத்தையும் கண்டு பிடிப்பதற்கான புதிய நம்பிக் கையை கொண்டுவருகிறது. கல்வி கற்ற இளம்வயதினர் விவசாய அடிப்படையிலான தொழில்களி லும் பார்க்க நகரங்களில் மதிப் பிற்குரிய தொழிலில் ஈடுபடுவ தற்கான வாய்ப்புக்களை வழங்கு கிறது. இது தேயிலை சுற்றுலாத் துறையினை அமுல்படுத்துவதில் உள்ள பிரதான நன்மைகளில் ஒன்றாக காணப்படுகிறது. ஆய் வின் பொழுது என்னுடன் கலந்து ரையாடிய பெருந்தோட்ட தொழி லாளர்கள், அவர்களுடைய தற் போதைய வாழ்க்கை நிலைமை கள் மிகவும் திருப்தியற்ற நிலை யில் காணப்படுகிறது எனக்கூறி னார்கள். அவர்களுடைய கருத்துப் படி, அவர்களுடைய தாழ்வருமா னம் அவர்களின் குழந்தைகளுக்கு உணவு வழங்க போதுமானதாக இல்லை. பிள்ளைகள் நிரந்தரமா கவே பாடசாலையில் இருந்து விலகுகிறார்கள். நிதியியல் பிரச் சினை காரணமாக வீட்டு வன் முறை அதிகரிக்கிறது. சமூகத்தில் இவ்விரக்தி நிலைமைகளை வள ரவிடுதல் அமைதிக்கு ஆபத்தா னது. Gurr (1970) இவ்வாறு எழு துகிறார் "...வளிமண்டல பௌதீக வியலில் புவியீர்ப்பு விதியைப் போல் வறுமைக்கும் முரண்பாட் டுக்கும் இடையிலான அடிப்படை உறவு சமூகச்சச்சரவின் புரிந்துணர் விற்கு அடிப்படையாக அமைவது டன் ஒப்பீட்டளவில் நலன் இழப் புக்கள் எந்தவொரு வகை சமூகச்சச்சரவுகளுக்கும் அவசிய மான ஆரம்ப நிலையாக காணப் படுகிறது. சமூகத்தின் உறுப்பி னர்களுக்கு இடையே மிகவும் பரந்துபட்ட மற்றும் தீவிரமான அதிருப்தி அத்துடன் அதிகமாக அல்லது தீவிரமாக இருக்கிற சமூ கசச்சரவுகள் போன்றன அவர்களு டைய எதிர்பார்ப்பகளுடன் ஒப்பி டுகையில் தனிநபரின் உணர்வுக ளின் இடர்பாடுகளை அதிகரிப்பது டன் அதிருப்தியையும் அதிகரிக்கி றது." தேயிலை சுற்றுலாத்துறை சமூகத்திற்காக அமுல்படுத்துகின்ற உட்கட்டுமான அபிவிருத்தி, புதிய தொழில் வாய்ப்புகளும் தொழில் முயற்சிகளும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளினை உயர்த்துவது

டன் நீண்ட காலப்போக்கில் அமை தியின் ஊக்குவிப்பாக மாறுகிறது.

இந்த ஆய்வுடன் தொடர்புபட்ட சுற்றுலாத்துறையின் மற்றைய முகப்பாக தேயிலைத்துறையின் கலாசார மற்றும் மரபுரிமை அடிப் படையிலான சுற்றுலாத்துறை காணப்படுகிறது. Richards (2001), கலாசார சுற்றுலாத்துறையானது கடந்தகால கலாசார உற்பத்திக ளின் நுகர்வினை மட்டும் உள்ள டக்கவில்லை. அது மக்களின் அல்லது பிராந்தியத்தின் தற்கால கலாசாரம் அல்லது வாழ்க்கை முறையினையும் உள்ளடக்குகிறது என பரிந்து ரைக்கிறார். வேறு வடிவில் கூறு வதாயின், கலாசார சுற்றுலாத் துறையானது மரபுரிமை சுற்றுலாத் துறை (கடந்தகால கலைப் பொருட்கள்) மற்றும் கலை சுற்று லாத்துறை (தற்கால கலாசார உற் பத்திகள்) ஆகிய இரண்டையும் உட்பொதித்திருக் கிறது. கலாசார மற்றும் மரபுரிமை சுற்றுலாத்துறை வரலாற்று கலைப் பொருட்களை முன்வைக்கின்ற வெறும் சுற்றுலா நடவடிக்கை யல்ல அதைவிட மக்களுக்கும் மரபுரிமைக்கும் இடையிலான தொடர்பின் அடிப்படையிலான புரிந்துணர்வாக இருக்க வேண்டும். தேயிலை சுற்றுலாத்துறையில் மரபுரிமையின் பயன்பாடு அபிவி ருத்தியின் கூருணர்வுள்ள மற்றும் ஆற்றல் மிக்க பிரதேசங்களில் இருக்கவேண்டியதுடன் இந்த தோற்றப்பாட்டினை எவ்வாறு முகாமைத்துவப்படுத்துவது என அறிவதற்கு முக்கிய அவசி யப்பாடு காணப்படுகிறது. குறிப் பாக தேயிலை தோட்ட சூழ்நிலையில் தேயிலைக்கான மூலதனத்துடன் தோட்டத்தொழிலா ளர்களின் பரிதாபமான வாழ்க்கை வரலாற்றின் மரபுரிமையை எங்கே உள்ளடக்குவது போன்றவற்றினை எழுத்தாளர் ஊகிக்கிறார். பிரித்தா னியர்கள் மூலதனமிடப்பட்ட தொழில்முயற்சிகளுக்காக நாட்டை திறந்துவிட்ட பொழுது நாடானது தொடர்ந்தும் விவசாய பயன்பாட்டு முறையிலேயே இருந்தது. பிரித்தா னியர்கள் மலைநாட்டில் கண்டிய விவசாயிகளின் மூதாதையர்க ளுக்கு உரித்தான கோப்பி மற்றும் தேயிலை தோட்டங்களினை பொருத்தமான முறையில் மேலும் வலுப்படுத்துவதற்கான சந்தர்ப்பத் தினை நன்கு பயன்படுத்தினார்கள். பெருந்தோட்டத்துறை விரிவாக் கப்பட்டமையினால் 1827இல் தென் னிந்தியாவிலிருந்து தொழிலா ளர்கள் வேலைக்கு சேர்க்கப்பட்ட னர். உடனடியாக தென்னிந்தியா வில் இருந்து படகின் மூலமாக தரையிறக்கப்பட்ட இந்த புலம் பெயர் தொழிலாளர்கள் மன்னார் துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட் டனர். பெருந்தோட்டங்களில் இளம் பெண்பிள்ளைகள் பொதுவாக அவர்களின் தாய்மார்கள், பாட்டி மார்கள் மற்றும் வயதுவந்த சகோதரிகளை பின்பற்றினார்கள். மேலும் பெண்கள் பெரும்பாலும் வீட்டுக்குரிய கடமைகளினை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டார் கள். அவர்கள் மாத்தளை நகரத் தின் முகாம்களுக்கு குருநாகல் ஊடாக வகைபிரிக்கப்பட்டு அவசி யமான இடங்களுக்கு நகர்த்தப்பட் டனர். அவர்கள் ஏற்கனவே முன்னர் உள்ள தொழிலாளர் குழுக்களுடன் ஸ்தாபிக்கப்பட்ட தோட்டங்களிலோ அல்லது புதிய தோட்டத்தினை ஸ்தாபிப்பதற்குரிய இடங்களிலோ நில சுத்திகரிப்பிற் காக பிரித்து அனுப்பிவைக்கப்பட் டனர். முதல் சில மாதங்கள் தொழிலின் பின்னர் பலர் இறந்த னர். இந்திய புலம்பெயர் தொழி லாளர்கள், சர்ச்சைக்குரிய பிரச்சி னைகள் இருப்பதனை இலங்கை அரசாங்கத்தின் சுதந்திரத்திற்கு பின்னர் நிரூபித்தனர். திடமான நோக்கம் கொண்ட நாடற்ற தமிழர்கள் பல வருடங்களிற்கு மேலாக அடுத்தடுத்து வந்த இந் திய அரசுடன் பல உடன்படிக்கை கள் மற்றும் ஒப்பந்தங்களில் ஈடு பட்டிருந்தனர். எவ்வாறாயினும், பிரஜாவுரிமை சட்டங்கள் உணரப் பட்டிருந்த போதிலும் சிங்களவர் கள் மூலமான நகர்வின் பிரகாரம் இலங்கையின் அடிமைப்படுத்தப் பட்ட தமிழ் மக்களாக அர்த்தப் படுத்தப்பட்டிருந்தது. தோட்ட மக்க ளின் சமூக இழுக்குகளும் ஓரம் கட்டுகையும் நீண்டகாலமாக முன் னணி அரசியல் பிரச்சினையாக இருந்துவந்தது. Kandasamy(2002), இனங்களுக்கிடையே பிரதிநிதித்து வப்படுத்துகிற இலங்கை தோட்டத் தொழிலாளர்கள் சிங்களம் மற்றும் தமிழ் தேசியவாதத்தினுள் ஓரங்கட் டப்பட்ட மலைநாட்டு தமிழர்களாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். தேயிலை சுற்றுலாத்துறை இம் மக்களுக்காக குரலெழுப்புவதற் கும் சமத்துவத்தினதும் பொறுமை யினதும் உள்ளுணர்வினை சிறிது சிறிதாக புகட்டுவதற்குமான பொன் னான வாய்ப்பாக இருக்கிறது.

தேயிலை சுற்றுலாத்துறையின் தொட்டுணரக்கூடிய அத்துடன் தொட்டுணரமுடியாத மரபுரிமையி னுள் பெருந்தோட்டத்துறை தொழி லாளர்களின் கதையினை ஒருங்கி ணைப்பு செய்யமுடியும். தொட்டு ணர முடியாத மரபுரிமையாக நினைவுகள், வேலைத்தள அனுப வங்கள், பாரம்பரியம், வாழ்க்கை முறை, குடும்ப வரலாறு, உள்ளூர் கலாசாரம் போன்றன காணப்படு கின்றன. தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் மரபுரிமையின் பிரதிநிதித்துவமானது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக உள் ளத்தினையும் ஆன்மாவினையும் அர்ப்பணித்த தோட்டத் தொழிலா ளர்களின் மூதாதையர்களின் வாழ்க்கையின் நினைவுகளின் அர்த்தமுள்ள உணர்வுகள் என்ற வகையில் முக்கியமாக இருக்கி றது. பக்கச்சார்பற்ற மரபுரிமை முன்வைப்பின் ஊடாக தோட்டத் தொழிலாளர்கள் அவர்களுடைய வாழ்க்கையின் மீது தாக்கத்தினை ஏற்படுத்திய கடந்தகாலத்தினையும் அதேபோல் பரந்துபட்ட சமூக மற்றும் தொழிற்துறைப் பிரச்சினை கள் அறியப்பெறுகிறார்கள். இடர் களின் மீதான அங்கீகரிப்பானது அவர்களின் பரிதாப நிலைக்கு ஆதரவளிப்பதில் ஒரேமாதிரியான மனப்பாங்கினை ஏற்படுத்த உதவும். இந்த பிதிநிதித்துவப்படுத் தப்பட்ட மரபுரிமை மற்றும் கலா

PUBLIC LIBRARY
JAFFNA

சார தேயிலை சுற்றுலாத்துறை முழுவதும் நன்கு கட்டியெழுப்பப் பட்ட புரிந்துணர்வானது இனங்க ளுக்கு இடையிலான பதற்றத் தினை குறைக்கும். கட்டமைப்புரீதி யான வன்முறையினை குறைக் கும் வழிமுறையாக தேயிலை சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்வதன் நிமித்தம் மரபுரிமை பிரச்சினைகளில் அடிமட்டத்தவரின் பங்களிப்பினை பெறுவது முக்கி யமாக இருக்கிறது. இந்த பங்களிப்பானது தேயிலை மரபுரி மையினதும் அடையாளப்படுத்தப் படுகிற வரலாற்றினையும் அத்து டன் எதிர்காலத்திற்கான விளக்கம ளிப்புகளையும் பாரிய பல்லினத் தன்மையினையும் உறுதிசெய்கி ற்து. இல்லாவிட்டால் உதாசீனப்ப டுத்தப்படும்.

முடிவு

இந்த ஆய்வானது, பொருளாதார அபிவிருத்தி, கலாசாரங்களுக்கு இடையிலான புரிந்துணர்வுடன் பர ஸ்பர மரியாதையினூடாக சாதக மான அமைதியின் செயன்முறை யினை தூண்டக்கூடிய தேயிலை சுற்றுலாத்துறை தொழில் முயற்சிக ளினதும் கலாசார மற்றும் மரபு ரிமை சுற்றுலாத்துறையின் பண்புக ளையும் தெளிவுபடுத்த முயற்சித் தது. தேயிலை சுற்றுலாத் துறை யானது மக்களின் தனிமைப்படுத் தப்பட்ட மனோநிலை அத்துடன் தேசியவாதம் மற்றும் இனவாதத் தினை தூண்டி இறுதியில் பிரிவினைவாதத்திற்கு இட்டுச்செல் கின்ற பாரபட்சங்களை வெல்லுவ தன் மூலமாக, கட்டமைப்புரீதியான வன்முறையினை குறைப்பதற்கான ஆற்றலினை கொண்டிருக்கிறது. மக்கள் குழுக்களுக்கிடையே கலா சார பரிமாற்றங்களும் பரஸ்பர புரிந்துணர்வும் சுற்றுலாத்துறையின் சமூக கலாசார சாதக விளைவுக ளாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ் விளைவு, உண்மையில் சாத் தியமாகிறது. ஏனெனில் வெகுசன சுற்றுலாத்துறையானது சமத்துவ மின்மைகளின் பிரச்சினைகளினை பற்றிக்கொள்கிறது. ஏழை சார்பு சுற்றுலாத்துறையின் யோசனையா னது மாற்றுவழி சுற்றுலாத்துறை யின் வடிவமாக பரிந்துரைக்கப்பட் டிருக்கிறது. அடிமட்டத்தவர்களின் கலாசார மற்றும் மரபுரிமை பிரதி நிதித்துவமின்மையினை தவிர்ப்ப தற்காக தேயிலை சுற்றுலாத்துறை இடங்களினை திட்டமிடுதலில் தோட்டத்தொழிலாளர்களின் பங்கு பற்றுகை முக்கியமாக இருக்கிறது. சமூதாயத்திற்கான பொருளாதார நன்மைகளை உச்சப்படுத்துவதற்கு இது முக்கியமானதாக காணப்படு கிறது. தேயிலை சுற்றுலாத்துறை யானது ஒப்பீட்டளவில் புதிய கரு துகோலான போதிலும் பிரமாண் டமான ஆற்றலினை கொண்டுள் ளது. "பயணம் ஐயாயிரம் மைல்க ளாக இருந்தாலும் முதல் படியு டன் ஆரம்பிக்க வேண்டும்" என சீனாவின் பழைய பழமொழி மேற்கோள் காட்டுகிறது. அதே போல் விரைவாக ஆரம்பிக்கபட வேண்டியிருப்பதுடன் இலங்கை யின் தேயிலைத்தோட்டம் மற்றும் தொழிற்துறைகளுக்கு மட்டுமல்ல ஒன்றாக இணைந்ததாக ஒட்டு மொத்த முழுநாட்டிலும் புதிய சுற்றுலாத்துறை சகாப்தத்தினை வரவேற்பதற்கு மனவுறுதியுடன் சிந்திப்போம்.

துணைநூற்பட்டியல்கள்

Archer, B. (1996). Sustainable tourism:An economist's view point. In L.Briguglio, B. Archer, J. Jafari& G. Wall(Eds.). Sustainable tourism in islandand small states: Issues and policies.London: Pinter. (Island Studies Series)

Ashley, C., Boyd, C., & Goodwin, H.(2000).Pro-poor tourism strategies:Putting poverty at the heart of the tourism agenda. London: Overseas Development Institute (ODI).

Ashley, C., Roe, D., & Goodwin, H.(2001).Pro-Poor tourism strategies:Making tourism work for the poor, PPT Report No 1. London: Overseas Development Institute (ODI).

Britton, S. (1982). The political economy of tourism in the Third World, Annals of Tourism Research, 9 (3), 331-358.

Chambers, R. (1998). Us and them:Finding a new paradigm for professionals in sustainable development. In D. Warburton(Ed.). Community and sustainable development: Participation in the future. London: Earthscan.

Cukier, J. (2004). Tourism employment issues in developing countries. In R.Sharpley & D. J. Telfer (Eds.).Tourism and development: Concepts and issues. Sydney: Channel View Publications.

Duim Van Der ,V., R., and Caalders, J.,(2008), Tourism Chains and Pro-poor Tourism Development: An Actor-Network Analysis of a Pilot Project in Costa Rica, Current Issues in Tourism, Routledge publication, UK,11(2).

Galtung, J. (1969). Violence, peace, and peace research. Journal of Peace Research,6 (3), 167-191.

Gunasekara, R. B. & Momsen, J. H.(2007). Amidst the misty mountains: the role of tea tourism in Sri Lanka'sturbulent tourist industry. In L. Jolliffe(Ed.), Tea and tourism: Tourists, traditions and transformations (pp. 84-96). Clevedon: Channel view publications.

Gurr, T. R. (1970). Why do men rebel? New Jersey: Princeton University

Hills, T. L., & Lundgren, J. (1977). The impact of tourism in the Caribbean: A methodological study. Annals of Tourism Research, 4 (5), 248-267.

Ji, S. J. (2006) 茶文化旅游发研究 ..(Master's), Shandong University. Retrieved from Jolliffe, L. & Aslam, M.S. M. (2009). Tea heritage tourism: evidence from Sri Lanka.

(தொடர்ச்சி 40 ஆம் பக்கம்)

உலகளாவிய ஆற்றல்மிக்க மீன்பிடித்துறையின் பெண்களின் வெளிப்பாடுகள் : அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் மீன்பிடித்துறையில் பெண்களின் ஈடுபாடும், தாக்கமும் மற்றும் முக்கியத்துவமும்.

கலாநிதி. டி.அச்சினி எம்.டி சில்வா

அறிமுகம்

மீன்பிடித்துறை மற்றும் நீரியல்வளர்ப்பு போன்றவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை வழங்குகிறது. வரலாற்றின் எல்லாக் காலப்பகுதியிலும் தேசிய எல்லைகளைக் கடந்து ஆயிரக்கணக்கான பெண்கள் மீன்பிடித்துறையில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள். அவர்களுடைய பங்கானது மீன்பிடித்துறைகளுக்கு இடையிலும் சமூகங்களுக்கு இடையிலும் பிராந்தியங்களுக்கு இடையிலும் வேறுபடுகிறது. மேலும் பெரும்பாலான மீனவப்பெண்கள் அவர்களுடைய முயற்சிகள் திறமைகள் மற்றும் திறன்களை மீன்பிடித்துறையில் ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்களின் குடும்பநலனுக்காக அர்ப்பணிக்கின்றார்கள்.

பாலின அடிப்படையிலான பெறுமதி பகுப்பாய்வானது முன்னேற்றகரமான மற்றும் பின்தங்கிய செயற்பாடுகளை மையப்படுத்தியிருப்பதுடன் இப்பகுப்பாய்வினை பயன்படுத்தி செயல்திறன்மிக்க செயற்பாட்டின் வெவ்வேறு மட்டங்களில் தொழிலில் ஈடுபடுகின்ற ஆண்கள் மற்றும் பெண்களின் வருவாய்களை உச்சப்படுத்த முயலுகிறது. சமர்ப்பிக்கப்பட்ட பகுப்பாய்வானது செயல்திறன்மிக்க செயற்பாட்டில் ஆண்கள் மற்றும் பெண்களின் நிலை மற்றும் பங்களிப்புகளை முன்னிலைப்படுத்துவதற்கும் மற்றும் மீன்பிடித்துறையின் செயற்பாட்டின் வேறுபட்ட நிலைகளின் பூராகவும் அமைந்துள்ள பொருளாதார, அமைப்புரீதியான மற்றும் மீன்பிடித்துறையில் செயலாற்றுபவர்களிடையே ஒருங்கிசைவான உறவினை வெளிப்படுத்துகிறது. பகுப்பாய்வானது, செயற்பாட்டாளர்களின் சாத்தியமான பரம்பல், கிடைக்கக்கூடிய உண்மையான நன்மைகள், அதிகாரப்பரம்பல், வளங்களின் உரிமையாண்மையை தெளிவுபடுத்தும். மீன்பிடித்துறையின் வினைத்திறனான செயற்பாட்டில் உதவி இலக்குகளுக்கு வாய்ப்புக்களை வழங்குவதற்கான வாடகை செலவுகள், இடைத்தரகர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கான ஊக்குவிப்புகளை வழங்கல், சேகரிப்பாளர்களினதும் சிறிய விவசாயிகளினதும் பேரம் பேசுகின்ற சக்தி, பொருத்தமான செயலாக்க தொழில்நுட்பத்தினதும் களஞ்சியத்தினதும் கிடைப்பனவை உறுதிசெய்தல் மற்றும் உலகலாவிய செயலாக்கத்திறனில் மேலும் பெறுமதி சேர்ப்பனவிற்கு வறிய சேகரிப்பாளர்களது வளங்களை இயலுமைப்படுத்துவதற்கு போக்குவரத்து வசதிகளை பகுப்பாய்வு செய்தலாகும்



(ஆதாரம் டி சில்வா, 2012)

வேளாண்மைத்தொழில் முகாமைத்துவத்துறை, விவசாய விஞ்ஞானபீடம், சப்புரகமுவா பல்கலைக்கழகம், த.பெ. 02, பெலிகுலோயா, இலங்கை. desilva.achini@yahoo.co.uk

ஆராய்ச்சி முறை

FAO-NOARD செயலாக்கத்திறன் கருத்திட்டமானது ஆராய்ச்சிக்கான அடிப்படைகளினை தயார்படுத்து வதுடன் அதற்கு அனுசரணைய ளிக்கிறது. பல்வேறுபட்ட அபிவி ருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் பாலின பகுப்பாய்வு, செயலாக்கத் திறன் ஆகியவற்றை கருத்திற் கொண்டு விடய ஆய்வானது கட்டியெழுப்பப்படுவதுடன் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவின் தெரிவு செய்யப் பட்ட இடங்களில் செயல்திறன் மிக்க மீன்பிடித்துறையில் பெண் களின் பங்களிப்பினை அடையாளப் படுத்தல் மற்றும் அளவிடுதல் செயல்திறன் மிக்க மீன்பிடித்துறை யில் அவர்களின் செயற்பாடுகள், கிடைப்பனவு மற்றும் கட்டுப்பாடு போன்றவற்றை அலசி ஆராய்தல் என்பன கருத்திட்டத்தின் பகுதி யாக எடுத்துக்கொள்ளப்பட்டது. தாய்லாந்து, வியற்னாம், பங்களா தேஸ், கம்போடியா, இலங்கை, கானா, சிம்பாபே, கென்யா, உகண்டா, பேரு மற்றும் கொண்டு ரஸ் போன்ற நாடுகளில் மீன் பிடித்துறை மற்றும் நீரியல்வளர்ப் புகளில் இருந்து முதன்மைத்தர வுகள் பெறப்பட்டன. அனுபவம் வாய்ந்த ஆய்வாளர்களுடன் பங்கு பங்கேற்பாளர்களின் அவதானிப்பு, இலக்குக்குழு கலந்துரையாடல்கள் மற்றும் பாலின வளங்களின் வரை படங்கள் போன்றன முதன்மைத் தரவு சேகரிப்பு கருவிகளாக இருந்தன. பெண்களின் ஈடுபாடு தொடர்பான முழு அறிக்கையினை கருத்திட்டத்தின் இணையதள முகவரியான (http://www.fao.org/valuechaininsmallscalefisheries/background1/) இல் பார்வையிடலாம்.

ஆற்றல்மிக்க மீன்பிடித்துறையில் பெண்களின் பங்கு

பெரும்பாலான முதன்மை உற் பத்தி முறைமைகளில் பெண்கள் குறிப்பிடத்தக்களவு பங்குவகிக் கின்றனர். மீன்பிடி சமூகங்களில் உள்ள பெண்கள் பல பரிமானங் களில் பங்களிப்பினை வகிக்கின் றனர். மீன்பிடித்துறையில் வியா பித்திருக்கின்ற பெண்கள் சந்தை நடவடிக்கைகள், மீன்பிடி பொறித் தொகுதிகளை செயற்படுத்தல் போன்ற மீன்பிடித்துறைசார் பங்க ளிப்புகளை வழங்குகின்றனர். மற்றும் மீன்பிடித்துறை சாரா துறைகளான வாரிசுகளை உரு வாக்குதல், குடும்பத்திற்கு பாது காப்பளித்தல், சமூக வலைய மைப்பில் இணைப்பு முகவர்களாக செயற்படல், உள்ளூர் கலாசாரத் தின் பிரதிநிதிகளாக இருத்தல், சமூக தொழிலாளர்களாகவும் மற் றும் கட்டுப்படுத்துனர்களாகவும் இருத்தல் ஆகிய இருதுறைகளி லும் அவர்களின் பங்களிப்புக்கள் அடையாளப்படுத்தப்பட்டன. எவ் வாறாயினும், ஆண்களும் பெண் களும் பல்வேறுபட்ட மற்றும் மாறுபட்ட பங்களிப்பினை மேற் கொள்வதனால் நவீன மீன்பிடித் துறையிலும் மற்றும் நீரியல் வளர்ப்பு துறையிலும் செயலாற்ற லானது பல்லினப்படுத்தப்பட்டுள் ளது. மிகவும் கூட்டானதும் மற்றும் சக்திவாய்ந்ததுமான இந்தப்பங்க ளிப்பானது கலாசாரம், விழுமி யங்கள், மனோபாவம் மற்றும் வளங்களின் கிடைப்பனவுத்திறன், அவர்கள் மீதான கட்டுப்பாட்டினை கருத்திற்கொண்ட நெறிமுறைகள் சமூகசெயற்பாட்டுத்திறன், பயன்ப டுத்தப்படுகிற தொழில்நுட்பத்தின் வகை, சமூகமயப்படுத்தலின் அளவு, உற்பத்தியில் பங்களிப்பு போன்ற பரந்த வீச்சுள்ள காரணி களில் தங்கியுள்ளது. மீன்பிடித்து றையில் பெண்களின் பங்களிப்பா னது வகுப்பு, சமயம் மற்றும் சமூக பொருளா தார நிலை என்ற வகையில் பிரதானமாக வடிவ மைக்கப்பட்டுள்ளது.

நாளாந்த வீட்டு வேலைகள், பிள் ளைப்பாதுகாப்பு, நாளாந்த கொள் வனவு, உணவு தயாரிப்பு, இளம் பிள்ளைகளின் கல்விக்கு மற்றும் வயது முதிர்ந்தவர்களின் பாரமரி பிற்கு அனுசரணையளித்தலுடன், மீன்பிடித்துறையிலும் ஈடுபடுதல் பெண்களின் பிரதான பங்க ளிப்பாக அமைந்திருக்கிறது. ஊதி யம் வழங்கப்படாத பெண்களின் சேவைகள் நிதியியல் ரீதியாக அளவிடப்படுவதில்லை. மேலும் உலகம்பூராகவும் மீன்பிடி சமூகத் தினால் முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ளப்படுவதுமில்லை. பொது வாக சமூகநலனுக்கு பெண்களின் முக்கிய பங்களிப்பாக இருக்கிற குழந்தை பாதுகாப்பு, உடல்நல பாதுகாப்பு, கல்வி, களியாட்டம் போன்றவைகளுக்காக மீன்பிடி சமூகத்தினர் ஆகக்குறைந்த வசதி களை கொண்டவர்களாக உள்ள னர்.

மீன் உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பு வளர்ந்துவருகின்ற நீரியல் வளர்ப்புத்துறையுடன் மிக வும் முதன்மையானதாக காணப் படுகிறது. சீனா, தாய்லாந்து, வியற்னாம் போன்ற இடங்களில்



உரு 1: மீன்பிடித்துறைகளில் பெண்களின் ஈடுபாட்டின் கால எல்லை
டி. சில்வா, 2012

குறிப்பாக கிராமப்புறங்களில் தற் பொழுதுள்ள விவசாய முறைமை யுடன் ஒருங்கி ணைந்ததாக காணப்படுகின்ற இவ் ஆசிய நீரியல்வளர்ப்பு உற்பத்தியானது உலக விநியோக உற்பத்தியிலும் 90 வீதத்திற்கான பாரியபங்க ளிப்பை வழங்குகிறது. இதில் பெண்கள் முக்கிய பங்கு வகிக் கின்றனர். அதற்கு மேலாக, சிறிய அளவில் காணப்படுகின்ற பெரும்பாலான உற்பத்தி முறை மைகள் பெருமளவு பெண்களின் கைகளிலும் அவர்களின் பங்களிப் பிலும் சார்ந்துள்ள குடும்ப தொழிலாளர்கள் மீது தீவிரமாக தங்கியுள்ளமை பெரியவிடயமா கும். நீரியல்வளர்ப்பில் ஈடுபடுகின்ற பெண்களின் முக்கிய பொறுப்புக் களாக உணவூட்டல், உணவு தயாரித்தல், குளங்களினை பராம ரித்தல், வலை சீரமைத்தல் மற்றும் நீரியல் வளர்ப்பு தளங்களில் பளுவற்ற பராமரிப்பு வேலைகள், பண்ணை உணவகங்களில் உணவு வழங்கல் அல்லது வேலை செய்தல், அறுவடைசெய்தல் மற் றும் தரப்படுத்தல் போன்றன காணப்படுகின்றன. மேலும் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா முழுவதும் இது பொதுவான இயல்பாக காணப் படுகிறது.

ஆற்றல் மிக்க உலகளாவிய மீன்பிடித்துறையில் பாலின பகுப்பாய்வு

ஆண்களினதும் பெண்களினதும் பங்கு எவ்வாறானது என்பது தொடர்பாகவும் எவ்விடங்களில் எக்காலப்பகுதியில் பங்களிப்பு இடம்பெறுகிறது தொடர்பாகவும் செயற்பாட்டு விபரத்திரட்டு இலக்கு வைக்கிறது. வகுப்பு, சமயம், குறிப்பாக சமூக விதிமுறைகள் சமூகத்தில் பெண்கள் மற்றும் ஆண்களின் பங்களிப்பினை தீர் மானிப்பதில் முக்கியபங்கு வகிக் கிறது. பாலியல் சமத்துவமானது ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் மீனவசமூகங்களுக்கி டையே பொதுக்காரணியாக காணப் படுகிறது. பெண் உறுப்பினர்கள் பழமைவாத சமூகத்தில் முக்கியமா னதும் பெறுமதியானதுமான பங்கு வகிக்கிறார்கள். கிடைப்பனவுதிறன் மற்றும் கட்டுப்பாட்டு முறைமை யானது நிலம், சாதனங்கள், தொழிலாளர், மூலதனம் மற்றும் கடன், கல்வியுடன் பயிற்சி போன்ற உற்பத்தி வளங்களை கருத்தில் கொள்கிறது. இது வளத்தின் கிடைப்பனவுதிறனும் ஒதுக்கீடும் மற்றும் பயன்பாடு தொடர்பான தீர்மானத்தின் மீதான கட்டுப்பாடு ஆகிய இரண்டி னையும் வேறுபடுத்துகிறது. விப ரத்திரட்டு கருத்திட்டத்தில் பெண்க ளின் சமனான பங்கெடுப்பானது தடுக்கப்படுதலின் அளவினை பரி சோதிக்கிறது. உதாரணமாக பெண் கள், வருவாய் அல்லது நிலத் தினை பெற்றுக்கொள்வதில் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே வாய்ப்புக்களை கொண்டிருப்பதால் உற்பத்தி உள்ளீடுகள், வணிக வாய்ப்புகள் அல்லது சுதந்திரமான வணிக உற்பத்தியாளராக உருவா குவதற்கு, குழுக்களாக இணைவ தற்கு இயலாமையாக இருக்கக் கூடும். பொதுவாக, ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் பெரும்பாலான மீனவசமூகங்களில் மீனவர்கள் ஒரு சந்ததியில் இருந்து மற்றொரு சந்ததிக்கு பரிமாற்றப்படுகின்ற நில உரிமையாண்மையை கொண் டுள்ளார்கள். அவர்கள் நிலம் மற்றும் மீன்பிடி சாதனங்களினை அடையக்கூடிய வாய்ப்பு மற்றும் கட்டுப்படுத்தும் உரிமைகளினைக் கொண்டுள்ளார்கள். நிதியியல் மற்றும் கடன் முகாமைத்துவ செயற்பாடுகள் பெண்களின் பொறுப்பாக காணப்படுகின்றது. அவர்கள் பல முறைசாரா சிறிய நிதியியல் செயற்பாடுகளில் ஈடு படுகிறார்கள். அதற்கு மேலும், அவர்களின் வாழ்க்கைத்துணைவ ரின் சம்மதத்துடன் நிதியியல் வளங்களின் மீது தீர்மானமெடுக் கின்ற அதிகாரத்தினை கொண்டுள் ளார்கள். பொதுவாக, பெரும்பா லான பெண்கள், வளங்களின் குறைவான கிடைப்பனவுத்திறனுக் கான வாய்ப்பு மற்றும் தீர்மான மெடுப்பதில் போதிய அதிகார மின்மையை கொண்டிருப்பதனால் செயலாற்றல் மிக்க மீன்பிடித்துறை யின் செயலாக்க முனைகளில் பங்கெடுக்கின்றனர். இவர்களின் செயற்பாடானது பாரம்பரிய நுட் பங்களினைப் பயன்படுத்தி சிறிய அளவிலோ (வழமையாக அபிவி ருத்தியடைந்து வருகின்ற நாடு களில் மட்டும்) அல்லது தொழிற் சாலை மட்டத்தில் தொழிற்சாலை தொழிலாளர்களாகவோ (பொது வாக அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரு கின்ற நாடுகளில்) காணப்படுகி றது. இச்செயற்பாட்டு நடவடிக்கை களில் நிதியியல் இலாபமானது அநேகமாக குறைவாக காணப்படு வதுடன் நியாயமான வணிகத்தில் ஈடுபடுவது போன்ற இலாப பகிர்வு ஒழுங்குமுறைகள் காணப்ப டுவதில்லை. பெண்களின் குன்றிய வளநிலைமை காரணமாக வீட்டின் நுகர்விற்கான பாவனைக்காக அல் லது மீள்விற்பனைக்காக கொள்வ னவு செய்கின்ற மீனுக்குப் பதி லாக பாலியல் வியாபாரத் தில் ஈடுபடுகின்றனர். இது அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகளில் பல மீனவ சமூகங்களுக்கு இடையில் காணப்படுகின்ற பொதுவான நிலை யாகும். மேலதிகமாக, சிலசமயங் களில் பெண்கள் கடலுணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் தொழிலினைப் பெறுவதற்கும், மேலதிக வேலை நேரத்தினைப் பெறுவதற்கும், அல்லது பதவி உயர்வு அல்லது ஏனைய வெகுமதிகளினைப் பெறுவதற்கும் பாலியலை விற்கின்றனர். அபிவி ருத்தி அடைந்து வருகின்ற மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பொதுவாக கடலுணவு பதப்படுத்து கின்ற தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளர்களின் கூறப்படாத கதையாக இது காணப்படுகிறது.

மாறாக, மிக உயர் கல்வி அறிவு பெற்ற பெண்கள் அல்லது வளங் களின் சிறப்பான கிடைப்பனவு வாய்ப்பினைப் பெற்றவர்கள்

செயல்திறன்மிக்க மீன்பிடித்துறையின் உயர்மட்டங்களில் தொடர்பு பட்டவர்களாக இருக்கின்றனர். இதனால் கருதுவது என்னவென்றால், இது விதிமுறை அல்லாத போதிலும் பெண்கள் இவ்வுயர் மட்டத்தில் அதிகரித்த நிதியியல் நன்மைகளையும் வளங்களின் கிடைப்பனவு வாய்ப்பினையும் அனுபவிக்க முடியும். பொதுவாக ஆண்கள் உற்பத்தி (பிரதான பகுதி) செயற்பாடுகள், மீன்பிடி கலங்கள், வலைகள், ஏனைய மீன்பிடி சாதனங்கள், மற்றும் குளக்கட்டுமானம் போன்றவற்றில் பெருமளவில் ஈடுபடுகிறார்கள். மற்றொருபுறம், செயல்முறைப்படுத்தலில் பெண்களின் பங்கின் நிமித்தம் அவர்கள் பதப்படுத்துகின்ற உபகரணங்கள் மற்றும் மீன் கொள்வனவிலும் பதப்படுத்தலிலும் பொறுப்பாக இருத்தல் மற்றும் சில்லறை விற்பனையிலும் பெருமளவு முதலீடு செய்கின்றனர். இந்த வேறுபாடானது ஒவ்வொரு மீன்பிடிப்பிரதேசத்திலும் நாட்டிலும் இருப்பது முக்கியமாக அவதானிக்கப்படக்கூடியதாக இருக்கிறது.

வினைத்திறன்மிக்க செயற்பாட்டில் காணப்படுகின்ற பாலினப் பங்களிப்பு வேறுபாடுகளுக்கு மேலதிகமாக சமூக பொருளாதார மட்டங்களில் ஏற்றத்தாழ்வுகளும் காணக்கூடியதாக உள்ளது. உயர் வருவாய் வகுப்பினுள் இருக்கின்ற பெண்களும் ஆண்களும் பெறுமதி செயற்பாட்டில் முனைப்பான பங்கு வகிக்கின்றனர். வழமையாக ஏற்று மதி இறக்குமதி மட்ட செயற்பாட்டில் உயர் இலாப மட்டத்தினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இதற்கு மாறாக தாழ் வருமானம் மட்டத்தினர் பலவீனமான பேரம் பேசுகின்ற சக்தியினையும் வளங்களின் மீது மற்றும் செயல்திறனின் விலைகளின் மீதும் குறைவான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளனர் என்பது பெரும்பாலும் திகைப்பிற்கு இடமில்லாமல் இல்லை. ஆகையினால், இந்த செயற்பாட்டில் பங்குகொள்பவர்கள், மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருப்பதுடன் வினைத்திறனான செயற்பாட்டின் ஊடாக ஆகக்குறைந்த வாய்ப்புகளின் பரம்பலைக் கொண்டுள்ளனர். பாரம்பரியகூட்டு மற்றும் நீண்ட செயற்பாடுகளிலும் பார்க்க சில முனைகளுடன் நவீன பெறுமதி செயற்பாட்டில் பெண்களின் ஈடுபாடு மிகக்குறைவாக காணப்படுகிறது. மீன்பிடித்துறையில் இருந்து பெண்கள் விடுபடுவது உள்ளூர் மீன்பிடி பண்பாட்டிலும் தொழிற்துறையின் நிலைத்திருப்பிலும் பாதகமான இடையூறுகளை ஏற்படுத்தும்.

பாரம்பரிய செயல்திறன்மிக்க மீன்பிடித்துறையானது உற்பத்தியாளர்கள்/ மீனவர், இடைநிலையாளர்களில் (வணிகர்கள், மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், இறக்குமதியாளர்கள் போன்ற) இருந்து ஆரம்பிக்கின்ற பல முனைகளில் உருவாக்கப்பட்டது. மாறாக நவீன செயற்பாடுகள் கச்சிதமானது மேலும் மீன்பிடி மற்றும் மீன் பண்ணைகள் தவிர அனைத்து சந்தை தொழிற்பாடுகளும் சில்லறை செயற்பாடுகள் மூலமாக கையாளப்படுகிறது. இங்கு பெண்களின் பங்களிப்பு முக்கியமற்றதாக மாறுவதுடன் குறைவான வருமானங்கள், தொழில் பாதுகாப்பற்ற வேலைச்சூழலுடன் கூடிய பதப்படுத்தும் நிலையங்களில் கூலித்தொழிலுக்கு வரையறுக்கப்படுகிறது.

வரலாறு முழுவதும் மற்றும் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான பெண்கள் செயல்திறன்மிக்க மீன்பிடித்துறையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற அதேவேளை உணவு பங்களிப்பு அதேபோல் வேலை வாய்ப்பின் ஊடாக அவர்களின் குடும்பத்தினர், வீட்டுத்துறை ஆகிய இரண்டுக்கும் நேரடியாக உதவியளிக்கிறார்கள். பெண்களின் பங்களிப்பு மீன்பிடித்துறைகளுக்கு இடையிலும் சமூகங்களுக்கு இடையிலும் நாடுகளுக்கு இடையிலும் பிராந்தியங்களுக்கு இடையிலும் வேறு படுகின்ற போதிலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உள்ள பெண்கள் உற்பத்தித்துறையில் மிகமுக்கியமான பங்குவகிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறார்கள். இவ் மீன்பிடித்துறையானது வணிகதொழில் முயற்சிகளிலும் பார்க்க வாழ்வாதாரப்பொருளாக இருக்கின்ற அதேவேளை நியமாகவும் காணப்படுகிறது. மீன்பிடிக்கலங்கள் மற்றும் படகுகள் போன்ற மூலதன கருவிகள் பற்றாக்குறையாக இருப்பதனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உள்ள பெண்கள் இவ் இடைவெளியினை நிரப்புவதற்கு முக்கிய பங்கு வகித்தார்கள். இந்நிலைமையானது தற்பொழுதும் உபகரணங்கள் வரையறுக்கப்பட்டதாக இருக்கின்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் காணப்படுகிறது. எவ்வாறாயினும் அதிகளவு தொழிற் சாலைகளாக மாற்றப்பட்ட துறைகளுள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மூலதன உபகரணங்கள் அதிகரித்துள்ளதுடன் மற்றும் வணிக உற்பத்திகளுக்கான நவீன மீன்பிடியானது வளர்ச்சியடைந்துள்ளது. இந்தப் போக்குடன், காலப்போக்கில் பல அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பெண்கள் மீன்பிடித்துறையிலிருந்து விலகுவதற்கு ஆரம்பித்தார்கள். பெண்களின் பங்களிப்பு முற்றுமுழுதாக மறையாத பொழுதிலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அவர்களின் பங்களிப்பு படிப்படியாக மறைந்துகொண்டிருக்கிறது. உதாரணமாக, வயது முதிர்ந்த சனத்தொகையுடன் கூடிய தூர கிழக்கு நாடுகளில் மீன்பிடித்துறையில் ஈடுபடுகின்ற பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. குறிப்பாக வயது முதிர்ந்த பெண் மீனவர்கள் விலகியிருக்கிறார்கள்.

ஆற்றல்மிக்க மீன்பிடித்துறையில் மற்றும் நீரியல்வளர்ப்பில் பாலின ஈடுபாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து வளங்களின் கிடைப்பனவுத்திறன்

மற்றும் கட்டுப்பாடானது மீன்பிடித் துறையில் தொடர்ச்சியாக ஏற்படு கின்ற மாற்றங்களில் இருந்து ஆதாயத்திற்கு இயலுமையாக இருப்பதற்கும் உயிர்பிழைப்பதற்கு மான இயலுமைக்காக முக்கியமா னது என சான்றாக இருக்கிறது. நிதியியல் மூலதனம், நடைமுறைப் படுத்துவதற்கான உட்கட்டமைப்பு, புதிய உற்பத்தி முறைமையின் அறிவு, மனித மற்றும் சமூக மூலதனம், திறன்களும் ஒட்டு மொத்த நிறுவன இயலுமையும் மற்றும் செயல்திறன் மிக்க மீன்பிடித்துறையில் அதிஉயர் பரம்பல் ஆதாயத்தினை அடைவ தற்கு இயலுமையளிக்கின்ற போதி ய சக்தியற்ற தொழிலாளர்களான மற்றைய காரணிகளை சிறப்பாக அடைவதற்கான வளங்களை உள்ளடக்க முடிந்தது. மீன் மற்றும் மீன் உற்பத்திகளுக்காக விரை வாக மாறுகின்ற சந்தை நிலை மையுடன் வளருகின்ற செயல்திற னில் சமத்துவமின்மையானது குறிப்பாக பெண்கள் போன்ற பலவீனமான குழுக்களுக்கான வாழ்வாதார அச்சுறுத்தலுக்கு எதி ராக சிலவகை பாதுகாப்புக்கான அவசியப்பாடுகளை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. துரதிர்ஷ் டவசமாக, வளங்கள் நிறைந்த நவீன மற்றும் சிக்கலான ஆற்றல் மிக்க மீன்பிடித்துறை பல்வேறு புதிய பல பாதைகளை திறந்தி ருக்கின்றது. அதேவேளை பெண் கள் போன்ற வறிய மற்றும் பலவீனமான குழுக்கள் வினைத் திறனான செயற்பாட்டின் முனைக ளிலும், குறைந்த பெறுமதியை ஈட்டுகின்ற செயற்பாடுகளிலும் தொடர்ந்தும் இருக்கிறார்கள்.காலப் போக்கில், பெண்களின் நிலை மீனவப்பெண்கள் என்ற நிலையில் இருந்து தொழிற்சாலை தொழிலா ளர் என்ற நிலைக்கு மாறியிருக் கிறது. அவ்விரண்டு பங்களிப்புக்க ளும் உயர் அளவு பல வீனமாக இருக்கின்ற போதிலும் பெண்க ளுக்காக அமுல்படுத்தப்படுகிற சில வகை சமூகபாதுகாப்பு முத லீடுகள் சிபாரிசுசெய்யப்படுகிறது. மேலும், புதிய சந்தைகளினுள்ளும் அதிக இலாபகரமான தொழில் முயற்சிகளிலும் பெண்க ளின் நுழைவுக்கு நேரடியாக உதவு கின்ற, மீனுக்காக பாலியல் பரிமாற்றத்தின் ஆபத்தின் விழிப் புணர்வை அதிகரிக்க, மீன்பிடித்து றையில் தொழிற்படுகின்ற தொழிற் சாலைகளுக்கான ஒழுங்குபடுத்தல் பொறிமுறை உள்வாங்க முடிந்த தது. அனைத்து சிபாரிசுகளும் மேலதிக கொள்கையடிப்படை யிலான தலையீடுகளுக்காக தெளி வாக வேண்டப்படுகிறது.

முடிவு

முடிவாக, ஆற்றல்மிக்க மீன் பிடித்துறையின் வரலாற்றின் எல்லா காலப்பகுதிகளிலும் பெண் கள் பெரும்பாலும் முக்கியமான ஆனால், கண்ணுக்கு புலப்படாத பங்கினை வகித்திருந்தனர். அவர்க ளின் பங்கினை வளர்ப்பதற்கு அல்லது மேல்நோக்கி உயர்த்துவ தற்கு முடியாத வரையறுக்கப்பட்ட வளங்களுடன் ஆற்றல்மிக்க மீன் பிடித்துறையில் அடிமட்டத்தில் இருப்பதை அவர்களாகவே கண்டு கொண்டனர். பெண்களின் பங்க ளிப்பிற்கு போதிய அங்கிகார மின்மை, சமூக தனிமைப்படுத்தல், கலாசார தடைகள், ஏற்றுக் கொள்ளாமை, கண்டுகொள்ளாமல் இருத்தல் அல்லது மீன்பிடித்துறை முகாமையாளர்களினாலும் கொள்கை வகுப்பாளர்களினாலும் உதாசீனப் படுத்தல், கொடுப்பனவில் சமத்து வமின்மை, வரையறுக்கப்பட்ட வளங்களின் கிடைப்பனவு போன் றன பொதுவாக முகங்கொடுக் கின்ற இடர்களாகும். ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருவரி னதும் பங்களிப்பின் முக்கியத்து வத்தினை உறுதிப்படுத்துவதற்கும் இருபாலினரதும் மிகவும் சமத்துவ மான இலாபப்பகிர்விற்கு உதவிய ளிப்பதற்கும் எந்தவொரு பாலின கண்ணோட்ட பணிக்கமர்த்தும் செயல்திறன் பகுப்பாய்விலும் இது முக்கியமாக இருக்கிறது. மீன்பிடித் துறையில் இருந்து பெண்களின் விலகல் உள்ளூர் மீன்பிடி கலா சாரம் மற்றும் தொழிற்துறையின் நிலைத்திருப்பில் பாதக தலையீட் டினை ஏற்படுத்தும். ஆற்றல்மிக்க மீன்பிடித்துறை மற்றும் நீரியல் வளர்ப்பு அத்துடன் பாலின பங்கெடுப்பு சொத்தாக இருப்பது சான்றாக இருக்கிறது. வளங்களின் கிடைப்பனவு மற்றும் கட்டுப்பாடு போன்ற இவைகளின் பங்கெடுப் பின் இயலுமை வாழ்வதற்கு மட்டுமல்ல மீன்பிடித்துறையில் நடப்பிலுள்ள மாற்றங்களிலிருந்து வெற்றிபெறுவதற்கும் முக்கியமாக இருக்கிறது. மீன்பிடித்துறை மற் றும் நீரியல்வளர்ப்பின் சொத்துக் களாக நிதியியல் மூலதனம், புதிய உற்பத்தி முறைமை தொடர்பான அறிவு, மனித மற்றும் சமூக மூலதனம் (திறன்கள், ஆற்றல் மிக்க மீன்பிடித்துறையில் சக்தி வாய்ந்த பங்கெடுப்பாளராக செயல்படுவதற்கான இயலுமையை ஏற்படுத்துவதற்கு கூட்டான நிறு வன அமைப்பு) காணப்படுகிறது.

ஒரு சாத்தியமற்ற திரித்துவம்

பேராசிரியர். டனி அத்தபத்து

பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
ருகுணு பல்கலைக்கழகம்

அறிமுகம்

நாணயங்களை ஒழுங்கு படுத்துவதற்கு மத்திய வங்கிகளின் நாணயம் சார்ந்த தலையீடு பல நாடுகளில் பேரினப்பொருளாதார கொள்கை தொடர்பான தற்கால கலந்துரை யாடல்களில் சூடான விவாதத் தலைப்புக்களாக மாறியிருக்கின் றன. உலகளவிலான மூலதனச்சந் தைகளில் நிதிசார் கொந்தளிப் பின் விளைவிலான நாணய மாற்று வீதத்தின் நிலையற்ற தன்மையானது அவர்களின் நாண யங்களை நிலைப்படுத்துவதற்கான முனைப்பான தலையீட்டுக்கு மத் திய வங்கிகள் வலிந்திழுக்கப் படுதல் அதிகரித்திருக்கிறது. இந்நி லைமையினை பின்நோக்கி பார்ப்பதும் மற்றும் IS.LM - BoP என அறியப்பட்ட மண்டல் பிளமிங் மாதிரியினை (Mundell-Flemming Model) ஆராய்ந்து பார்ப்பதும் பயனுடையதாக இருக் கின்றது. றொபேர்ட் மண்டல், நோபல் லியுரீட், மற்றும் மார்கஸ் பிளமிங் (Robert Mundell, a Nobel Laureate and Marcus Flemming) ஆகியோர் மாதிரியினுள் ஒருங்கி ணைந்த சர்வதேச வர்த்தகம் மற்றும் மூலதனப் பாய்ச்சல் கார ணிகளை விரிவுபடுத்தினார்கள். மாதிரியானது 50 வரு டங்களுக்கு மேலான காலத்திற்கு முன்னர் **மண்டல் மற்றும் பிளமிங்** ஆகி யோரினால் முதலில் புறவடிவ மைப்பு கொடுக்கப்பட்ட பொழுதி லும் இற்றைவரை பொதுக்கொள் கைக்கு தகவலளிப்பதில் குறிப் பிடத்தக்க பங்கு வகிக்கின்றது.

கொள்நெறித் தெரிவு : மூடிய மூலதனச்சந்தைகள்

பொருளாதாரத்தில் நிலையான பரிமாற்ற வீதம், சுயாதீன மூலதன அசைவு மற்றும் சுதந்திர நாணய கொள்கை இவை மூன்றையும் ஒரேநேரத்தில் பராமரிக்கமுடியாது என கூறப்படுகின்ற சாத்தியமற்ற திரித்துவம் அல்லது விரும்பத்த காத மூன்றில் ஒன்றை தெரிவு செய்யும் இக்கட்டான நிலைமை யினை எடுத்துக்காட்டுவது (முத் தலைக்கொள்ளி நிலை) மண்டல் - பிளமிங்கின் கட்டமைப்பின் அடிப் படை பங்களிப்பாக காணப்படுகி றது. நாடுகள் இம்மூன்று கொள் நெறித் தெரிவில் இரண்டினைத் தெரிவுசெய்ய முடியும். (நாணய சுதந்திரம், பரிமாற்றவீத உறுதிப் பாடு, சுயாதீன மூலதன ஓட்டம் அல்லது நிதி ஒருங்கினைப்பு) ஆனால் மூன்றினையும் ஒரே சம யத்தில் அடைவது சாத்தியமற் றது. உதாரணமாக, ஐக்கியஇராச் சியமானது சுயாதீன மூலதன நகர் வையும், சுயரதீன பணக் கொள் கையையும் கொண்டுள்ளது. ஆனால் புரளும் பரிமாற்ற வீதத் தினை கொண்டிருக்கவில்லை. மேலும் சீனா சுயாதீன பணக் கொள் கையினையும் நிலையான பரிமாற்ற வீதத்தினையும் கொண் டுள்ள போதிலும் மூலதன அசை வில் வரையறைகளைக் கொண் டுள்ளது. எந்தவொரு பேரினப் பொருளாதார சூழ்நிலைகளின் கீழும் மத்திய வங்கியானது மூன்றினையும் ஒரே சமயத்தில் அடைய முடியாது என மண்டல் கூறியிருந்தார். இரண்டு நோக் கங்களை மட்டுமே அடைய முடி யும். விரும்பத்தகாத மூன்றில் ஒன்றைத் தெரிவு செய்கின்ற முக் கோணமானது உரு. 1 இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. முக் கோணத்தின் மூன்று பக்கங்களில் ஒவ்வொன்றும் நாணயச்சுதந்திரம், பரிமாற்றவீத உறுதிப்பாடு மற்றும் விரும்பத்தக்க கொள்கை இலக் கினை விளக்குகின்ற நிதி ஒருங்கிணைப்பினை பிரதிநிதித்து வப்படுத்துகின்றது. எனினும் முக் கோணத்தின் மூன்று பக்கங்களி லும் ஒரேசமயத்தில் இருப்பது சாத்தியமற்றது.

மூடிய மூலதன சந்தைகளாக அடையாளமிடப்பட்ட உச்சியின் அந்தமானது நாணயக்கொள்கை தன்னாட்சியுடனும் நிலையான பரி மாற்ற ஆட்சியுடனும் இணைக்கப் பட்டுள்ளது. ஆனால் நிதி ஒருங் கிணைப்புடன் இணைக்கப்படவில் லை. – இது 1980களின் நடுப்பகு



உரு 1: மூன்றில் ஒரு தெரிவு முக்கோணம்

திகளிலும் அதற்குப் பின்னரும் பெரும்பாலான அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளின் விருப்பத்திற்குரிய தெரிவாகும். மிதக்கின்ற பரிமாற்றவீத ஆட்சி என அடையாளமிடப்பட்ட இடது உச்சியானது பண சுதந்திரம் மற்றும் நிதி ஒருங்கிணைப்புடன் இணைந்திருக்கிறது. – இது கடந்த இரண்டு தசாப்தங்களின் பொழுது ஐக்கிய அமெரிக்காவின் விருப்பத்தெரிவாகும். பணசுதந்திரம் என அடையாளமிடப்பட்ட வலது உச்சியானது பரிமாற்றவீத உறுதிப்பாடு மற்றும் நிதி ஒருங்கிணைப்புடன் இணைக்கப்பட்டிருக்கிறது ஆனால் பண சுதந்திரத்துடன் அல்ல. – இது யூரோ கட்டமைப்புடன் உருவாகிய நாடுகளின் விருப்பத்தெரிவாகும் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அநேக அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடுகள் நிதி ஒருங்கிணைப்பின் அதிகரிப்பிற்கான கொள்கை குறிக்கோளினை தேர்ந்தெடுத்துள்ளன. இவ்வழியினை தெரிவுசெய்கின்ற நாடு நாணய சுதந்திரத்தின் அளவினை பாதுகாக்க விரும்பினால் பரிமாற்றவீத உறுதிப்பாட்டினை கைவிட வேண்டும் அல்லது பரிமாற்றவீத உறுதிப்பாட்டினை பாதுகாக்க விரும்பினால் பண சுதந்திரத்தினை கைவிட வேண்டும். இதனையே விரும்பத்தகாத மூன்றில் ஒன்றைத் தெரிவு செய்தலானது குறிப்பாக சுட்டிக் காட்டுகிறது.

மூன்று கொள்நெறித் தெரிவுகளின் முக்கியத்துவம்.

மூன்று கொள்நெறி தெரிவில் ஒவ்வொன்றும் மேலே குறிப்பிடப்பட்ட அதாவது, கலப்பு பரிமாற்ற வீதங்கள், சுதந்திர நாணயக் கொள்கை மற்றும் மூல தனத்தின் சுயாதீன அசைவு போன்றவை அதன் தன்னிச்சை யான வழியில் விரும்பத்தக்கது. வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் முதலீட்டில் பரிமாற்ற வீதத்தில் அடிக்கடி ஏற்படுகின்ற மாற்றமா னது விரும்பத்தக்கதாக இல்லை என பொதுவாக கூறப்படுகிறது. சர்வ தேச வர்த்தகமானது பெரும் எண்ணிக்கையான மாறிகளின் மூலமாக அதி உயர் நிச்சயமற்ற வியாபார செல்வாக்கினைக்கொண்டுள்ளது. இந்த நிச்சயமற்ற தன்மை பெரும்பாலான வெளி நாட்டவர்கள் செயல்படுவதினின்றும் தடுக்கின்றது. ஆகையால் நிச்சயத்தன்மையினைக் கொடுக்கின்ற எதுவும் வர்த்தகத்திற்கு நன்மைபயக்கும். உதாரணமாக கூறுவோமானால், நீங்கள் ரூபா 100 மில்லியனுக்கு ஏதாவது உற்பத்தி செய்து அதனை டொலர் பெறுமதியில் விற்பனை செய்வதற்கு திட்டமிடுகிறீர்கள் என வைத்துக்கொள்வோம் இதனை மீண்டும் பரிமாற்றுகின்ற போது ரூபா 140 மில்லியன் பெறுகிறீர்கள் என்று கூறுவோம். எனினும் பரிமாற்ற வீதத்தின் பொழுது இலாபத்திற்குப் பதிலாக நீங்கள் ரூபா 80 மில்லியன் மட்டுமே பெற்றுக்கொள்கிறீர்கள். எனவே பெரிய சேமிப்புடன் கூடிய பெரிய ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இந்த ஊசலாட்டமானது வியாபாரத்தினை அழிக்கின்றது. ஆகையால், திட்டமிடுதல் மற்றும் கையாளுகையின் பொழுது உண்மையில் நன்மையளிக்கக் கூடியதாகவும் இலாபகரமானதாகவும், வர்த்தகத்தை மேம்படுத்துகின்ற இயன்றளவு இயலுமையான சாத்திய தேவைப்பாடும் மற்றும் நிலையான பரிமாற்ற வீததிற்கான அதிக எதிர்பார்ப்பும் வணிகத்தில் அவசியப்படுகிறது. தற்பொழுது 1 டொலர் ஆனது ரூபா 125 இற்கு சமன் என எதிர்காலத்திற்காக எதிர்வுகூறக் கூடியதாக இருப்பின் மட்டுமே நிச்சயத்தன்மையுடன் வணிகத்தில் ஈடுபடமுடியும். ஒருவருடைய தனிப்பட்ட போக்கில் எழுந்தமான மான மாற்றங்களினை ஏற்படுத்தாது இருப்பின் மட்டுமே இது சாத்தியமானது.

அதேபோல், ஒவ்வொரு நாடும் அதன் பொருளாதாரத்தினை முகாமைத்துவம் செய்வதற்காக சுதந்திர மான நாணயக்கொள்கையினை மிகவும் வெளிப்படையான விருப்பத் தெரிவாகக் கொண்டுள்ளது. இது தேசியவாதிகளினதும் பொருளியல் முன்னோடிகளினதும் அறிவுசார்ந்தது. சுதந்திரமான தேசிய மத்திய வங்கியானது பொருளாதாரத்தின் குறிப்பிட்ட அவசியப்பாடுகளுக்கு பொருத்தமானதாக சரிப்படுத்தக் கூடிய வகையில் வட்டி வீதத்தின் மீது கட்டுப்பாட்டு வழிமுறைகளை வைத்திருக்கிறது. ஆகையால் பொருளாதாரமானது பின்னடைவு அல்லது மந்தநிலை காணப்படுமாயின் பொருளாதாரத்திற்கு ஊட்டமளிப்பதற்கு வட்டி வீதமானது குறைக்கப்பட முடியும். அல்லது பொருளாதாரமானது உயர் பணவீக்கத்தினால் கிளர்நிலையில் அல்லது முறிவடையும் நிலையில் காணப்படுமாயின் வட்டி வீதமானது உயர்த்தப்பட முடியும். வேறு வழியில் கூறுவதாயின் வட்டிவீதமானது பொருளாதாரத்தினை துல்லியமாக ஒத்திசைவு செய்வதற்கு முயற்சிப்பதற்காக பயன்படுத்த முடியும்.

மூன்றாவது கொள்கை விருப்பத் தெரிவாக மூலதன நகர்வு காணப்படுகின்றது. இது ஏனைய நாடுகளுக்கு நாணய நகர்விற்கான சுதந்திரம் மற்றும் இலகுவாக முதலீடு செய்யும் தன்மையினைக் கருதுகிறது. அரசானது, கம்பனிகள் அவர்களுடைய நாடுகளில் இலகுவாக முதலீடு செய்ய வசதிசெய்ய முயல வேண்டியதுடன் தொழிற்சாலைகள் அமைத்தல் மற்றும் மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கல் போன்றன இதில் வெளிப்படையான காரணங்களாக காணப்படுகின்றது. இது சுதந்திரவர்த்தகம் மற்றும் உலகமயமாதலை நோக்கிய பொதுப் போக்குடன் இணைந்தது. சாத்தியமான முறையில் உலக நகர்வினை இலகுபடுத்துவதன் மூலமாக நாணயமானது அவசியப்படுகின்ற மற்றும் முக்கிய இடத்திற்கு நகர முடிவதுடன் சிறந்த பலாபலனையும் பெற்றுக்கொள்ள முடியும். மூன்று கொள்கை குறிக்கோள்களும் அவர்களுடைய

சொந்த நன்மைகளுடன் விரும் பத்தக்கதாக தென்படுவதுடன் அனைவரும் இதனை கடைப்பிடிப் பது நன்மையளிக்கும். ஆனால், இது ஏன் சாத்தியமற்ற திரித்துவம் என அழைக்கப்படுகிறது? ஏன் நாம் மூன்றில் இரண்டினை மட்டுமே கொண்டிருக்கமுடியும்?

மண்டல் பிளமிங் கட்டமைப்பில் முத்தலைக்கொள்ளி நிலை

நிலையான பரிமாற்ற வீதத்தினை கைவிடுவதன் மூலமாக சுயாதீன மூலதன அசைவு மற்றும் சுதந்திர நாணயக்கொள்கையினை பராமரிக்க விரும்புகின்ற திறந்த பொரு ளாதாரத்தினை கற்பனை செய் வோமாயின், பொருளாதாரத்திற்கு ஊக்கமளிப்பதற்கு உள்நாட்டு நாணய விநியோகத்தினை விரிவு படுத்துவதன் மூலம் வட்டி வீதங் கள் குறைக்கப்படுவதனாலும் சிறந்த பலாபலனைப் பெறுவதற் காக மூலதனமானது நாட்டைவிட்டு நீங்குவதனாலும் நிரந்தர பரிமாற்ற வீதங்களினை வைத்திருப்பது சாத் தியமற்றதாகக் காணப்படும். இது மத்திய வங்கியின் ஒதுக்கத்தில் சிதைவினை ஏற்படுத்துவதனால் பரிமாற்றவீதத்தில் அழுத்தத்தை ஏற்படுத்தும் அல்லது உறுதியான மற்றும் நிலையான பரிமாற்ற வீதத்தின் சாதகத்தன்மையை இழப்பதன் ஊடாக பரிமாற்ற வீதத்தினை மாற்றும். அரசானது பரிமாற்ற வீதத்தினை பாதுகாக் கின்ற அல்லது வட்டி வீதங்களின் மீது கட்டுப்பாட்டை பேணுதல் போன்றவற்றுக்கு இடையில் தெரிவினை மேற்கொள்ள வேண் டும். அவர்கள் பரிமாற்றவீத மிதப்பினை விடுவதற்கான தெரி வினை மேற்கொண்டால் வணிகமா னது நிலையான வீதத்தின் நிச்ச யத்தன்மையை இழக்கும். ஆனால் நாணயமானது தொடர்ந்தும் இலகு வாக மூலதனமிடப்பட முடிவதுடன் வட்டி வீதத்தினை குறைந்தளவில் வைத்திருக்க முடியும். அரசானது வட்டி வீதத்தினை குறைவாக வைத்திருப்பதனை தொடருமாயின் மூலதனமானது நாட்டைவிட்டு நீங்கும். இது பணப்பெறுமதி இறக்கத்தினை ஏற்படுத்துவதுடன் இறக்குமதிப்பொருட்களின் விலை உயர்வாக (ஆனால் ஏற்றுமதி மலிவானதாக) காணப்படும். உயர் நாணய விநியோகமானது வட்டி வீதத்தினை குறைக்கின்றது அத னூடாக உள்நாட்டு முதலீடு அதிகரிப்பதுடன் உள்நாட்டு நாண யப் பெறுமதியினை நலிவடை யச்செய்கின்றது. இது மொத்த ஏற்றுமதியினை அதிகரிப்பதன் ஊடாக பதிலுக்கு பொருளாதாரத் தினை விரிவுபடுத்துகின்றது. அர சாங்கமானது பொருளாதார வளர்ச் சியின் மீது முக்கியத்துவமளிக்க வேண்டியுள்ளதால் வட்டி வீதத் தினை குறைவாக பேணுவதைத் தவிர வேறு மாற்று வழியில்லை. நிலையான பரிமாற்ற வீதத்தினை பராமரிப்பதற்கான எந்தவொரு முயற்சியையும் கைவிடுதலை இது கருதுகிறது. பெரும்பாலான அபி விருத்தி அடைந்த பொருளாதா ரங்கள் இவ்வகை ஈடுகட்டலை ஏற்றுக்கொள்வதுடன் மிதப்பு பரி மாற்ற வீதங்களினை பராம ரிக்கிறது. நெகிழ்வு பரிமாற்ற வீத ஆட்சியின் கீழ் அடையக்கூடிய விரும்பத்தகாத மூன்றில் ஒன்று தெரிவுக்கான முக்கோணத்தின் இடது மற்றும் கீழ் பக்கத்துடன் இணைக்கப்பட்ட கொள்கை சோடிகளுடன் இந்தக் கொள்கை உருவமைப்பு ஒத்திருக்கிறது. எவ் வாறாயினும், நாணய சுதந்திரத் தினை அடைவதற்கு நாடானது பரிமாற்ற வீத உறுதிப்பட்டினை விட்டுக்கொடுக்க வேண்டும். இது விரும்பத்தகாத மூன்றில் ஒன்று தெரிவிற்கான முக்கோணத்தின் வலது பக்க உச்சியில் இருந்து இடது பக்க உச்சிக்கு இடமாறு வதை உட்கிடையாக உணர்த்துகி றது.

மாற்றீடாக ஒருநாடு சரியான மூல தன நகர்வுடன் நிலையான பரிமா ற்ற வீத முறைமையினை கடைப் பிடிக்கிறது என தற்பொழுது கற்பனை செய்வோமாயின் வட்டி வீதங்களினை குறைப்பதன் மூல மாக பொருளாதாரத்திற்கு ஊட்ட மளிப்பதற்கான முயற்சி மூலதன வெளியோட்டத்தை ஏற்படுத்தும். கம்பனிகள் இயல்பாகவே அவர் களுடைய முதலீட்டின் மீது சிறந்த இலாபத்தினை பெற விரும்புகின் றன. ஆகையினால் இலாபத்தினை பெறக்கூடிய இடங்களிற்கு அவை நகர்கின்றன. இக்காரணத்தினால் மூலதன வெளியோட்டமானது நடை பெறுகிறது. இது நாணயபரிமாற்ற வீதத்தில் அழுத்தத்தை கொடுக்கி றது. அரசாங்கமானது நாணயத் தின் பெறுமதியினை நிலையாக வைத்திருப்பதற்கு விரும்பினால் வட்டி வீதங்களினை மீளவும் உயர்த்தவேண்டியிருக்கும். ஆகை யினால், மூலதன வெளியோட் டமானது பொருளாதாரத்திற்கு ஊட்டமளிப்பதற்கான அரசாங்கத் தின் முயற்சினை பயனற்றதாக் கும். இது அவர்கள் ஆரம்பித்த இடத்திற்கே இட்டுச்செல்லும். மறு புறம் அரசாங்கமானது பணவீக்கத் துடன் போரிடுவதற்காக வட்டி வீதங்களினை அதிகரிக்குமாயின் மூலதனமானது நாட்டினுள் சேர்க் கப்படுவதுடன் பொருளாதாரமா னது ஊட்டமளிக்கப்படும் இதனால் பணவீக்கத்தில் வீழ்வது தடுக்கப் படுகிறது. மற்றொரு வகையில் கூறுவோமாயின், நிலையான பரி மாற்ற வீதங்களுடன் மூலதன நகர்வின் சுதந்திரமானது மந்த நிலையின் மீது போரிடுவதற்காக அரசாங்கத்தின் முயற்சியினால் கடுமையாக குந்தகம் விளைவிக் கப்படுகிறது. வட்டி வீதமானது பொருளாதாரத்தின் இருப்புடன் ஒத்திசைவுக்கு அப்பாற்பட்டதாக இருக்க முடியும் எனவும் கருதப் படுகிறது. மந்தநிலையின் பொழுது உயர் வட்டிவீதங்களுக்கு கடன் கொடுத்தல் (இது பிரச்சி னையை மேலும் மோசமான நிலைக்கு இட்டுச்செல்கிறது) அல் லது செழிப்பின் பொழுது குறைவான வட்டி வீதங்கள் பேணல் (இதுவும் பிரச்சினையை மேலும் மோசமானநிலைக்கு இட் டுச்செல்கிறது). தேறிய விளை வாக மத்தியவங்கியானது நாணய விநியோகத்திற்கான கட்டுப்பாட் டினை இழக்கிறது. இது நாணயத்

தின் கேள்வியினை முனைப்பற்ற வகையில் சரிப்படுத்துகின்றமையினால் கொள்கை கட்டமைப்பானது விரும்பத்தகாத மூன்றில் ஒன்று தெரிவிற்கான முக்கோணத்தின் வலது பக்க உச்சியுடன் இணைந்த கொள்கைச்சோடியுடன் ஒத்திசைகிறது. இது நாணயக்கொள்கையில் எந்தவொரு தன்னாட்சியின் சாத்தியப்பாட்டினையும் நீக்குகிறது. இது எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நடந்தவற்றில் இருந்து வேறுபட்டதாக இல்லை. மேலும் தனியான நாணயத்தினை ஏற்றுக் கொண்டதன் மூலமாக நிலையான பரிமாற்ற வீதங்களில் ஒரேமாதிரியான வடிவத்தினை வரவேற்பதற்கு தனித்தனி நாணயங்களை கைவிட்டிருந்த நாடுகளான ஐரோப்பிய யூனியனும் இம்மாதிரியுரு வினைச் சார்ந்ததாகும்.

அதன் நாணயசுதந்திரத்தினை மீளவும் பெறுவதற்கு ஒரு திறந்த பொருளாதாரத்திற்கான மாற்று வழியானது நிதி ஒருங்கிணைப்பினை அல்லது மூலதன ஓட்டத்தினை விட்டுக்கொடுத்தலுடன் பரிமாற்றவீத உறுதிப்பாடும், நாணயசுதந்திரமும் விருப்பத்தெரிவாகக் காணப்படுகின்றன. மூலதன கட்டுப்பாடுகள் மூலதன அசைவின் நிலையற்ற தன்மையைத் தடுக்கும் அது பரிமாற்ற வீதங்களில் அளவுக்கு அதிகமான அழுத்தத்தினை ஏற்படுத்தும். இது அதனை நிலையாகப் பேணுவதற்கு இலகுவாக்குகின்றமையால், வட்டிவீதங்களினை குறைத்தல் அல்லது வட்டிவீதங்களினை அதிகரிப்பதன் மூலம்மாக பணவீக்கத்துடன் போரிடுவதன் மூலம் மந்தநிலையுடன் போரிட இலகுவாக இருக்கும். இந்த விருப்பத்தெரிவு அரசாங்கத்திற்கு அதிகூடிய சக்தியினை வழங்குகின்றது. இது சிறந்ததும், மிகவும் மோசமான பகுதியாகவும் காணப்படுகிறது. முன்னையநிலைக்கு எதிராக போரிடுவதற்கு அரசாங்கம் ஏதாவது செய்யவேண்டும் என நீங்கள் நினைத்தால் அப்பொழுது இது மீள அழைப்பதற்காக காத்திருக்கிறது. அரசாங்கமானது தனியாளின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன் பொருளாதார ஓட்டத்தின் உரிமையை மறுக்கிறது என நீங்கள் நினைத்தால் இக் கட்டுப்பாட்டு மட்டமானது படுமோசமான நிலையில் காணப்படுகிறது எனக் கூறலாம். பொருளாதாரத்தின் உள்ளேயும் வெளியேயும் மூலதன அசைவுக்கு இடர் ஏற்படுத்துவதன் மூலமாக நாட்டில் கம்பனிகள் முதலீடு செய்வதற்கான ஈர்ப்பு குறைவாகக் காணப்படுவதுடன் மூலதன சேமிப்புகளின் ஆபத்திற்கு இட்டுச் செல்கிறது. இக்கொள்கை கட்டமைப்பானது விரும்பத்தகாத மூன்றில் ஒருதெரிவு முக்கோணத்தின் இடது மற்றும் வலது பக்கத்தின் கொள்கைச் சோடிகளுடன் இணைந்ததாக ஒத்திருக்கின்றது. மூடிய நிதிச்சந்தைகள் மற்றும் நிலையான பரிமாற்றவீதத்தின் கீழ் அடையக்கூடியது. உதாரணமாக முக்கோண உச்சியின் அந்தமானது இவ்விடயத்தில் நாணய சுதந்திரம் நிதி ஒருங்கிணைப்புடன் நிறைவானதாக இருக்கின்றது. 1960களில் உலகம் இவ்வாறுதான் இருந்தது. அரசாங்கங்கள் அமெரிக்க டொலர் உடன் நிர்ணயிக்கப்பட்டிருந்த பொழுது மூலதனத்தின் சுயாதீன அசைவின் மீது கடுமையான வரையறைகளை விதித்திருந்தது. சீன அரசாங்கமானது இவ் ஒழுங்குமுறையின் கீழ் நவீன காலத்திற்கு உதாரணமாக காணப்படுகிறது. (யுவான் நாணயமானது ஒரு ஒருங்கிணைப்பினுள் இணைந்து நகர்ந்த பொழுதிலும்)

நடைமுறையில் மூன்றில் ஒரு தெரிவு

சாத்தியமற்ற திரித்துவம் ஆனது பெரும்பாலான கல்விசார் பொருளியல்லாளர்களுக்காக சுய தெரிவாக உருவாகியிருந்தது. இன்று இதன் உட்பார்வையானது ஒரேமாதிரியாக தொழிலில் ஈடுபடுபவர்களினாலும், கொள்கை வகுப்பாளர்களினாலும் பகிரப்படுகிறது. பல நாடுகளில் மூலதன கட்டுப்பாடுகள் சிதைவடைந்த காலப்பகுதியான 1980களில் திறந்த பொருளாதார பேரினப் பொருளியலாளர்களின் அடித்தளமாக உருவாக்குவதற்கு கோட்பாட்டுரீதியான ஆர்வத்தில் இருந்து சாத்தியமற்ற திரித்துவத்தின் எண்ணமானது சென்றது. அத்துடன் நிர்ணயிக்கப்பட்ட பரிமாற்ற வீதங்கள் மற்றும் நாணய கொள்கை சுயாட்சிகளுக்கிடையே வெளிப்படையான முரண்பாடுகள் காணப்பட்டன. சாத்தியமற்ற திரித்துவத்தின் ஒரு கூற்றானது தீவிர சந்தர்ப்பத்தில் கவனம் செலுத்தியுள்ள போதிலும் - துல்லியமாக நிர்ணயிக்கப்பட்ட நிலையான பரிமாற்ற வீதம் மற்றும் துல்லியமான திறந்த மூலதனக் கணக்குடன் ஒரு நாடு முற்றுமுழுதாக நாணய கொள்கையில் தன்னாட்சி கொண்டதல்ல – மூலதன கட்டுப்பாடுகள் எங்கு இழக்கப்படுகிறதோ அங்கு இயல்பான உலகம் தூக்கி எறியப்பட்டிருப்பது மீள்நிகழ் உதாரணங்களாக காணக்கூடியதாக இருக்கின்றது. அதிக பரிமாற்றவீத விறைப்பும் நாணயகொள்கை தன்னாட்சியும் அதன் விளைவுகளாகும். அதனால் ஒருங்கிணைந்த சவாலானது அதன் நடைமுறையில் உள்ளது. இது மூன்றில் ஒன்றைத் தெரிவு செய்வதன் மூலமாக உட்புகுத்தப்பட்டது. இரட்டைத் தெரிவிற்கு பெரும்பாலான நாடுகள் அரிதாக முகம்கொடுக்கின்றன. பதிலாக நிதி ஒருங்கிணைப்பு மற்றும் பரிமாற்ற வீத நெகிழ்ச்சி வீதத்தினை நாடுகள் தெரிவு செய்தன. நிலையான பரிமாற்றவீத முறைமையின் வலுவான கூற்றினை ஏற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்திலும் கூட நிலையான பரிமாற்ற வீதத்தின் நம்பகத்தன்மை காலத்துடன் மாற்றமடைகிறது (1990களின் ஆரம்பத்தில் ஆர்ஜென்ரினாவினால் நாணயசபை ஆட்சியில் தெரிவுசெய்யப்பட்டது போன்று). மேலும் நாணயசபையின் கண்டிப்பான கூற்றினை மத்திய வங்கியானது அரிதாக கடைப்பிடிக்கிறது. அதேபோல், நெகிழத்தக்க பரிமாற்றவீத ஆட்சி

யினை தெரிவுசெய்கின்ற நாடுகள் சில சந்தர்ப்பங்களில் (சில அடிக் கடி) வெளிநாட்டு நாணய சந்தை களில் உயிர்ப்புடன் தலையிடுகி றது. மேலும் முகாமைத்துவப் படுத்தப்பட்ட மிதப்பு முறைமை யின் வேறுபட்ட கூற்றுக்களை அமுல்படுத்துவதை முடிவுறுத்து கிறது. அதற்கு மேலும், பெரும் பாலான நாடுகள் நிதியின் ஓட்டத் தினை வரையறுக்கின்ற ஒழுங்கு விதிகள் உள்ள இடங்களில் வரை யறுக்கப்படாத அளவில் பகுதி யான நிதி ஒருங் கிணைப்பினை செயல்படுத்துகிறது. அவ்வகை கலப்பு ஆட்சியானது சவால்கள் நிறைந்தது என்பதனை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. கொள்நெறிக் கருவிகளின் அரு மையானது மூன்றில் ஒன்றைத் தெரிவுசெய்வதன் முக்கிய செய்தி யாக காணப்படுகிறது. முத்தலைக் கொள்ளி நிலையில் ஒரு மாறியானது அதிகரிக்கின்ற இடங் களில் (உயர்நிதி ஒருங்கி ணைப்பு போன்ற) கொள்கை வகுப்பா ளர்கள் மாற்றீட்டுக்கு முகம்கொடுக் கின்றனர். இது மற்றைய இருமாறி களினதும் நிறையிடப்பட்ட சராசரி யில் தற்செயல் உள்ளீட்டினை தூண்டுகிறது (தாழ் மாற்றீட்டுவீத உறுதிப்பாடு அல்லது தாழ் நாணய சுதந்திரம் அல்லது இரண் டினதும் ஒருங்கிணைப்பு).

ஐரோப்பிய யூனியனின் பரிமாற்ற வீதபொறிமுறை (Exchange Rate Mechanism-ERM) செயற்பாடா னது மண்டல் இன் சாத்தியமற்ற திரித்துவத்திற்கு பண்டைய உதா ரணமாக இருந்தது. ERM பட்டய மானது நிலையான மற்றும் உறு தியான பரிமாற்ற வீதங்களினை பராமரிப்பதற்காக வெளிநாட்டு பரி மாற்ற சந்தைகளில் தலையிடுவதற்கு தொடர்புபட்ட மத்திய வங்கிக்கு பொறுப்பாணையிடப்பட்டது. அவர் களின் இறைக்கொள்நெறி தொடர் வதில் அவசியமான நெகிழ்வுத் தன்மை உறுப்பினர்களுக்கு வழங் குவதற்காக அவர்களின் உறுப்பி னர்களுக்கு மாற்று நிர்ணய உள்நாட்டு பேரினப் பொருளியல் அவசியப்பாடுகள் கொடுக்கப்பட்டி ருந்தது மேலும் மூலதனக்கட்டுப் பாடுகள் பராமரித்தலுக்கு ERM கூட அர்ப்பணிக்கப்பட்டிருந்தது. ஆகையினால், நாணய கொள்கை யில் நிலையான பரிமாற்ற வீதங் கள் மற்றும் தன்னாட்சியை வைத் திருப்பதற்காக மண்டல் தேற்றத் தினை வைத்துக்கொண்டு மூலதன கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின் றன. ERM உறுப்பினர்களின் பொருளியல் வளர்ச்சி நோக்கங் களை அடைவதில் சிறப்பான விட்டுக்கொடுத்தலாக இது இருந் தது என்று கருதப்பட்டது. வேறு பட்ட அனுமானங்களில் அவசியப் பட்ட பொருளியல் நோக்கங்களாக காணப்பட்ட எந்தவொரு ஐரோப் பிய யூனியன் உறுப்பினர்களும் ERM இற்கு வெளியே தங்கி யிருக்கவேண்டும் அத்துடன் பிரித் தானியா அதன் மிதப்பு பரிமாற்ற வீதத்தினை தக்கவைத்துக் கொள் வதற்கு ERMஐ வெளியே இழுக் கிறது.

வளர்ந்துவரும் சந்தைகளின் அனு பவமானது முத்தலைக்கொள்ளி முக்கோணத்தினை பரிந்துரைப்பது டன் பயனுள்ளதாகவும் உள்ளது. மேலும், வரையறுக்கப்பட்ட ஆனால் வளர்கின்ற நிதியியல் ஒருங்கிணைப்புடன் கூடிய சாத்தியப்பாடுகளை கண்டுகொள் ளாமல் இருக்கிறது. சர்வதேச ஒதுக்கங்களைக் கொண்ட நாடுக ளின் உறுப்பினர்கள் சில முத்த லைக் கொள்ளி தடைகளை குறுகிய காலத்தில் இழக்கக்கூடும். இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆசியாவின் வளர்ந்துவரும் சந் தைகளில் இந்த சாத்தியப்பாடு மாறுபட்ட முத்தலைக்கொள்ளி போக்குகளின் மூலம் வெளிப்படுத் தப்படக்கூடும். அண்மைக்காலங்க ளில் நாணய சுதந்திரத்தின் அள வினை குறைத்தல் மற்றும் பரி மாற்ற வீத உறுதிப்பாட்டினை குறைந்த மட்டத்தில் பேணும் அதேவேளை 1980 களின் பொழுது சில பணியாளர்கள் வேலைக்குறைப்பின் பின்னர் 1990 களில் இருந்து இலத்தீன் அமெரிக்காவின் வளர்ந்துவரும் சந்தை பொருளாதாரங்கள் அவர்க ளுடைய நிதியியல் சந்தைகளை தாராளமயப்படுத்தியது. வளர்ந்து வரும் ஆசிய பொருளாதாரம் ஒருபுறமிருக்க மற்றொருபுறம் பரி மாற்றவீத உறுதிப்பாட்டின் வெளிப் படையான அடைவுகளின் மூல மாக சிறப்பான நிலை மற்றும் அதிக நாணய சுதந்திரத்தினை தொடர்ச்சியாக வெளிக்காட்டுகை யில் வளர்ந்துவருகின்ற நிதியியல் வெளிப்படைத்தன்மை காணப்படு கிறது. இந்த இரண்டு வகையான பொருளாதார வகுப்புக்களும் அவைகளின் சர்வதேச ஒதுக்க வைத்திருப்பின் உயர் அளவுகள் மூலம் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபடுகிறது. அதன் பரிமாற்றவீத உறுதிப்பாடு மற்றும் நாணய சுதந்திரம் போன்றவற்றினை விட் டுக்கொடுக்காமல் சீனா மெதுவாக அதிகரிக்கின்ற நிதியியல் வெளிப் படைத்தன்மையுடன் சர்வதேச ஒதுக்க வைத்திருப்பினை அதிக ரித்திருக்கின்றது.

இலங்கையின் அனுபவம்

இலங்கையின் நடப்பு அனுபவத் தில் பொருளியல் கொள்கை இணைப்போக்குகளை முத்தலைக் கொள்ளி என அழைக்கப்படும் கொள்கை மூலமாக விளக்கப்பட முடியும். வரையறுக்கப்பட்ட அந் நிய மூலதன ஓட்டத்தின் வடி வத்தில் பகுதியளவு நிதியியல் ஒருங்கிணைப்பினை பராமரிக்க விரும்புகின்ற இலங்கை போன்ற சிறிய திறந்த பொருளாதாரமானது பரிமாற்றவீத உறுதிப்பாட்டின் கொள்கைத் தெரிவினை விட்டுக் கொடுப்பதன் மூலமாக நாணய சுதந்திரத்தினை செயலாட்சி செய் யமுடியும். இலங்கையின் மூலதன கணக்கு முற்றுமுழுதாக தாராளம யப்படுத்தப்படாத பொழுதிலும் மூலதன ஓட்டங்கள் மற்றும் வெளி யோட்டங்களானவை அந்நிய கடன்வாங்கல், அந்நிய நேரடி முதலீடு மற்றும் பட்டியலிடப்பட்ட முதலீடு போன்ற வடிவத்தில்

சர்வதேச ஒதுக்கங்களானவை தொடராக நாணய விநியோகத்தின் மீது சுமைதாங்கும் பகுதியாக கொண்டுள்ளது. சாத்தியமற்ற திரித்துவத்திற்கு இணங்க கட்டுப்படுத்த முடியாத மூலதன ஓட்டங்களின் சூழ்நிலையில், நாணய கொள்கை சுயாட்சியையோ அல்லது பரிமாற்றவீத உறுதிப்பாட்டினையோ கொள்கை வகுப்பாளர்கள் தெரிவு செய்யவேண்டியிருக்கிறது. எவ்வாறாயினும் இலங்கையின் மத்திய வங்கி அதன் கொள்நெறிக் கருவிகளாக வட்டி வீதங்கள் மற்றும் பரிமாற்றவீத தலையீடுகளை ஒரே சமயத்தில் பயன்படுத்துகின்ற கொள்கையினை வைத்திருப்பதாக தோன்றுகிறது. மத்தியவங்கி முக்கிய நாணய கொள்நெறிக் கருவியாக இருக்கின்ற கொள்கைவீத வழியின் ஊடாக தாழ்நிலையில் சந்தை வட்டி வீதங்களினை வைத்திருப்பதற்கு முயற்சித்திருக்கிறது. அதே நேரத்தில் மத்திய வங்கியானது தலையீடுகள் மூலமாக பரிமாற்ற வீதத்தினை நிலைப்படுத்த முயற்சிக்கிறது. நீண்ட கால நோக்கில் இந்த கொள்கை கட்டமைப்பு நிலைத்திருக்கத்தக்கதாகவும் வினைத்திறனாகவும் இருக்கிறதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. தாழ் வட்டிவீத கொள்கை சாதகமளிப்பதன் மூலம் கடன் வளர்ச்சியின் நிமித்தம் கட்டியெழுப்பப்படுகின்ற இறக்கு மதிகளின் மீது அதிகரித்த அழுத்தத்தின் பொழுது சில கட்டங்களில் அதிகார அமைப்புகள் பரிமாற்றவீத உறுதிப்பாட்டினை கைவிட வேண்டியிருக்கும்.

முடிவு

சாத்தியமற்ற திரித்துவம் தொடர்பான நவீன பேரினப்பொருளியலாளர்களின் மையக்கருத்தாக இருப்பது குறிப்பிட்ட காலப்பகுதியில் பின்வரும் இரண்டில் ஒன்றினை மாத்திரம் கொண்டிருக்க முடியும் என்ற கருத்தமைவு: திறந்த மூலதன கணக்கு, நிலையான பரிமாற்றவீதம் மற்றும் தன்னாட்சி நாணயகொள்கை. முத்தலைக்கொள்ளி நிலையானது சில பேரினப் பொருளியல் காலப்பரீட்சையில் வெற்றிபெற்ற மற்றும் கடந்தகாலத்தில் காணப்பட்ட தற்காலத்திற்கு ஏற்புடையதாக நிலைத்திருக்கின்ற கட்டமைப்புக்குள் இருக்கிறது. சாத்தியமற்ற திரித்துவம் என அழைக்கப்பட்டதின் அடிப்படையில் மூலதன ஓட்டத்திற்கு சாத்தியமான கொள்கை ஏற்பளிக்கிறது என பல பொருளியலாளர்கள் கருதினார்கள். அதற்கிணங்க, திறந்த மூலதன கணக்குடன், மத்திய வங்கியானது நாணய கட்டுப்பாட்டினையும் பரிமாற்றவீத இலக்கினையும் ஒரே சமயத்தில் செயலாட்சி செய்ய முடியாது. இந்த கட்டமைப்பானது கொள்கை வகுப்பாளர்களினால் எதிர்நோக்குகின்ற விட்டுக்கொடுத்தல்களை முன்னிலைப்படுத்துவதற்கு உதவுகிறது. குறிப்பாக சிறிய திறந்த பொருளியலிலும் அவற்றினைத் தீர்ப்பதற்கு தேர்ந்தெடுத்த தெரிவுகளிலும் பொருத்தமானது.

மண்டல் பிளமிங் வடிவம் சாத்தியமற்ற திரித்துவத்தினை கொண்டிருக்கக்கூடிய எல்லாப் பகுதிகளையும் தெளிவாகக் காட்டுகிறது. தெரிவு செய்யப்படுகின்ற இரண்டு, பொருளாதாரத்தின் மீது முக்கிய விளைவினை ஏற்படுத்துகிறது. ஐரோப்பிய வலய நாடுகள் தவிர பெரும்பாலான அபிவிருத்தி அடைந்த நாடுகள் திறந்த மூலதன கணக்கினையும் மிதக்கின்ற பரிமாற்ற வீதத்தினையும் மற்றும் தன்னாட்சி நாணய கொள்கையினையும் கொண்டுள்ளது. ஆசியாவில் உள்ள கொங்கொங் போன்ற சில விதிவிலக்கு நாடுகள் தவிர ஏனையவை நிலையான பரிமாற்ற வீதத்தினையும் திறந்த மூலதன கணக்கினையும் மேலும் தன்னாட்சி நாணய கொள்கை கடைப்பிடியாத நிலையினையும் கொண்டுள்ளன. எவ்வாறாயினும் பொதுவாக ஆசிய பொருளாதாரங்களில் பெரும்பாலானவை சில மூலதன கட்டுப்பாடுகள் மற்றும் பரிமாற்ற வீத நெகிழ்ச்சித்தன்மை ஆகிய இரண்டினதும் கூட்டிணைப்பைக் கொண்டிருப்பதுடன், நன்கு வரையறுக்கப்பட்ட நாணய கொள்கை கட்டமைப்பு இல்லாத போக்கினையும் கொண்டுள்ளது.

உண்மையில், இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக உலகம் பூராகவும் நாணய கட்டமைப்புகளின் மீளாய்வினை பரிந்துரைக்கிறது. சாத்தியமற்ற திரித்துவத்தினை தீர்ப்பதற்கான சிறந்த வழியாக திறந்த மூலதன கணக்கினை பராமரித்தல் மற்றும் உள்நாட்டு நாணய கட்டுப்பாட்டினை செயலாட்சி செய்வதற்காக பரிமாற்ற வீதத்தினை அனுமதித்தலை பெரும்பாலான நாடுகள் முடிவு செய்துள்ளன - பெரும்பாலும் பண வீக்கத்தினை இலக்காகக் கொண்ட கட்டமைப்பானது தற்கால உலகில், பாதிப்படையக்கூடிய நிலையில் ஆபத்தான அல்லது ஆபத்தற்ற ஊசலாட்டத்தினால் உந்தப்படுகின்ற ஆவியாகக்கூடிய மூலதன ஓட்டமானது சாத்தியமற்ற திரித்துவத்தின் மத்தியாக இருக்கின்ற பெரியளவில் வட்டியை உந்துகின்ற ஓட்டங்களாக இருக்கிறது. இத் தாற்பரியங்கள் முதிர்ச்சியடையாத நிதிச்சந்தைகளோடு வளர்ந்து வருகின்ற பொருளாதாரங்களில் குறிப்பாக தீவிரமானதாக இருக்கிறது. இவ் ஓட்டங்களினை சீராக தாங்க முடிவதில்லை. சாத்தியமற்ற திரித்துவமானது முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் கொள்நெறித் தெரிவுக்கு உதவியளிக்கக்கூடும். திறந்த மூலதன

கணக்கு மற்றும் சுயாதீன மிதப்பு பரிமாற்ற வீதங்கள் இந் நாடு களை பொதுவாக நல்ல முறை யில் பாதுகாத்திருக்கிறது. வளர்ந்து வருகின்ற பொருளாதாரங்களில் எவ்வாறாயினும், அவர்களுடைய ஆழமற்ற நிதிச்சந்தைகள் சர்வ தேச பொருளாதார குணாம்சமான ஆபத்துக்கு உந்தப்பட்ட மூலதன ஓட்டங்களினை உடனடியாக ஏற் றுக்கொள்ள முடிவதில்லை. அதே வேளை, மேம்பட்ட நிதிச்சந்தை களில் திரித்துவத்தின் வலுவான கட்டமைப்புகளில் இருந்து இவை கள் விடுபட்டவையாக காணப்படு கின்றன. ஏனென்றால், அவர்களு டைய நாணயங்கள் ஏனைய நாணயங்களின் மிக நெருங்கிய மாற்றீடாக காணப்படுவதில்லை. சாதாரண சந்தரப்பங்களில், தூண் டப்பட்ட செல்லத்தகாத மூலதன ஓட்டங் கள் இல்லாமல் ஏனைய நாடு களில் இருந்து கணிசமான அளவு வேறுபடுகிற வட்டிவீத முறைப்படுத்தலைப் பேணமுடியும் ஆவியாகக்கூடிய மூலதன ஓட்டங் களினை எதிர்கொள்கையில் அவை அநேகமாக தலையீட்டின் மூலமாக அவர்களின் நாணய பெறுமதி ஏற்ற தடைக்கு கணிச மான திறனைக்கொண்டுள்ளது. திரித்துவமானது கொள்நெறிக் கரு விகளின் இடைத்தொடர்புகளின் நினைவூட்டுகையாகும். ஆனால் கிடைக்கக்கூடிய கொள்நெறி வாய்ப்புகளின் பரப்பெல்லைக்கு போதாத வழி நடத்தலாகும்.

(28 ஆம் பக்க தொடர்ச்சி)

Jolliffe, L. (2003). The lure of tea: history, traditions and attractions. In M,Hall, L.Sharples, R.Mitchell, N.Macionis and B. Cambourne(Eds), Food Tourism around the World: Development, Management and Markets, London:Butterworth-Heinemann.

Jolliffe, L. (2007). Connecting tea and tourism. In L.Jolliffe (Ed.), Tea andtourism:Tourists, traditions and transformations (pp.3-20). Clevedon: Channel view publications.

Journal of Heritage Tourism, 4(4), 331-344

Kandasamy, V.,M.,(2002), The Struggle Continuous: Women's leadership in Plantation Trade Unions in Sri Lanka, Kandy: ISD Publication

Lea, J. P. (1988). Tourism and development in the Third World.London: Routledge.

Mathews,H. (1978). International tourism: A political and social analysis. Cambridge Massachusetts: Schenkman.

Mowforth,M.andMunt,I., (2003), Tourism and Sustainability. Development and New Tourism in the Third World, Routledge publication, London

Muller, R. (1979). The multinational corporation and the under development of the Third World. In C. K. Wilber (Ed.). The political economy of development and under development. New York: Random House.

Murphy, P. E. (1985). Tourism: A community approach. London: Routledge.

Radhakrishnan, V. (2008), Indian originin Sri Lanka: their plight and struggle for survival, Proceedings of First International Conference & Gathering of Elders, USA: International Center for Cultural Studies

Richards, G. (2001). The development of cultural tourism in Europe. In G. Richards(Ed.). Cultural attractions and European tourism. Wallingford: CABI

Roe, D. & Urquhart, P. (2004). Pro-poortourism: Harnessing the world largest industry for the world's poor: Turning the rhetoric into action for sustainable development and poverty reduction. In T. Bigg (Ed.). Survival for a small planet: The sustainable development agenda. London: Earthscan.

Rogerson, C. M. (2006). Pro-poor localeconomic development in South Africa: The role of pro-poor tourism. Local Environment, 11(1), 37-60.

Sriram,V. (2011), Travel And Tourism, India :ICRA Management Consulting Services Limited

QD/66/News/ 2014 எனும் இலக்கத்தின் கீழ் இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது

பொருளியல் நோக்கு

1975 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டு வரும் **பொருளியல் நோக்கு** சமகால சமூகபொருளாதார மற்றும் அபிவிருத்தி விடயங்களின் ஆழமான ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமான ஒருபொது மன்றத்தை வழங்குகிறது. இவ்வேட்டின் அண்மைக்கால இதழ்கள் பின்வரும் முக்கிய தலைப்புகளை உள்ளடக்கியுள்ளன.

- நிலைபேறாண்மையை செயற்படுத்தல் அடுத்த தசாப்தம்: தென்னாசிய கூட்டாய்வின் விளைவு
- பொருளாதார வளர்ச்சியில் நாணயம் மற்றும் இறைகொள்நெறி
- இலங்கை - *CHOGM 2013*
- இலங்கையில் பிராந்திய அபிவிருத்தி
- சிறிய மற்றும் நடுத்தரதொழில் முயற்சிகள்
- பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு
- கூட்டாட்சி

ஆர்வமுள்ள வாசகர்கள், இவ்வேட்டின் பிரதிகளை தலைமைக்காரியத்திலுள்ள எமது வெளியீட்டு விற்பனை நிலையம், முன்னணிப் புத்தகசாலைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகள் என்பவற்றில் கொள்வனவு செய்ய முடியும். ஏற்கனவே வெளிவந்த சில இதழ்கள் கூட விற்பனைக்குண்டு.

சந்தா விபரம்

உள்ளூர்-**12** இதழ்கள் ரூபா **540/-**

வெளிநாடு **12** இதழ்கள் அமெரிக்க டொலர் 50

உங்கள் சந்தாவை காசோலையாகவோ அல்லது காசுக் கட்டளையாகவோ அனுப்ப முடியும். வேண்டுகோள் கடிதமொன்றையும் அதனுடன் இணைத்து அனுப்புங்கள். எமது தலைமை அலுவலகத்தில் உள்ள விற்பனை நிலையத்தில் பணமாகவும் செலுத்த முடியும்.

காசோலைகள்/ காசுக்கட்டளைகளில்
மக்கள் வங்கி - பொருளியல் நோக்கு எனக் குறிப்பிட்டு
கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சி திணைக்களம்,
மக்கள் வங்கி, தலைமை அலுவலகம்,
சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை, கொழும்பு 02,

தொலைபேசி 011-2481429, 011-2436940
தொலை நகல் 011-2543864
மின்னஞ்சல்:ersales@peoplesbank.lk

பொருளியல் நோக்கு
மக்கள் வங்கியின் ஒரு சமூகப்பணித்திட்டமாகும்

இது மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்கள வெளியீடாகும். **பொருளியல் நோக்கு** எனக் குறிப்பிட்டு, இவ்வேட்டின் உள்ளடக்கத்தை மேற்கோள் காட்டவோ அல்லது மீள்பிரசுரிக்கவோ முடியும். **இதழ் இல:**0259/9779

பிரதி ஒன்றின் விலை: ரூபா 45/-